301

Travel

301/L-5

# என் பிரயாண நினைவுகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 951
MADRAS

சோம. லெ. இலக்குமணச் செட்டியார்.

பாரி நிலையம்
பிராட்வே, சென்னை.

N50
108090

# என் பிரயாண நினைவுகள்

ஆசிரியர்:

சோம. லெ. இலக்குமணச் செட்டியார்

பாரி நிலையம்
சென்னை
59, பிராட்வே

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1.

முதற்பதிப்பு: நவம்பர் 1950.
உரிமை ஆசிரியருக்கு.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 108090
MADRAS-600 008
U8-1
N50

விலை ரூ. 1 - 8 - 0

கே. ஜி. பிரஸ், சென்னை-1.

# முன்னுரை

இங்கே நூலுருவில் தரப்படும் எட்டுக் கட்டுரைகளும் எனது வெளிநாட்டுச் செலவைப்பற்றி யான் அவ்வப்போது மாதஇதழ்கள் பலவற்றிற்கு வழங்கியவையாகும். அவற்றைத் திரட்டி வெளியிட வேண்டுமென்று **பாரி நிலையத்தார்** விரும்பினர். பல இதழ்களில் பிரசுரமான கட்டுரைகளை ஒருங்கே படிக்கும் வாய்ப்பு அன்பர்களுக்கு இம்முயற்சியால் ஏற்படுவதால், யானும் அவர்கள் விருப்பிற்கு இசைந்தேன்.

பாட புத்தகமாக்குவதற்குத் தக்கபடி, மிகப் பல திருத்தங்களுடனும் புதிய குறிப்புக்களுடனும் இந்நூல் அமைந்திருப்பதால், இது புதிய நூலாகவே கொள்ளத் தகும்.

வரலாற்று அறிவும் நிலநூல் அறிவும் மட்டும் இன்றைய சமூக அமைப்பிற்குப் போதியவையாகா. பிறநாட்டு மக்களின் வாழ்க்கை நெறிமுறைகள், அவர்கள் அன்றாட வாழ்வில் விரும்புவன வெறுப்பன, பல நாடுகளின் தனிப்போக்குகளின் நுட்பங்கள் இவை போன்ற செய்திகளை நாம் அறிதல் நமது வாழ்க்கையின் போக்கிற்கு உறுதுணையாகும். நல்ல பண்பாடுகளைப் பின்பற்றவும், நாட்டுப்பற்றை நம்மிடையே வளர்க்கவும் பொதுவாகத் தமிழ் மக்களுக்கும் சிறப்பாக மாணவருக்கும் இந்நூல் உதவுவதாகுக.

நெற்குப்பை இங்ஙனம்,
*1—12—1950* **சோம. லெ. இலக்குமணச் செட்டியார்.**

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பாரிஸ் ... ... ... | 1 |
| 2. | பாழடைந்த ஜெர்மனி ... | 10 |
| 3. | செக்கோசுலவகியா ... | 25 |
| 4. | சுவிட்சர்லந்து ... ... | 38 |
| 5. | பிரிட்டிஷ் பெண்கள் ... | 58 |
| 6. | பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள் ... | 70 |
| 7. | யான் கண்ட பொருட்காட்சிகள் | 77 |
| 8. | மலேயா ... ... ... | 89 |

# என் பிரயாண நினைவுகள்

## 1. பாரிஸ்

உலகத்தில் பார்த்து இன்புறத்தக்க நகரங்களுள் தலைமையானதும், கேளிக்கை வாழ்விற்குப் பெயர்பெற்றதும், பழமையும் பெருமையும் வாய்ந்ததுமான நகரம், பாரிஸ். இத்தகைய பாரிஸ் பிரான்சின் தலைநகராகவும், ஐக்கிய நாடுகள் சபையின் பல கிளைகளுக்கு இருப்பிடமாகவும் விளங்கிவருகிறது.

### நகரின் அழகு

இயற்கையும் செயற்கையும் சேர்ந்து பல நகரங்களை அழகுபடுத்தி இருக்கின்றன. இவற்றுள், என் மனத்தைக் கவர்ந்த நகரங்கள் ஸ்டாக்ஹோம், ஜினீவா, சான்பிரான்சிஸ்கோ, சிட்னி, பாரிஸ் ஆகியவை. இந்நகரங்களுள் மிகத் தொன்மையான நாகரிகம் உடையது பாரிசேயாகும். உடை வகைகளில் புதிய தோற்றங்களைத் தரும் நகரம் பாரிஸ் தான். "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற இலட்சியங்களை உலகுக்குத் தந்ததும் இந்த நகரமே. நெப்போலியன் போன்ற வீரர்களும், விக்டர் ஹ்யூகோ, மாப்போசான், எமிலிசோலோ போன்ற இலக்கிய மேதைகளும் வாழ்ந்த நகரம் பாரிஸ். ஓரிடத்திலேயே எட்டு வீதிகளும், அதற்கு மேற்பட்டவையுங்கூடச் சந்திக்கும் சிறப்புடையது

பாரிஸ் நகரம் ஒன்றுமட்டுமே. அந்நகரெங்கும் சோலைகள், சாலைகள், செடிகள், கொடிகள், பச்சைப் பயிர்கள், நீர்நிலைகள், இன்ன பிறகாட்சிகளைக் காணலாம். கற்பனையும் கலைத்திறனும் இணைந்த பாரிசையும், அதற்கு அணித்தாயுள்ள வெர்சே(Versailles)யையும் பார்க்குந் தோறும் இயற்கை இன்பவாழ்வு உள்ளத்தில் தோற்றி நிற்கும்.

## கலைச் சிறப்பு

வரலாற்றில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் பாரிஸ் நகரில் ஓவியங்களாக வரையப்பெற்றுள்ளன; சித்திரங்களாகவுஞ் செதுக்கப்பட்டுள்ளன. பாரிசின் கலைச்செல்வம் கணக்கிலடங்காதது; எண்ணற்ற கலைக் காட்சிச்சாலைகள் அங்கே பிரெஞ்சு அரசியலாரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் முதன்மையானது லூவர் அரண்மனையில் உள்ளது. வேறுபட்ட பல நுண்கலைகளில் பிரெஞ்சு மக்களுக்குள்ள ஆர்வத்துக்கு இக்காட்சி ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது எனலாம். ஓவியம், சிற்பம் போன்ற கலைகளில் ஒரு காலத்தில் பிரெஞ்சு மக்கள் முன்னணியில்இருந்தவர்என்பது இவற்றைக் கண்டோருக்குத் தெள்ளிதின் புலனாகும். பிரெஞ்சு மன்னர்கள் காலத்துச் சின்னங்களும், 'அழியாச் சுடர்' (Eternal Flame) என்ற வெற்றி மண்டபமும், நெப்போலியன் சமாதியும், பிற கட்டிடங்களும் பாரிசுக்குச் சிறப்புத் தருகின்றன. சுருங்கச் சொன்னால், பாரிசின் கலையுலகில் எல்லாம் அழகு, எங்கும் அழகு என்றே சொல்லலாம்.

## ஐபில் கோபுரம்

பாரிசில் மிக முக்கியமான காட்சி ஐபில் கோபுரம் என்பது. இஃது முழுவதும் இரும்பால் அமைக்கப்பெற்ற ஒரு கோபுரம்; இதன் உயரம் 984 அடி. சில ஆண்டுகளுக்கு முன்வரை, இதுவே உலகில் உயரமான கட்டிடமாக இருந்தது. இக் கோபுரத்தின் உச்சியில் ஏறிப் பார்த்தால், பாரிஸ் நகரமுழுவதும் மிக நன்ருகத் தெரியும். இதைக் கட்டி முடித்தவர் ஐபில் என்ற பிரெஞ்சுப் பொறியியல் வல்லார்; இவரே அமெரிக்காவிலுள்ள சுதந்திரச் சிலையையும் நிறுவியவர்.

## பிற காட்சிகள்

ஐபில் கோபுரத்துக்கு எதிரே **பலே டி சாலியோ** என்ற கவின் மிக்க அரண்மனை இருக்கிறது. இம் மாளிகையில் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகங் கள் உள்ளன; இந்தச் சபையில் இடம்பெற்றுள்ள எல்லா நாடுகளின் கொடிகளும், பலே டி சாலியோ வின் முற்றத்தில் உயர்த்தப்பட்டிருப்பது, கண் கொள்ளாக் காட்சியாகவே இருக்கிறது.

பாரிசின் முக்கியமான சாலை **சாம்ப்-சீ-எலிசிஸ்** என்பது. இதன் நீளம் ஒன்றேகால் மைல்; இந்தச் சாலையில் ஒரே சமயத்தில் பத்து வரிசைகளில் சேர்ந்தாற்போலக் கார்கள் செல்ல இயலுமெனின், இதன் அகலத்தை நீங்களே எண்ணிப் பாருங்கள். இங்குச் செல்லும் வாகனங்களின் ஓசையும் மக்க ளின் ஆரவாரமும் கடலின் பேரிரைச்சலைப்

போலிருந்தன. 'சாம்ப் சீ எலீசிஸ்' புதிய பாரிசையும் பழைய பாரிசையும் இணைக்கிறது; இந்தச் சாலையின் இருபுறங்களிலும் அழகிய பூங்காக்களும், நாளைய நாகரிகத்தை உருவாக்கும் வணிகரின் கடைகளும் மலிந்து கிடக்கின்றன.

பாரிசில் 80 குவாட்டர்கள் உள்ளன. குவாட்டர் என்பதற்கு, நிருவாக வசதிக்காகப் போலீசார் நகரைப் பிரித்திருக்கும் பகுதி என்பது பொருள். இவற்றுள் சிறப்பானது லத்தீன் குவாட்டர் என்பது. ரோமர்கள் பிரான்சை ஆண்டபோது, பாரிஸ் நகரம் இருந்த அதே நிலையில், சில கட்டிடங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன; அவை சிறிதும் சிதையாமல் இருக்கின்றன; அவையுள்ள பகுதிதான் லத்தீன் குவாட்டர்.

## உலகிலேயே அழகிய கட்டிடம்

பாரிசிலிருந்து பத்து மைல் தொலைவில் வெர்சே என்ற ஊர் இருக்கிறது; வெர்சேயில் சிறந்ததோர் அரண்மனை யிருக்கிறது. சென்னை இராச்சியக் கவர்னர் சென்னையிலிருந்து 10 மைலிலுள்ள கிண்டியில் கவர்மெண்டு ஹவுசில் வசிப்பதுபோலப் பிரெஞ்சு மன்னர்கள் வெர்சே அரண்மனையில் வசித்து வந்தனர். வெர்சே அரண்மனையில்தான் பிரெஞ்சுப்புரட்சி தொடங்கியது; அங்கேயே 1919-ஆம் ஆண்டில் சமாதான உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. ஆகையால், அந்த மாளிகை உலக வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது. வெர்சே அரண்மனை தனி மாண்புடையது; நுண்ணிய சிற்ப

வேலைப்பாடுகளுடன் கூடியது. 14-ஆம் லூயிமன்னர் பயன்படுத்திய போர்க்கருவிகளும் நாணயங்களும் மற்றப் பொருள்களும் இக்கட்டிடத்தில் காட்சியாக வைக்கப்பெற்றுள்ளன. இதன் முற்றத்தில் மட்டும் பதினாயிரத்துக்கு மேற்பட்ட கார்களை நிறுத்த இடம் உண்டு. அரண்மனையின் தோட்டமும் மிகப் பெரியது; அதன் அழகைப் புலவரே வருணிக்க வல்லவர். வெர்சேக் காட்சிகளுக்கு ஈடு இல்லை; அந்த அரண் மனையைக் காட்டிலும் அழகான ஒரு கட்டிடத்தை, எனது நாற்பதினாயிரம் மைல் உலகப் பிரயாணத் தில், நான் வேறெங்கும் காணவில்லை.

## கதம்பம்

**பாரிசில் இருப்பவை:** உலகிற் பெரிய தியேட் டர், 75 நாடகக் குழுக்கள், புகழ்பெற்ற கிறிஸ்தவ ஆலயங்கள்.

**பாரிசில் இல்லாதவை:** தூசி, பிச்சைக்காரர் கள், மிகுதியான பனி, உறுதியான நாணயம், பலமான அரசியலார், சுகாதாரம்.

**பிரெஞ்சுக்காரர்களுக்கு மிக விருப்பமானவை:** புதிய ஆபரணங்கள், பற்பல நிற ஆடைகள், மிகுதி யான விடுமுறை நாட்கள், ஆடம்பரப் பொருள்கள், பிற நாட்டார், பாலுக்குப் பதிலாக எலுமிச்சம் பழச் சாற்றைச் சேர்த்த காப்பி அல்லது தேயிலை.

**பிரெஞ்சுக்காரர்களின் பொழுதுபோக்குகள்:** உலகத்துக்குப் புதிய நடையுடைபாவனைகள் அளித்

தல், நீந்துதல், சூதாடுதல், உலகப் புகழ்பெற்றவர் களை நேரில் கண்டு களித்தல்.

**பிரெஞ்சுக்காரர்கள் மற்ற நாட்டினரைவிடச் சிறப்பாகச் செய்யும் தொழில்கள்:** நாடகங்களில் நடிப்பது, தலைமுடி வெட்டுவது, சமையல் செய்வது.

## உணவு

மேனாட்டார் அனைவருமே, உணவை ஆர அமர உட்கொள்ளுவர்; பலவகையான உணவு வகைகளைப் பிரெஞ்சு மக்கள் விருந்துகளில் படைப்பதால், ஐரோப்பாவின் மற்ற நாட்டினரைவிட அவர்கள் மிகுதியான நேரம் உண்பர்; தொடக்கத்தில் என்ன உணவு உண்டோம் என்பதை அந்த வேளை உணவின் இறுதியிலேயே மறந்துவிடுவதும் உண்டு! அமெரிக்கத் தலைவராயிருந்த காலஞ்சென்ற ரூஸ் வெல்டின் மனைவி திருமதி எலியனுர் ரூஸ்வெல்ட்டுக்குப் பாரிசில் அளிக்கப்பட்ட ஒரு விருந்து இரண்டு மணிநேரம் நிகழ்ந்ததாம். அந்த விருந்துக்குப்பின் ஒருமுறை அமெரிக்க மக்களுக்கு வானொலியிற் பேசிய போது, பிரெஞ்சுக்காரரின் அவிழ்ச்சுவையைப் பாராட்டி, அமெரிக்கரும் பிரெஞ்சுக்காரரைப்போலப் பொறுமையாயும் நன்றாகவும் உண்ணவேண்டுமென்று அவ்வம்மையார் கூறினாராம். இந்த வானொலிப் பேச்சுக்கு மறுநாள் பிரெஞ்சு உள்நாட்டு அமைச்சர் பின்வரும் கட்டளையை மறைமுகமாக அனுப்பினாராம்:—

"இனிமேல், திருமதி எலியனுர் ரூஸ்வெல்ட் கலந்துகொள்ளும் விருந்துகளில் குறைந்த வகைகளை விரைவாகப் படைக்க வேண்டும்."

## மொழி

புதுவகை உணவுகளைப் பிரெஞ்சுக்காரர் சிறப்பாகச் செய்வதால், மற்ற நாடுகளிலும் அவைகளுக்கு நல்ல பெயர் உண்டு; பிரெஞ்சு வழங்காத நாடுகளிலுங்கூட உணவுப் பட்டியல் (**Menu Card**) பிரெஞ்சு மொழியிலேயே அச்சிடப்படுவது இதற்குச் சான்றாகும்.

பிரெஞ்சு ஒரு சிறந்தமொழி. பிரான்சை மட்டுமன்று, ஏனைய ஐரோப்பிய நாடுகளையும் நன்ருக அறியப் பிரெஞ்சு மொழியறிவு இன்றியமையாதது. கனடாவில், அரசியல் மொழிகளுள் ஒன்ருகப் பிரெஞ்சு வழங்கிவருகிறது. வட ஆப்பிரிக்காவின் சில பகுதிகளிலும் இம்மொழி பரவியுள்ளது. தத்துவ சாத்திரம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஆதாரமான நூல்கள் இந்த மொழியில் இருக்கின்றன. எனவே, தமிழ்இளைஞர் பலர் இம்மொழியைக் கற்றுப் பயனடையலாம். வெளி நாடுகளில் நமது தூதர்களின் அலுவலகங்களில் பொறுப்பான வேலைகளில் ஈடுபடவும் பிரெஞ்சு மொழியறிவு உதவியாயிருக்கும்.

## தொழில் வளர்ச்சியும் விஞ்ஞானமும்

மோட்டார்கார்கள் உற்பத்தி செய்வதிலும், கப்பல்கள் கட்டுவதிலும் பிரான்சு பெருமுன்னேற்றம் அடைந்துள்ளது. பட்டுத்துணிபோன்ற பொருள்கள் தயாரிப்பதிலும் அந்த நாடு சிறந்துவிளங்குகிறது. மற்றப் பொருள்களுடன்,மது, வாசனைத்திரவியங்கள் ஆகியவற்றையும் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று

பிரெஞ்சு அரசியலார் சொல்லுவதால்தான், பிரெஞ்சுப் பொருள்கள் நம் நாட்டில் மிகுதியாக இறக்குமதியாவதில்லை.

இரசாயனம், பௌதிகம் போன்ற விஞ்ஞானத் துறைகளில் பிரெஞ்சுக்காரர்கள் புதிய ஆராய்ச்சிகள் செய்திருக்கின்றனர்; ஆர்க்டிக் பகுதிக்குப் பிரெஞ்சு விஞ்ஞானிகள் சிலர் சில ஆண்டுகளுக்கு முன் சென்றனர். 1948-ல் பிரான்சில் நடைபெற்ற விஞ்ஞான மாநாட்டுக்கு நம் நாட்டிலிருந்து பேரறிஞர் சர். சி. வி. ராமன் சென்றிருந்தார். அப்போது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை, "ராமன் விளைவு (**Raman Effect**) என்பது மதுவை எப்படி மாற்றுகிறது என்பதை அறிந்த பிரெஞ்சு விஞ்ஞானிகள் மதுவானது ராமனை எப்படி மாற்றுகிறது என்பதையும் அறிய முயன்றனர்." என்று அவர் நகைச்சுவை தோன்றக் கூறியுள்ளார்.

## கீரியும் பாம்பும்

ஜெர்மானியரும் பிரெஞ்சுக்காரரும் கீரியும் பாம்பும் போன்றவர்கள். பல நூற்றாண்டுகளாக இவ்விரு நாட்டினருக்கும் இடையே ஏற்பட்ட பகை உணர்ச்சியால்தான் இரு பெரும்போர்கள் உலகில் ஏற்பட்டன. ஜெர்மானியன் தனியாயிருந்தால் விஞ்ஞானத்தில் விருப்பமுடையவனாயிருப்பான் என்றும், இன்னொரு ஜெர்மானியனைச் சந்தித்தால் இருவருமாகச் சதி செய்வார்கள் என்றும், மூன்று ஜெர்மானியர் சேர்ந்தால் பிறர்மீது போர் தொடுத்துவிடுவர் என்றும் பிரெஞ்சுக்காரர் சொல்லுவது வழக்கம்.

பிரெஞ்சுக்காரர் தனிமையாயிருக்கும்போது காதல் நினைவாயிருப்பரென்றும், இருவர் சேர்ந்தால் ஓர் அரசியல் கட்சி அமைப்பரென்றும், மூவர் சேர்ந்தால் ஒரு மந்திரிசபையையே மாற்றிவிடுவரென்றும் ஜெர்மானியர் பிரெஞ்சுக்காரரைப்பற்றிக் கேலியாகச் சொல்லுவர்.

## பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும்

பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் குறுக்கே 25 மைல் அகலமுள்ள ஒரு கால்வாய்தான் இருக்கிறது; எனினும் இக்கால்வாயின் இரு கரைகளிலுமுள்ள மக்களுக்குள் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. பிரிட்டிஷார் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள்; பிரெஞ்சுக்காரர் இதற்கு நேர்மாறான இயல்பினர். பிரிட்டிஷார் நிருவாகத் திறமைக்குப் புகழ்பெற்றவர்கள்; பிரெஞ்சுக்காரர் ஊழல் மலிந்தவர்கள். பிரிட்டனில், கூலியையோ கட்டணத்தையோ முன்கூட்டி முடிவு செய்யாமல் எந்த வேலையிலும் ஈடுபடலாம்; பிரான்சில் இப்படிச் செய்தால் ஆபத்துத்தான்.

---

# 2. பாழடைந்த ஜெர்மனி

**காலம்:** 1948 செப்டம்பர் 14-ஆம் தேதி. காலை 9-மணி.

**இடம்:** ஜெர்மனியில் ஹாம்பர்க் நகரில் ஸ்டெயின்போர்வால் சாலையில் ஒரு நாற்சந்தி.

யான் தங்கியிருந்த இராணுவ ஹோட்டலிலிருந்து, வியாபார நண்பர் ஒருவரைக் கண்டு பேசச் செல்லும் வழியில், ஒரு சுவரின் அருகே ஏராளமான மக்கள் கூடியிருப்பதைக் கண்டு வியப்புற்று அங்கு நின்ற ஆங்கிலம் தெரிந்த ஒரு ஜெர்மானியரை என்ன வென்று வினவினேன். இரண்டாவது உலகப் போரினால், ஜெர்மன் மக்கள் தினசரிப் பத்திரிகையை விலைக்கு வாங்கும் நிலையில் இல்லை யென்றும், அதனால் 20 பிரதிகளை ஊருக்குப் பொதுவில் வாங்கி, ஒவ்வொரு முக்கிய சந்திப்பிலும் இரண்டு பிரதிகளை முன்பக்கமும் பின்பக்கமுமாகச் சுவரில் ஒட்டிவிடுவதாகவும், அவற்றைப் படித்துத்தான் அம் மக்கள் செய்திகளை அறிந்துகொள்வதாகவும் அவர் சொன்னார். பத்திரிகை படிப்பதில் இவ்வித முறையை யான் இதற்குமுன் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை; நாவல்களில்கூடப் படித்ததுமில்லை.

## போக்குவரத்துத் தடை

மழைவிட்டாலும் துவ்வானம் விடவில்லை என்பது போல, போர் முடிந்து இப்போது நான்கு ஆண்டு

கள் ஆகியும் சமாதான உடன்பாடு ஏற்படாமையால் ஜெர்மனியில் இன்னும் இராணுவ ஆட்சியே நடைபெறுகிறது.* இதன்பயனாக, யாத்ரீகர் ஜெர்மனிக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. ஜெர்மனியின் பொருளாதாரத்தைச் செப்பனிடவும் ஏற்றுமதியை அதிகரிக்கவும் வணிகர்மட்டும் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் இத்தனைபேர் என்ற வரம்புவரை முன் அனுமதி பெற்று ஜெர்மனிக்குச் செல்லலாம். மாத்திரைகள், பன்ரொட்டி, தேயிலை ஆகியவற்றையே முக்கிய உணவாகக்கொண்டு இயந்திரம் போல் நாள்தோறும் 16 மணிநேரம் வேலைபார்க்கும் லண்டனிலுள்ள இந்திய ஹை கமிசனராகிய மேன்மை தங்கிய **வி. கே. கிருஷ்ணமேனன்** அவர்களின் சிபார்சின்பேரில் பிரிட்டிஷ் இராணுவ ஆட்சியினர் ஜெர்மனிக்குச் செல்ல மேற்கூறிய திட்டத்தின் கீழ் எனக்குக் களிகூர்ந்து அனுமதி அளித்தனர். அதன் பயனாய்ப் பிரிட்டிஷ் -அமெரிக்கப் பகுதிகளில் ஒருவாரம் சுற்றுப்பிரயாணம் செய்தேன்.

சுவீடனின் தலைநகரமாகிய ஸ்டாக்ஹோமிலிருந்து, ஸ்கான்டினேவிய ஏர்வேஸ் கம்பெனியின் விமானம் ஒன்றில் புறப்பட்டு, ஹாம்பர்க் விமான நிலையத்தில் நான் போய் இறங்கினேன். என்னிடமிருந்த நாணயங்களைச் சோதித்தபின், ஜெர்மனியில் செய்யப்பட்டதும், மற்ற விலையுயர்ந்த பொருள்களும் என்னிடம் என்னென்ன இருந்தன என்பதை என் பாஸ்போர்ட்டிலேயே குறித்துவிட்டுச் சுங்க அதிகாரி எனக்கு விடை தந்தார்.

* இக்கட்டுரை 1949-ல் எழுதப்பட்டது.

## அழிவுற்ற ஹாம்பர்க்

விமான நிலையத்திலேயே ஜெர்மனியின் சிதைந்த காட்சி தென்பட்டது. உடைந்துபோன விமானங்கள், உருக்குலைந்த பகுதிகள் எல்லாம் தோற்றமளித்தன. ஹாம்பர்க்கில் என்னுடன் இறங்கியவர் இன்னும் ஒருவரே. நாங்கள் இருவரும் இராணுவ ஆட்சியினரின் யாத்ரீகர் காரியாலயத்துக்குச் சென்றோம். போரினால் ஏற்பட்ட சேதம் அவ்வழி நெடுகப் புலனாயிற்று. அக்காரியாலயத்தின் எதிரில் மிகவும் அழகிய செயற்கை ஏரி ஒன்று இருக்கிறது. அது என் மனத்தைக் கவர்ந்தது. உணவுப் பங்கீட்டுச் சீட்டைவாங்கிக்கொண்டு, இராணுவ ஹோட்டலுக்குச் சென்றேன். நான் சென்ற சாலைகளின் இருமருங்கிலும் இருந்த காட்சிகள் காணச் சகியாதவை. ஒளியிழந்த கட்டிடங்கள் ஒருபுறம், தாயினை இழந்த சேய்கள் மற்றொருபுறம், கணவனை இழந்த காரிகையர் இன்னொருபுறம். இக்காட்சிகள் என்னுடைய உள்ளத்தை ஊடுருவிப் பாய்ந்தன. மூன்று மணி நேரத்துக்கு முன்னரோ செல்வம் பொழியும் சுவீடனில் இருந்தேன். அதற்குள் எத்தனை முரண்பாடுகள்!

## ஹாம்பர்க்கின் சிறப்பு

ஹாம்பர்க் 17 லட்சம் மக்களைத் தன்னகத்தே கொண்ட ஓர் அழகியநகரம்; எல்ப் ஆற்றின்கரையிலே எழில்பெற அமைந்தது; போருக்கு முந்திய ஜெர்மனியிலே சீருடனும் சிறப்புடனும் விளங்கிய துறைமுகம் இருந்ததால் உலகிலேயே மிகச் சிறந்ததாக ஹாம்பர்க் மிளிர்ந்தது. அங்கே நடந்த ஏற்றுமதி

இறக்குமதிகளின் அளவைக் கணக்கிட்டால் அதற்கு இணையான துறைமுகமில்லை என்று இயம்பலாம். இத்தகைய நகரிலே, குண்டுவீச்சால் எலும்புக் கூடாய்ப் போய்விட்ட கட்டிடங்களை நீக்கிவிட்டால் மீதி இருப்பவை 3,000 கட்டிடங்களே. இவற்றிலும் 6, 7 மாடிகளுள்ளவை 25-க்கும் குறைவு. இவையாவும் இராணுவத்தார் வசம் இருக்கின்றன.

## ரீச் ஹோட்டல்

நான் ரீச் ஹோட்டலில் தங்கினேன்; இது இராணுவத்தார் வசமுள்ள ஆறடுக்கு மாளிகை ஒன்றில் அமைந்திருக்கிறது. இக்கட்டிடத்திற்கு எதிரில் பான்ஹாப் இருக்கிறது. ஜெர்மன் மொழியில் 'பான்ஹாப்' என்றால் ரயில்வே ஸ்டேசன் என்று பொருள். ரீச் ஹோட்டலில் நூற்றுக் கணக்கான அறைகளும், தானே இயங்கும் லிப்ட்களும், இரும்பு போன்ற உறுதியான ஒருவகை மரத்தால் செய்யப் பட்ட இரட்டைக் கதவுகளும், ஐரோப்பிய ஹோட்டல் களிலுள்ள எல்லா வசதிகளும் உண்டு. இராணுவத் தாரும் அவர்கள் அனுமதிபெற்ற என் போன்ற தற்கால விருந்தினருமே இங்கே தங்கலாம்.

## சிறந்த வழக்கம்

சுவீடனிலிருந்த ஒரு சிறந்த வழக்கம் ஜெர் மனியிலும் இருப்பதைக் கண்டேன். சாலைகள் சந்திக்குமிடங்களில் ஒவ்வொரு சாலையிலும் அந்தச் சந்திப்பிலிருந்து எந்த எந்தத் திக்குகளில், எந்த எண் முதல் எந்த எண் வரையுள்ள கட்டிடங்கள்

இருக்கின்றன என்ற விளக்கமானது, சாலையின் பெயரைத் தெரிவிக்கும் அறிவிப்புப் பலகையி லேயே கொடுக்கப்பட்டிருந்தது. மேலும், சாலைகளில் ஒற்றைப்படை எண்ணுள்ள கட்டிடங்கள் ஒருபுறமும் இரட்டைப்படை எண்ணுள்ள கட்டிடங்கள் எதிர் வரிசையிலும் இருந்தன.

## நாணயமாற்று

ஜெர்மானியருக்கு நேச நாட்டார் 'மார்க்' என்ற நாணயத்தைக் கொடுத்திருக்கின்றனர். யாத்ரீகர் களுக்கு அந்த நாணயம் கிடைக்காது. எவ்வித-மாவது கிடைத்தாலும் அவர்கள் அதை உபயோகிப் பது சட்டவிரோதமான செயல். எனவே, இராணுவத் தார் பயன்படுத்தும் நாணயத்தையே யானும் உப யோகித்தேன். லண்டனிலுள்ள பிரிட்டிஷ் வெளி நாட்டிலாகாவில், 40 பவுன் செலுத்தி ஒரு பத்திரம் வாங்கிக்கொண்டேன். ஜெர்மனியிலுள்ள இராணு வக் காரியாலயங்களில் அந்தப் பத்திரத்தைக்காட்டி, வேண்டும்போது வேண்டிய தொகையை இராணுவ நாணயமாக வாங்கிக்கொண்டேன். ஜெர்மன் கடைகளில் நான் பொருள்கள் வாங்குவதும் சட்ட விரோதமாயிருந்ததால், எனக்குத் தேவைப்படும் பொருள்களை இராணுவ அதிகாரிகளிடம் கேட்டே வாங்கிக்கொண்டேன். தபால், தந்தி அனுப்புவதும் இவர்கள் வாயிலாகத்தான் நடைபெற்றது.

## சிகரெட் பஞ்சம்

தினசரி 15 சிகரெட் வாங்கிக்கொள்ள ஓர் அனுமதிச் சீட்டு, உணவுப் பங்கீட்டுச் சீட்டுடன்

நான் கேட்காமலேயே எனக்குக் கிடைத்தது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் கொடிய சிகரெட் பஞ்சம் இருக்க, இராணுவத்தாரின் தாராளம் எனக்கு ஒரு புதிராயிருந்தது. மறுநாள் விசாரித்ததில், ஜெர்மனியிலும் சிகரெட் பஞ்சம் மிகுதி என்றும், ஜெர்மானியருள் ஆணுக்கு 30 சிகரெட்டும் பெண்ணுக்கு 20 சிகரெட்டும் மாதப் பங்கீடு என்றும், மிகக் குளிரான நாடாகிய ஜெர்மனியில் சிகரெட்டைக் கொடுத்து எந்தக் காரியத்தையும் சாதித்துக்கொள்ளலாம் என்றும், இராணுவத்தாருக்கு இவ்வசதி கிடைக்கட்டும் என்பதே மிகுதியாகச் சிகரெட் தருவதன் நோக்கம் என்றும் அறிந்தேன். சிகரெட்டைப் பயன்படுத்தாமல் வைத்திருந்தால் எவ்வளவு நன்மை ஏற்படும் என்பதும் இரண்டு நாட்களில் எனக்குத் தெரிந்தது.

## ஆட்சியினரின் மாட்சி

ஜெர்மன் மக்கள் உணவுப்பஞ்சத்தால் வாடும் போது, எங்களுக்கு இராணுவ ஹோட்டலில் உணவு மலைபோலக் குவிந்திருந்தது. பலவகையான உணவு நேரந்தவறாது கிடைத்தது. சாதாரணமாக, ஐரோப்பிய ஹோட்டல்களில் தினசரி 2 பவுனு (27 ரூபாய்)க்குக் கிடைக்கும் வசதிகள் அங்கே 16 சில்லிங்கு (11 ரூபாய்)க்குக் கிடைத்தன. ஹோட்டல் செலவின் ஒரு பகுதியை இராணுவ ஆட்சியினர் ஏற்றுக் கொள்ளுவதே இதற்குக் காரணம்.

ஹோட்டல் வேலையாட்கள் அனைவரும் ஜெர் மானியர். செழிப்பில்லாத முகங்களும் கந்தை

உடையுமுடைய பரிசாரகர்களைச் சந்திக்கும் துர்ப் பாக்கியம் ஜெர்மனியில்தான் கிட்டியது. மேலை நாடுகளில் பரிசாரகர்களுக்குச் சிற்றுண்டியின் போது 4 அணவும், பேருண்டி ஒவ்வொன்றின் போதும் 8 அணவும் பக்ஷீஸ் கொடுப்பது வழக்கம். ஜெர்மன் தொழிலாளிக்குப் பயன்படும் நாணயம் என்னிடம் இல்லை. என்னிடமுள்ள இராணுவ நாணயமோ அவனுக்கு உதவாக்கரை. என்ன செய்வது? செல்லும் செல்லாததற்குத்தான் சிகரெட் இருக்கிறதே செட்டியாருக்கு!

## விருப்பும் வெறுப்பும்

ஜெர்மானியர் மிகவும் சுறுசுறுப்பானவர்; தம் வேலையிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவர்; நகைச்சுவை அற்றவர்; ஆடல் பாடல் முதலியவற்றில் நாட்ட மில்லாதவர்; விஞ்ஞானத்தில் பேரார்வமுள்ளவர்.

## விஞ்ஞானத் திறன்

சமீப காலத்தில், அமெரிக்கர் விஞ்ஞானத் துறையில் வியத்தகு முன்னேற்றம் அடைந்துள்ள போதிலும், அவர்களுடைய செல்வம், கனிப்பொருள்கள், மக்கள் தொகை ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஜெர்மானியரின் முன்னேற்றத்தையே பாராட்டவேண்டும். மேலும், அமெரிக்கரின் விஞ்ஞானம் ஜெர்மானியரின் ஆராய்ச்சி அடிப்படையின் மேல் கட்டப்பட்ட பெரிய கோபுரந்தான்.

## போக்குவரத்தின் புதுமை

வட ஜெர்மனியின் சில பகுதிகளுக்கு நான் செல்ல நேர்ந்தது. டாக்சிகார்தான் மலிவு என்று கேள்விப்பட்டதால், இராணுவ ஆட்சியினர் மூலம் ஒரு டாக்சிகாரை ஏற்பாடு செய்துகொண்டேன். மூன்று பவுன் பெற்றுக்கொண்டு, ஒருநாள்முழுவதும் எங்கே சென்றாலும், எவ்வளவு தொலை சுற்றினாலும் மேற்கொண்டுபணம்தரவேண்டியதில்லை என்று இராணுவ அதிகாரி ஒருவர் என்னிடம் தெரிவித்தார். அந்த வாகனத்தை இயக்கியவர் ஓரளவு ஆங்கிலம் தெரிந்த ஒரு ஜெர்மன் பெண். பெரும்பாலும் எல்லா ஜெர்மானியருக்குமே ஓரளவு ஆங்கிலம் தெரியும். தமிழ் மக்களைப்போல ஆங்கில மொழிஞானம் உடையவர்களை ஐரோப்பாவில் ஜெர்மனியிலும் சுவிட்சர்லந்திலுமே காணலாம். ஹிட்லருடைய ஆட்சியில் கூட ஆங்கிலம், ஜெர்மனியில், கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டதாம்.

## லூபக்

ஹாம்பர்க்கிலிருந்து 60 மைல் வடக்கேயுள்ள லூபக் நகருக்கு யான் சென்றேன். செல்லும் வழியில் நான் கண்ட ஊர்கள் கிராமங்களா அல்லது மயானங்களா என்று ஐயப்படும்படி இருந்தன. லூபக் ஒரு நல்ல துறைமுகம்; புராதனமான செங்கல் கட்டிடங்களும் சரித்திரப் பெருமையும் கொண்ட நகரம்; ஒரு வியாபார ஸ்தலம். போரால் இங்கும் சேதம் மிகுதி. எனவே, ஹாம்பர்க்கில் கண்ட கோரக் காட்சிகளையே மீண்டும் கண்டேன். இங்கே மேலும் நான் கண்டவை உடைந்த கிறிஸ்தவ ஆலயங்கள்,

போருக்கிரையாகிப் பொலிவற்ற கல்லூரிகள், வறுமை அடைந்தும் மனம் உடையாத மக்கள் என்பவை.

## சாலைகளின் அமைப்பு

ஜெர்மனியின் சாலைகள் உலக முழுவதும் புகழ் பெற்றவை. இவற்றுக்கு **ஆட்டோபான்** என்று பெயர். இவற்றை இப்போது இராணுவத்தார் மட்டுமே உபயோகிக்கின்றனர். ஜெர்மானியரின் உபயோகத்துக்காக மூன்ருந்தரச் சாலைகள் ஒதுக் கப்பட்டுள்ளன.

## நாட்டுப் பற்று

போதிய போக்குவரவு வசதியின்மையால், பல இடங்களில் வாகனங்களை எதிர்நோக்கிப் பலர் நாள் கணக்கில் காத்திருந்தனர். டிரைவர் என் அனுமதி பெற்று அவருள் ஓரிருவரைக் காரில் ஏற்றிக் கொண் டாள். பரிதாபமான காட்சி தந்த அவர்கள் முகங்கள், உடனே, அன்றலர்ந்த செந்தாமரைபோல் மாறின. அவர்கள் தங்கள் துயரங்களை என்னிடம் தெரிவித் ததும், என் மனவேதனை அதிகரித்தது. "ஹிட்லரால் தானே உங்களுக்கு இவ்வளவு துன்பம் ஏற்பட்டது?" என்று நான் அவர்களைக் கேட்டேன். ஒரு வாரம் முழுவதும் இந்தக் கேள்வியைப் பலரிடம் கேட்டேன். இரண்டொருவர் "ஆம்" என்றனர். "போர் ஏற்படு வதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆட்டோபான் களை அமைத்தபோது வேலையில்லாத் திண்டாட்டத் தைப்போக்கவே அவைகளை நிறுவுவதாக ஹிடலர் சொன்னார்" என்றனர், வேறு சிலர்.

வயதானவர்கள் அனைவரும் கூறிய பதில் இது தான்: "1919-ல் ஜெர்மனி படுகுழியில் ஆழ்த்தப்பட்டது. அதனல் நாங்கள் சொல்லொணுத் துயரங்களுக்கு ஆளானேம். உற்பத்தி குறைந்து, பொருளாதாரம் சீர்கெட்டு, ஜெர்மனி தன் சந்தைகளை இழந்து, வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டிருந்தபோது, அதை வாழ்விக்க வந்தவர் ஹிட்லர். போரில் வெற்றியடையாதது அவருடைய குற்றந் தான். ஆனல், ரஷ்யாவைமட்டும் நாங்கள் எதிர்த்துக்கொள்ளாதிருந்தால்......?"

"இந்தியாவில் இந்தக் கார் என்னவிலையாகும்?" என்று டிரைவர் என்னைக் கேட்டாள். "பத்தாயிரம் ரூபாய் ஆகும்" என்றேன். "550 ரூபாய்க்குத்தானே நான் வாங்கினேன் 1938-ல். ஹிட்லர் இல்லாவிட்டால் இந்த விலைக்கு எனக்கு எப்படிக் கிடைக்கும்? என் வாழ்நாள் என்ன ஆகியிருக்கும்?" என்று அவள் மறு கேள்வி கேட்டதும், நான் வாயடங்கிப்போனேன்.

## கில் நகரம்

இவ்வாறுக ஜெர்மனியின் வடகோடியிலுள்ள கீல் நகரை அடைந்தோம். இந்த நகரம், சுவீடனுக்கும் டென்மார்க்குக்கும் அண்மையிலிருப்பதால் போர்க்காலத்தில் கேந்திரமான இடமாக இருந்தது. இங்கேயுள்ள 62 மைல் நீளமான கால்வாயில்தான் கப்பல் கட்டும் தளம் இருக்கிறது. அணுக்குண்டின் அடிப்படை ஆராய்ச்சிகளை நடத்திய கீல் பல்கலைக்

கழகம் போரில் சிதைந்து போன ஒரு தொழிற் சாலையில் அப்போதுதான் வேலைதொடங்கியிருந்தது. உடைந்துபோன ஒரு கப்பல், மாணவரின் உணவு விடுதியாக உருமாறியிருந்தது. யாத்ரீகருக்கு உதவி செய்தும், பிச்சையெடுத்தும், ரயில்வே கை காட்டிகளை இயக்கியும் அந்த இளைஞர்கள் தம் உணவுப்பசியையும் அறிவுப்பசியையும் ஓரளவு தீர்த்துக்கொண்டனர்.

## தொழிற்சாலை

இலிலிருந்து வேறு ஒரு பாதைவாயிலாக, நாங்கள் ஹாம்பர்க்குக்குத் திரும்பி வந்தோம். பிரபலமான ரயில்வே தொழிற்சாலை ஒன்று இவ்வழி யில் இருந்ததாம். நேசநாடுகளின் தொண்டின் பயனாக, நான் அந்தத் தொழிற்சாலையைப் பார்க்க வில்லை; அது இருந்த இடத்தைத்தான் பார்த்தேன். பெருங்காயம் இருந்தபாத்திரத்தில் வாசனை இருக்கும் என்பர்; இந்த இடத்துக்கு அருகிலுள்ள ஒரு நகரில் 30க்கு மேற்பட்ட தண்டவாளங்கள் இருந்ததி லிருந்து சமாதானகாலத்தில் ஜெர்மனி எவ்வளவு செழிப்பாக இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்துகொண்டேன்.

## வட ஜெர்மனியின் வனப்பு

வட ஜெர்மனியின் அழகினைப் புலவரே வருணிக்க வல்லவர். அழகு, அமைதி, சாந்தி மலிந்த இப் பகுதியைக்கண்ட நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குப்பிறகு, பிரான்சு பெல்ஜியம் ஜெர்மனி ஆகியமூன்றுநாடுகளும் கூடுமிடத்தில் ரயின் ஆற்றின் கரையிலுள்ள எழில் மிக்க காட்சிகளைக் கண்டேன்.

வான்பொய்ப்பினும்தான் பொய்யா ரயின் ஆற்றின் ஓரத்தில் அமைந்த டசல்டார்ப் நகரைப் பார்த்த போதுதான் ஜெர்மனியின் சிறப்பைஉணருக்கவாவது சந்தர்ப்பம் கிடைத்தது.

## இணையற்ற துறைமுகம்

அன்று மொத்தம் 320 கிலோமீட்டர் (200 மைல்) பிரயாணம் செய்து, இறுதி அலுவலாக ஹாம்பர்க் துறைமுகத்தைப் பார்வையிட்டேன். 'கப்பல் கட்டும் தளங்களைக் கண்டு வியப்பதா? அவற்றைத் தூளாக்கிய கொடுமையைக்கண்டு குமுறுவதா?' என்ற மனப் போராட்டம் எனக்கு ஏற்பட்டது. இத் துறைமுகத்தில், எல்ப் ஆற்றின் அடியில் ஒருமைல் தொலைவிற்கு ஒரு பாலம் கட்டியிருக்கிறார்கள். இதன் வழியாகத் தான்காரில்துறைமுகத்துக்குள் சென்றேன். இந்தப் பாலத்தை நொறுக்கிவிட்டால் தம்மால் இதைப் புதுப்பிக்க இயலாதென்ற எண்ணத்தாலேயே நேச நாட்டார் இதன்மீது குண்டு வீசவில்லைபோலும்.

## கலோன் தேவாலயம்

டசல்டார்ப் நகரிலிருந்து பிராங்பர்ட்டுக்கு வரும் வழியில் கலோன் நகர் இருக்கிறது. அங்குள்ள கத்தோலிக்க தேவாலாயத்தைப் பற்றிக் கேள்விப்படாதார் இல்லை. அது 1248-ல் கட்டப்பட்டது. அதன் ஏழாவது நூற்றாண்டு விழாவை ஒட்டி, குண்டு வீச்சால் சேதப்பட்ட பகுதிகள் 1948ல் புதுப்பிக்கப் பட்டன. ஜெர்மானியரின் கலைத்திறனுக்கு அந்த ஆலயம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

அதிலுள்ள வண்ண வண்ணமான கண்ணாடிகள் நாம் என்றும் மறக்கமுடியாதவை. அதனுடைய கோபுரம் 515 அடி உயரமானது.

### விடிவில்லாக் குறை

உணவுப் பஞ்சமும் துணிப் பஞ்சமும் ஜெர்மனியின் பெரும் பிரச்சினைகளாக இருக்கின்றன. மின்சாரவசதியின்மையால் சமையல் செய்யச் சிரமப்படுவதும் சாதாரணக் காட்சியாகும். "பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும்" என்பதற்குச்சான்றாக, இவைபோதாவென்று வீட்டுக் கஷ்டமும் ஜெர்மன் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. குண்டுகளுக்குக் கட்டிடங்கள் இலக்கானதால், பல கோடிப்பேர் குடியிருக்கக் குச்சின்றித் தவிக்கின்றனர். ஜெர்மனியில் கண்ணாடிக் கதவுகளே மிகுதியாயிருந்தன. குண்டினால் அதிர்ச்சியேற்படும்போது, கண்ணாடிகள் தான் முதலில் நொறுங்குமாம். இவ்வாறு சேதமான இடங்களில், அட்டைகளை ஒட்டி வைத்திருப்பதால், வீடுகள் இருட்டாக இருக்கின்றன. கண்ணாடி உடைந்த சன்னல்கள், சன்னல்கள் அழிந்த வீடுகள், கதவு இல்லாத கட்டிடங்கள், மக்களில்லாத வீடுகள், வீடுகளில்லாத மக்கள், நடைப்பிணங்கள் இவற்றை ஜெர்மனி முழுவதும் காணலாம். ஓர் அறையிலேயே 20 பேர் வசிப்பதையும் அங்கே காணலாம்.

### சுடுகாடு

சுருங்கக்கூறின், ஜெர்மனி முழுவதுமே ஒரு சுடுகாடு எனலாம். உடைந்துபோன கட்டிடங்கள்

எண்ணில. அவற்றைக் கட்டிமுடிக்க 25 ஆண்டுகள் ஆகுமாம். ஆனால், உடைந்ததை அள்ளி முடித்தால் தானே கட்டும் வேலையைத் தொடங்கலாம்? போருக்கு முன்நிலவிய விலைவாசிப்படி, ஜெர்மனி முழுவதும் உடைந்ததை அள்ளமட்டும் 330 கோடி ரூபாய் செலவாகுமாம். மூன்று லட்சம் பேர்களும் 370 ரயில்களும், தினசரி வேலை செய்தால் இவ் வேலை பத்து ஆண்டுகளில் முடிவடையுமாம்.

## சில குறைபாடுகள்

போருக்கு முந்திய ஜெர்மனியில் இரு குறைகள் இருந்தன. ஒன்று பெண்களின் உரிமையைப் பற்றியது; மற்றொன்று யூதரைப் பற்றியது.

ஜெர்மனியில் எப்போதுமே பெண்களுக்கு உரிமை குறைவு. ஒரு குடும்பத்தினர் வெளியூருக்குச் செல்லும்போது ஆண் உறுப்பினர் மட்டும் மேல் வகுப்பிலும், பெண் உறுப்பினர் கீழ் வகுப்பி லும் ரயில்பிரயாணம் செய்வது அங்கே வழக்க மாம். இன்று, ஜெர்மானியர் மூன்றும் வகுப்பில் மட்டுமே பிரயாணம் செய்வதால், ஆண்களோடு பெண்களும் சமானமாகிவிட்டனர்.

யூதருக்கு எதிரான உணர்ச்சி ஜெர்மன் மக்க ளிடையே வேரூன்றியிருக்கிறது. இந்த இயக்கம் பாடசாலைகளில் தோன்றிற்றும். ஹிட்லர் ஆட்சி யின்போது ஆசிரியர்கள் பின்வருவதுபோன்ற கணக்குகளை மாணவருக்குப் போடுவார்களாம்:— "ஓர் யூத வியாபாரி ஒரு வீசை பாக்கு ரூ 4-11-0

விகிதம் வாங்கி ரூ 9-7-0 விகிதம் விற்றால், அவன் ஒவ்வொரு வீசைப் பாக்கிலும் ஜெர்மன் மக்களிட மிருந்து எவ்வளவு ரூபாய் கொள்ளையடித்தான்?''

## இந்தியாவும் ஜெர்மனியும்

ஜெர்மானியாருக்கு எப்போதுமே இந்தியா மீதும் இந்திய மக்கள் மீதும் நல்லெண்ணம் உண்டு. **நேத்தாஜி சுபாஷ் சந்திர போசை** நேரில்கண்டு அவர் நிகழ்த்திய வீரச் சொற்பொழிவுகளைக் கேட்டோர் ஜெர்மானியருள் பலர் உண்டு. மகாத்மா காந்தியடிகள் உயிர் நீத்த செய்தி கேட்டுத் துயர மடையாத ஜெர்மானியரே இல்லை என்றும் அறிந்தேன். இவ்விரு நாடுகளின் பொருள்களும் ஒன்றுக்கொன்று போட்டி யானவையல்ல; எனவே வியாபாரத் துறையில் இருநாடுகளும் நல்லுறவை வளர்க்க வேண்டுமென்று ஜெர்மானியர் விரும்பு கின்றனர்.

## முடிவு

வெற்றிவீரர்களால், ஜெர்மனி சின்னபின்ன மாக்கப்பட்டது. ஜெர்மானியர், இயம்பவொண்ணு வறுமையில் உழல்கின்ற போதிலும், மனச்சோர்வு அடையவில்லை. மீண்டும் உயிர்வாழ இயலும் என்பது மட்டுமன்றி, உலகின் முன்னணி நாடுகளைப் போலத் தாமும் உயர்நிலை அடையலாம் என்ற உறுதியான நம்பிக்கை ஜெர்மானியருக்கு உண்டு. இந்த நம்பிக்கைதான் வெற்றிக்கு அடிப்படை.

# 3. செக்கோசுலவகியா

## முன்னேற்பாடுகள்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல அந்தந்த அரசியலார்கள் எளிதில் அனுமதிப்பதில்லை. இறக்குமதி வியாபாரி என்ற முறையில், செக்கோசுலவகியத் தலைநகரான பிராஹாவில்நடைபெற்ற சர்வதேசப் பொருட்காட்சிக்குப் பார்வையாளராக, யான்—தென்னிந்திய வர்த்தகசபையின் சிபார்சுக் கடிதத்துடன் —மனுச் செய்து கொண்டதால், அதிக சிரமமின்றியே, பதினைந்து நாட்கள் அந்த நாட்டில் தங்குவதற்கு அனுமதிச் சீட்டும், ஆறு நாட்கட்கு உணவுப் பங்கீட்டுச் சீட்டும் பம்பாயிலுள்ள செக் அரசியல் அலுவலர் எனக்குத் தந்தார். இவற்றை ஆதாரமாக வைத்து, செக் நாணயத்தில் 750 ரூபாய் வரையில் செலவிட இந்திய ரிசர்வ் பாங்கு அலுவலர்கள் எனக்கு அனுமதியளித்தனர்.

## விமானப் பிரயாணம்

ஜெர்மனியில் அமெரிக்கப் பகுதியின் தலைநகரான பிராங்பர்ட் நகரத்து ரெய்ன் - மயின் ஆகாய விமான நிலையத்துக்கு யான் போய்ச் சேர்ந்தபோது பிற்பகல் 4-30 மணியிருக்கும். ரஷ்யச் செல்வாக்குக் குட்பட்ட நாடுகளுக்குச் செல்ல அனுமதிச் சீட்டுகள் கிடைக்காததால், அன்று பான் அமெரிக்கன்

கம்பெனியின் 34 பேர் செல்லக் கூடிய டி. சி. 4 விமானத்தில், யான் மட்டும் ஒரே பிரயாணியாயிருந்தேன்! ஓரளவு இது எதிர்பாராததா யிருந்தாலும், இதனால் சில நன்மைகளும் ஏற்படாமலில்லை. விமானிகள், ரேடியோக் கருவியை இயக்குபவர், விமான மங்கை (**Air-Hostess**) ஆகிய ஐவரும் எனக்கு உற்ற துணையாயிருந்தனர். ஒரே பிரயாணியா யிருந்ததால் ஓயாமல் காப்பியும் பிஸ்கோத்தும் எனக்குக் கிடைத்தன. விமானிகளுடனேயே எனக்கும் இருக்கை கிடைத்தது. இதன் பயனாக, ஆகாயவிமானப் போக்குவரவைப் பற்றி எனது அறிவை விரிவாக்கிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

"ஏர்-லிப்ட்" (என்னும் ஆகாயவிமானம் மூலம் இன்றியமையாப் பொருள்களைப் பெர்லின் நகருக்கு அனுப்பும் இராணுவ) விமானங்கள் பறக்கத் தொடங்கி விட்டபடியால் அவை மீண்டும் வரும் வரை—இரண்டு மணி நேரத்துக்கு—என் விமானத்தின் புறப்பாடுதாமதிக்கப்பட்டது. 7-மணிக்குப்புறப்பட்டு 8-30 மணிக்கு—அழகிய பிராஹா நகரில் கால் வைத்தேன்.

## சுங்கச் சோதனை

ஒரே பிரயாணியாயிருந்ததால், சுங்கச்சோதனை எளிதில் முடியும் என்று நினைப்பது மனித இயல்பு. ஆனால், என்னுடைய சாமான்கள் நன்றாகச்சோதனை செய்யப்பட்டன. ரொக்க இருப்பு, செக்குகள் ஆகியவையும் சரிபார்க்கப் பட்டன. பிறநாட்டு நாணயங்களின்—முக்கியமாக டாலர் சுவிஸ்

பிராங்கு—இருப்பைக் குறித்துக் கொடுத்தேன் செக் அரசியலார் பாங்கு தவிர வேறு எங்கும் அவற்றை யான் மாற்றமாட்டேன் என்ற உறுதி மொழியையும் எழுதிக் கொடுத்தேன்; அதன் பின்னர் எனது செக்குகளை அரசியலார் பாங்கில் மாற்றிக் கொள்ளவும், பதிவு செய்து கொள்ளவும் பயன்படும் சில தாள்களை உரிய அதிகாரிகள் எனக்குத் தந்தனர். 500 ரூபாய் வரை செலவு செய்து விட்டால், 100 ரூபாய் மதிப்புள்ள பொருள் கள் வாங்கி வெளிநாடுகளுக்கு யான் கொண்டு போகலாம் என்றும் அவர்கள் அறிவித்தனர். செக் நாட்டிலிருந்து திரும்பிப்போக என்னிடம் டிக்கட் இருந்ததாலும், பாஸ்போர்ட் முதலிய ஆதாரங்கள் செவ்வையா யிருந்ததாலும், எளிதில் யான் இந் நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டேன்.

## இட நெருக்கடி

திட்டத்திற்கு இரண்டு நாட்கள் முன்கூட்டியே யான் பிராஹாவுக்கு வந்து விட்டபடியால், அந்த இரண்டு நாட்களுக்கு ஹோட்டல்களில் தங்குமிடம் கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது. பொருட் காட்சிக்காக மூன்றுலட்சம் பேர் அந்நகருக்கு வந் திருக்கும்போது யான்எப்படி இடவசதியை எளிதில் எதிர்பார்க்க முடியும்?செக் வர்த்தக அமைச்சின் அலுவலர் ஒருவரின் துணையால் "நார்தோனி போட்னிக்" (தேசிய மயமாக்கப்பட்ட) ஹோட்டலொன்றில் நள்ளிரவுக்குள் எனக்கு இடம் கொடுக்கப்பட்டது. செக் ஹோட்டல் கள் பலவற்றில், எழுதுவதற்கு அச்சிட்ட தாள்கள் கூடக் கிடைக்கவில்லை. நேராடினுல் அதற்குத் தனிக்

கட்டணம் செலுத்த வேண்டும்; ஒவ்வொரு தடவையும் உணவு உண்ட பின்பு நான் என்ன என்ன உட்கொண்டேன் என்பதை உணவு படைப்பவனிடம் நானே ஒப்புவிக்க வேண்டியிருந்தது!

## ஐரோப்பாவின் ஐதராபாத்

ஐதராபாத்தின் நிலப்பரப்பும் செக் நாட்டின் நிலப்பரப்பும் ஏறக்குறைய சமானமானவை. ஜனத்தொகையும் அவ்வண்ணமே—ஒன்றரைக் கோடி. தெலுங்கு, மராத்தி, கன்னடம் ஆகிய மூன்று மொழிகள் வழங்கும் பகுதிகள் ஐதராபாத்தில் இருப்பது போலவே, பொஹீமியா, மொரேவியா, சுலவகியா என்ற மூன்று பகுதிகள் செக் நாட்டில் உள்ளன. மிகச் சிறுபான்மையோரான முஸ்லீம்களின் செல்வாக்கு ஐதராபாத்தில் ஓங்கியிருந்தது போலவே, சிறுபான்மையோரான யூதரின் ஆட்சி செக் நாட்டில் நடைபெறுகிறது. ஐதராபாத் இந்திய யூனியனில் அமைந்திருப்பது போலவே ஐரோப்பாக் கண்டத்தில் செக் நாடு நடுநாயகமாக அமைந்திருக்கிறது. ஐதராபாத்தைப் போலவே, செக் நாட்டுக்கும் கடற்கரையோ துறைமுகங்களோ இல்லை. மக்களுடைய ஆதரவு இல்லாத அரசியலாரின் பொறுப்பற்ற ஆட்சி ஐதராபாத்தில் நடந்தது போலவே, செக் மக்களின் ஆதரவு இல்லாத சில தலைவர்களின் செல்வாக்கு அங்கே மிகுதியாக இருக்கிறது. இத்தகைய செக்கோசுலவகியா, ரஷ்யா ஜெர்மனி ஆகிய இரு பெரும் நாடுகளுக்கிடையே அமைந்திருப்பதால், ஐரோப்பாவின் அரசியலில் முக்கியத்துவம் அடைந்துள்ளது. பதினைந்தாம்

நூற்றாண்டு வரை மிகச் செல்வாக்குடன் இருந்த மிகவும் புராதனமான இந்நாட்டின் நிலை இப்போது வெளிநாடுகளில் விவரமாகத் தெரிவதில்லை.

## தலைநகர்

ஏழு மலைகளுக்கு நடுவே இருக்கும் அழகிய தலைநகரான பிராஹா, மனத்தைக்கொள்ளை கொள்ளும் கட்டிடங்களும், கண்ணைக் கவரும் அழகிய சாலைகளும், வரலாற்றில் புகழ்பெற்ற பல இடங்களும், ஐரோப்பாவின் மிகப் பழமையான பல்கலைக்கழகமும் உள்ள பெரிய நகரம். யூதர்களுக்கு இது மிக முக்கியமான நகரம்; யூதர் கோவில்களும் கத்தோலிக்க ஆலயங்களும் இந்நகரில் ஏராளமாக உள.

## மொழி

செக்நாட்டில் அனைவரும் அறிந்த வேற்றுமொழி பிரெஞ்சு; ரஷ்ய மொழியைப் போலவே பிரெஞ்சும் இன்னும் கட்டாயமாகக் கற்கவேண்டிய மொழியாக இருந்து வருகிறது; ஆங்கிலம் தெரிந்தவர்கள் மிகச் சிலரே அங்கு உள்ளனர். இந்திய மொழிகளைப் பற்றிச் செக் மக்களில் பலர் கேள்விப்பட்டதுகூட இல்லை. அன்பர் சிலரின் வேண்டுகோளுக்கிணங்கத் தமிழ் மொழியில் சில வார்த்தைகளை யான் எழுதிக் காட்டிய பொழுது, செக் பெண்கள் பலர் ஒவ்வொருவரும் ஒரு சிறு காகிதத்தில் என்னிடம் சில தமிழ் வார்த்தைகளை எழுதி வாங்கிக் கொண்டனர். ஆங்கிலம் பயிற்றுவிக்கப்படுகிற செக் கல்லூரி ஒன்றில் அமரகவி இரவீந்திரநாத தாகூரின் பாடல்கள்

கற்பிக்கப் படுவதாக அவர்கள் வாயிலாக அறிந்து மகிழ்ந்தேன்.

## கலைப்பற்று

சிறந்த வர்ணப் படங்களுள்ள சன்னல்கள் பிராஹாவின் கட்டிடங்களில் ஏராளமாக இருந்த தால், சன்னல்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு அங்கே ஒரு காலத்தில் வீட்டுவரி விதிக்கப் பட்டதாம். செக் மக்கள், கலை, ஓவியம், வர்ண வேலை ஆகியவற்றில் பிரெஞ்சுக் காரரைப் போலவே உயர்நிலை யடைந்திருக்கின்றனர். தோட்டங்கள் அமைப்பதிலும் மரத்தில் நேர்த்தியான வேலைப்பாடு களைச் செதுக்குவதிலும் செக் மக்களும் கைதேர்ந்த வர்களாக விளங்குகிறார்கள். ஜெர்மனியையும் ஜெர்மானியரையும் வெறுப்பதிலும் பிரெஞ்சுக் காரருக்கு இணையானவர் செக் நாட்டவர்தான். ஒற்றர் வேலையிலும், அவர்களோடு சரி சமமாகப் போட்டியிடச் செக் நாட்டவரால்தான் முடியும்!

சுவீடனில் சிறந்த மரவேலைகளைக் கண்டேன். அவை யாவும் செக்நாடு சுவீடன் ஆட்சியில் இருந்த போது அங்கிருந்து சுவீடனுக்குக் கொண்டு போகப் பட்டதாக எனது செக் நண்பர்கள் சொன்னபோது யான் அதை நம்பவில்லை. ஆனல் பிரிட்டிஷ் மியூசி யத்தில் வைக்கப்பட்டிருக்கும் இந்தியக் கலைச் செல்வங்களைக் கண்டபின்னரே செக் நண்பர்கள் கூறியதும் உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்பதை யான் உணர்ந்தேன்.

## பொருளாதார நிலை

பொருளாதாரத் துறையில் முன்னிலையில் நிற்கும் செக் நாட்டின் முக்கிய ஏற்றுமதிகள்—காகிதம், கண்ணாடி பீங்கான் சாமான்கள், பொம்மைகள், துணி, பஞ்சு ஆலைகளுக்கு வேண்டிய இயந்திரங்கள், உயர்ந்த தோல் சாமான்கள், சைகிள், எனுமல் சாமான்கள், கண் வைத்தியக் கருவிகள், சிறந்த அச்சு இயந்திரங்கள், சினிமாப்படத் தொழிலுக்கு வேண்டிய கருவிகள், ஆண்டுக்கு 30 லட்சம் இசைத் தட்டுக்கள், நாள்தோறும் 24,000 தீர்த்த புட்டிகள்!

உலகின் 'உட்பல்ப்' (**Wood Pulp**) உற்பத்தியில் ஒன்றரைச் சத அளவு இந்த நாட்டில் கிடைக்கிறது. ஒன்றரை லட்சம் டன் பத்திரிகைக் காகிதத்தைச் செக் மக்கள் ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்கின்றனர். செக் பத்திரிகைக் காகிதத்துக்கும் இந்தியச் சணலுக்கும் பண்டமாற்று ஒப்பந்தத்தை இரு அரசியலார்களும் 1949-ல் செய்து கொண்டுள்ளனர்.

செக் நாட்டில் துணிப்பங்கீட்டின் அளவு மிகக் குறைவு; வினியோகிக்கப்படும் துணியின் விலையும் மிகுதி; தரமும் குறைவு. நல்ல துணிகள் ஏற்றுமதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்நாட்டின் பிரபல தொழிற்சாலைகள் ஸ்கோடாவும் பாட்டாவும் உலகப் புகழ் பெற்ற பாட்டா செருப்புகள்—இங்குத் தயாரிக்கப்பட்ட போதுங் கூட—உள்நாட்டினருக்கு எளிதில் கிடைப்பதில்லை.

விலைவாசிகள் போருக்கு முன்பு இருந்ததைப் போலப் பத்து மடங்கு உள்ளன. எந்தத் தொழிலாளிக்கும் 6000 கருண (அதாவது சுமார் ரூபாய் 375) மாதச் சம்பளம் கிடைத்தும், இந்தியாவில் 80 ரூபாய்க்கு வாங்கக்கூடிய பொருள்களே அவர்களால் வாங்க இயலுகிறது. தொழிலாளர் பல்லாயிரவர் வாழ்க்கைச் செலவுகளைக்கூடச் சரிக்கட்ட இயலாதிருப்பதாயும் யான் அறிந்தேன்.

இன்றைய உலகில் மிகவும் மதிப்புக் குறைவாயுள்ள நாணயங்களுள் செக்பணம் ஒன்று. வெளிநாடுகட்குச் செல்ல விரும்புவோர் அங்குச் சென்றதும் உபயோகிப்பதற்காக அந்த நாட்டு நாணயங்களைச் சேர்ப்பதாலும், நாணயச் செலாவணி பல மடங்கு பெருகியிருப்பதாலும் வியாபாரத்தில் பெரும் பகுதி வெளிநாட்டு நாணயத்திலேயே நடைபெறுகிறது.

## மக்களின் இன்னல்கள்

செக்மக்கள் ஜெர்மன் ஆட்சியில் பல ஆண்டுகள் எல்லையற்ற இன்னல்களை அனுபவித்தனர்; போர் முடிந்த பின்னர் அவர்கள் ரஷ்யரிடம் மேலும் துன்பப்பட வேண்டியதாயிற்று. செக் நாட்டின் தந்தைகளான மசாரிக்கும் பெனசும் காலமான பின்பு, செக் மக்கள் தங்களுக்கு வழிகாட்டுவோரின்றித் தவிக்கின்றனர்.

## உணவு நிலை

வேறு எந்த நாட்டிலும் இல்லாத அவ்வளவு கொடிய உணவுப் பஞ்சம் செக்கோசுலவகியாவில் இருக்கிறது. உணவுப் பங்கீட்டின் அளவு மிகவும் கேவலமானது; முதலில் உணவருந்தச் சென்ற போது யான் மாமிசம் உட்கொள்ளுவதில்லை என்று சொன்னதும், "அந்த பயம் தங்களுக்கு வேண்டாம், மீன் மட்டும் இங்கே கிடைக்கும்; மற்ற வகையில் செக் மக்கள் அனைவருமே சைவ உணவை உட்கொள்ளு பவர்கள்தான். முட்டை என்பது மருந்துக்குக் கூடக் கிடைக்காது" என்றார் அரசியலாரின் (எல்லா ஹோட்டல்களையுமே அரசியலார்தான் நடத்துகின்றனர்) ஹோட்டல் அலுவலர். காப்பியாவது குடிக்கலாம் என்றால் பால் கிடைக்கவில்லை; பாலில்லாத காப்பி யாவது உட்கொள்ளலாம் என்றால், சர்க்கரை கிடைக்கவில்லை; சர்க்கரைக்குப் பதிலாக ஒரு வில்லை (மாத்திரை) யை அம்மக்கள் பயன்படுத்தி வருகின் றனர்; அதைச் சேர்த்துக் காப்பியைக் குடித்ததும் 'நஞ்சு' எப்படி இருக்கக் கூடும் என்பதைக் கற்பனை யின் துணையால் ஒருவாறு முடிவு செய்துகொண் டேன். போருக்கு முன்பு ஐரோப்பாவிலேயே, செக் நாடுதான் பெரும் அளவுக்குச் சர்க்கரை ஏற்றுமதி செய்தது. இன்று அந்தச் சர்க்கரை எங்கே? இக் கேள்விக்கு விடை கூறுபவர் ஒருவருமில்லை.

செக் நாட்டில் வழங்கப்படும் உணவுப் பங்கீட்டுச் சீட்டைப்பற்றி இங்கே விளக்கிக் கூறவேண்டும். அந்தச் சீட்டில் சிற்றுண்டிக்கும், பகல் இரவுப்

பேருண்டிகளுக்கும் தனிப் பகுதிகள் இருக்கும்; உணவு உண்ணச் செல்லும் ஒவ்வொரு தடவையிலும் உரிய பகுதியைக் கிழித்து உணவு படைப்பவனிடம் கொடுக்கவேண்டும். மிட்டாய், வெண்ணெய், மாமிசம், சர்க்கரை, ரொட்டி இவைகளுக்கும் பங்கீட்டுச் சீட்டுக்கள் உள்ளன.

பல்கேரியாவிலும் ருமேனியாவிலும் ஒரு புது மாதிரியான உணவுப் பங்கீட்டு முறை அமலில் உள்ளது. இத்திட்டப்படி, யாவருக்கும் பங்கீட்டில் 8 அவுன்சு அரிசி கட்டுப்பாட்டு விலைக்குக் கொடுக்கப் பட்டால், அதற்குமேல் வேண்டுவோர், மேலும் 8 அவுன்சு அரிசி வரையில், பங்கீட்டுக் கடையிலேயே, கட்டுப்பாட்டு விலையைப்போல இரண்டரை அல்லது மூன்று பங்கு விலை கொடுத்துச் சட்டப்படி பெறலாம். இதன் விளைவாகக் கள்ள வாணிபத்தைத் தடுக்க இயலுமாம். கள்ள வாணிபத்தின் ஊதியம் தனி நபர்களைச் சேராமல் நாட்டின் பொது உடைமை ஆகி விடுகிறதாம். மக்களிடையே உள்ள உபரியான செலாவணியை மீண்டும் அரசியலார் பெறுவதற்காக இந்தப் புதிய பொருளாதார முறை கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதாம். இத்திட்டம் செக் நாட்டிலும் சீக்கிரம் அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

செக் நாட்டில் நல்ல ரொட்டி கிடைப்பது அரிது. சாக்லேட், ஐஸ்கிரீம் போன்றவை எல்லாம் செக் மக்கள் மறந்துவிட்ட பொருள்கள். இவர்களுடைய தேசீய உணவு வாத்து மாமிசம்.

## நகைச் சுவையின்மை

உணவுப் பஞ்சம் மட்டுமன்று, செக் நாட்டில் சிரிப்புப் பஞ்சமும் ஏற்பட்டிருக்கிறது! இயற்கையாகவே, நகைச்சுவை இல்லாதவர்கள் செக் நாட்டவர்; மேலும், ஒவ்வொருவரும் மற்றவர் இரகசியப் போலீசாராக இருக்கக் கூடுமென்று அவர்கள் ஐயப்படுகின்றனர். இந்நிலையில் அமெரிக்காவில் யான் கண்ட மலர்ந்த முகங்களைச் செக் நாட்டில் மாதிரிக்குக்கூடக் காண முடியவில்லை. சினிமாப் பார்க்கும்போதுகூட யாரும் சிரிக்கவில்லை. மற்ற நகரங்களைப்போல, சாலைகளுக்குக் கீழ் ரயிலை ஓட்டாவிட்டாலும், பிராஹா நகர வாசிகள் சாலைகளுக்குக் கீழே சினிமாத் தியேட்டர்கள் கட்டி இருக்கின்றனர். இந்தத் தியேட்டர்களிலும் நியூயார்க் தியேட்டர்களைப்போன்ற அமைதி உண்டு. ஆனல் ஒரே வேறுபாடு: நியூயார்க் தியேட்டர்களில் நிலவுவது, உயிருள்ள அமைதி; பிராஹா தியேட்டர்களில் நிலவுவது, மரணத்தின் அமைதி.

## மேலும் சில குறிப்புக்கள்

அரசியல் நிலையில் ஏற்பட்ட மாறுதலால் செக் நாட்டில் பல விளைவுகள் நிகழ்ந்துள்ளன. இவைகளுள் குறிப்பிடத்தக்கது, அரசியலார் அந்நாட்டுப் பத்திரிகைகளைத் திருத்தி அமைக்கப் போவதாக அறிவித்திருப்பதாகும். இம்முறைப்படி விளம்பரங்கள் மட்டும் தனியாக ஒரு பத்திரிகையில் வெளிவரும். ஏனைய பத்திரிகைகளில் விளம்பரங்கள் இரா. உழவர்கட்குத் தனிப்பத்திரிகை வெளிவருமாம். அதேபோல், வழக்

கறிஞர், மாணவர், இராணுவத்தார் ஆகியோருக்குத் தனித்தனியே பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுமாம். ஒவ்வொருவரும் தமக்குரிய பத்திரிகையை மட்டுமே படிக்க வேண்டுமாம். இப்போது செக் நாட்டில் தலைக்கு ஓராண்டுக்கு ஒருபவுண்டு விகிதம் பத்திரிகைக் காகிதம் செலவாகிறதாம்; இந்தியாவில் அரைக்கால் பவுண்டு விகிதமும், அமெரிக்காவில் பன்னிரண்டு பவுண்டு விகிதமும் பத்திரிகைக் காகிதம் செலவாகிறது.

## போக்கு வரவு வசதிகள்

செக் நாட்டில் "ஸ்பா" க்கள் ஏராளம். 'ஸ்பா' என்பது தீரா நோய்களையும் குணப்படுத்தும் சுகாதாரமான நீர்ஊற்று. இவற்றின் மூலம் செக் அரசியலாருக்கு -சென்னை அரசியலாருக்கு விற்பனை வரியில் கிடைப்பதுபோல்—ஏராளமான வருவாய் கிடைக்கிறது. பலலட்சம் பேர் ஆண்டுதோறும் இந்த நாட்டுக்கு வருகின்றனர். எனவே, தக்க போக்கு வரவு வசதிகள் இங்கே இல்லாதது பெரியதொரு குறைபாடாகும்.

பிராஹாவில் வாடகைக் கார்கள் மிகக் குறைவு. டிராம் வண்டிகள் அங்கு இருப்பதைவிட மோசமாக உலகில் வேறெங்கும் இல்லை. சுவீடனில் ரயில் பிரயாணம் செய்தபோது தென்னிந்திய ரயில் வேயைப் பழித்த எனக்கு, செக் ரயிலில் யான்கழித்த ஏழரை மணி நேர அனுபவம் நமது ரயில்வேயின் மேன்மையை உணர்த்தியது. செக் ஆகாய விமானங் களின் நிலையும் இத்தகையதே. கப்பல் பிரயாணிகள் செய்த புண்ணியம் செக் கப்பல்கள் இல்லை. செக் கோசுலவகியாவை நினைக்கும்போது குறித்த நேரத் திற் புறப்படாத ரயில்களும் நடந்து செல்லுபவர்

களுக்கும் கைகாட்டும் போலீசாருந்தான் என் மனக் கண் முன் தோன்றுகின்றனர்.

உள் நாட்டுப் பிரயாணத்துக்கும் சுங்கச்சோதனை என்பது செக் நாட்டில் மட்டுமுள்ள பழக்கம். அந்த நாட்டின் இரண்டாவது நகரமாகிய டானியூப் கரையிலுள்ள நேர்த்தியான பிராட்டிஸ்லாவாவிலிருந்து பிராஹாவுக்கு வருவதற்குள் எனது ஒரே சிறு பெட்டி இருமுறை சோதனைக்குள்ளாயிற்று. நாளை முதல், திருச்சியிலிருந்து சென்னைக்கு வருபவர்களைச் சோதனையிட்டால் நிலைமை எப்படி இருக்கும்? இது போன்றது அதுவும்.

மசாரிக், பெனேஸ் இவர்கள் நினைவாக ஏற்பட்ட பூங்காக்களும், சாலைகளும், கட்டிடங்களும் போர்க் காலத்தில் ஹிட்லர், கோயரிங் ஆகியோரின் திருப் பெயர்களைப் பெற்றிருந்தனவாம்; இப்போது ஸ்டாலின் பார்க், ஸ்டாலின் பிளேஸ், ஸ்டாலின் அவென்யூ என அவை அழைக்கப்படுகின்றன. செக் குடியரசுத் தலைவரின் மாளிகைக்கருகில் அதே மலையிலுள்ள மசாரிக் மியூசியம் மட்டும் இன்னும் ஸ்டாலின் மியூசியம் ஆக மாறிவிடவில்லை.

பிறரைப் பின்பற்றுவதில், செக்மக்கள் ஜப்பானியரையும் மிஞ்சிவிடுபவர். இப்போது, ரஷ்யாவில் செய்வதை எல்லாம் செக்கோசுலவகியாவில் உடனுக்குடன் செய்கிறார்கள்; ஆனால் ரஷ்யாவில் மழை பெய்தால் இன்னும் அங்கே குடைபிடிக்க தொடங்கவில்லை!

# 4. சுவிட்சர்லந்து

சுவிட்சர்லந்து என்று சொன்னவுடனே, இயற்கைக் காட்சிகள் பலரின் மனக்கண்ணெதிரில் தோன்றும்; நமது முதலமைச்சரின் வாழ்க்கைத் துணைவி கமலா நேரு உயிர்நீத்த நாடு என்ற நினைவு சிலருக்கு ஏற்படும்; கொந்தளிப்பான உலகில், அமைதிக்கு அடையாளமாக விளங்குஞ் சிறுநாடு என்று சிலர் அதனைக் கருதுவர். ஆனால், எல்லோருமே தாம் அணிந்திருப்பது சுவிஸ் நாட்டில் செய்யப்பெற்ற கடிகாரந்தான என்பதைக் கவனிப்பார்கள்.

சுவிட்சர்லந்து பூலோக சுவர்க்கம் போன்றது. அந்த நாட்டில் அழகு நடமாடுகிறது;நீர் மட்டுமன்று, இலக்கியமும் விஞ்ஞானமுங்கூட அங்கே வெள்ளமாகப் பெருகியிருக்கின்றன.

எழில் மிக்க காடுகள், மலைப்பகுதிகள், கடல் மட்டத்துக்கு 600 அடி மேலிருந்து 16,400 அடி வரையுள்ள இயற்கை அமைப்புக்கள், ஆல்ப்ஸ் மலையின் அடிவாரத்தில் சிதறியோடும் "வான் பொய்ப்பினும் தான் பொய்யாத" ரயின் ஆறு, பல அருவிகள், இணையற்ற பெரிய ஏரிகள், இரண்டரை லட்சம் நீர் ஊற்றுக்கள், நோயைப் போக்கும் ஊருணிகள், பசுமையான வயல்கள், உள்ளக் கிளர்ச்சியைத் தரும் காட்சிகள், 16,000 சதுர மைல் (அதாவது ஐக்கிய திருவாங்கூர் கொச்சி இராச்சியத்தைப்

போல் ஒன்றரைப் பங்கு) பரப்புள்ள கடற்கரை யில்லாத பகுதியில் "இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன" என்ற மனப்பான் மையுடைய சுறுசுறுப்பான சுத்தமான 44 லட்சம் மக்கள் (கல்கத்தா நகரத்திலுள்ள மக்களை விடக் குறைவு) கூட்டம்—இவற்றை ஐரோப்பாவின் நடுவில், ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையே இயற்கையான எல்லை களுடன் அமைத்துக் கொள்ளுங்கள். அதுதான் சுவிட்சர்லந்து.

## ஐரோப்பாவின் இராமேசுவரம்

நோயுற்றவர்கள் உடல் நலம் பெறவும், மற்றவர் கள் பொழுது போக்கவும் பிற நாடுகளிலிருந்து சுவிட்சர்லந்துக்கு வந்தவண்ணமாக இருக்கின்றனர். இவ்வாறு, இந்நாட்டில் மூன்று லட்சத்துக்கு மேற் பட்டவர்கள் எப்போதும் காணப்படுகிறார்கள். இவர் களுக்குத் தொண்டு செய்து வாழ்க்கை நடத்தும் சுவிஸ்காரர் மிகப்பலர். இது இராமேசுவரம் வாசி கள் அங்குவரும் பக்தர்களை எதிர்பார்த்து வாழ்வதை ஒக்கும். வெளிநாட்டாரை நம்பியே, 7,000 ஹோட் டல்களும் 20,000 சிற்றுண்டிச் சாலைகளும் இச்சிறு நாட்டில் உள்ளன.

பணிவிடை செய்பவர்களுக்கு இனம் (பக்ஷீஸ்) கொடுக்கும் வழக்கம் பல நாடுகளில் உண்டு; ஆனால், சுவிட்சர்லந்தில் இந்தத் தொகை 15 சதம் வரை ஆகும். அதாவது, ஒரு காரை வாடகைக்கு எடுத்து அதற்குக் கட்டணம் ரூ. 5 செலுத்தினால், கார்

இயக்குபவருக்கு அன்பளிப்பு ரூ. 0-12-0-ம் உடன் கொடுக்க வேண்டும். ஜினீவா நகரில், ஒரு கடையில் சில பொருள்களைப் பொறுக்கி வைத்துவிட்டு, அவைகளுக்கு என் கணக்கில் பணம் கொடுக்கும்படி நான் தங்கியிருந்த ஹோட்டல் அதிகாரியிடம் சொன்னேன். மறுநாள், அந்தப் பொருள்களின் விலைக்கு 15 சதம் சேர்த்துப் பட்டியல் வந்தது! பெரு முயற்சியின் பேரில் பேரம் செய்து வெற்றி பெற்றேன். இவை போன்ற சில இடையூறுகள் இருப்பினும், பிறநாட்டினரைக் காந்தம்போல் சுவிட்சர்லந்துக்கு இழுப்பது அங்கே நிலவும் சுகாதாரச் சிறப்பேயாகும்.

## சுகாதாரம்

சுவிஸ் மக்கள் மிகத் தூய்மையானவர்கள்; அகத்தூய்மை மட்டுமன்று, புறத்தூய்மையையும் அவர்களிடம் மிகுதியாகக் காணலாம். உடலையும் உணவையும் சுற்றுப்புறங்களையும் சிறப்பாக வைத்திருப்பது அவர்களுக்கு உடன் பிறந்த குணம். 11,523 அடி உயரத்தில், உலகிலேயே உயர்ந்த மலை ரயில் உள்ள ஜ ாவங் பிராவோச், மற்றும் கஸ்டாட், மாண்ட்ரீவக்ஸ், இண்டர்லேகன் போன்ற பல சுகவாசஸ்தலங்களை இந்நாட்டினர் மிகவும் பேணிவருகின்றனர். சுவிஸ் மக்களுக்கு முதிர்ந்த வயதில் செலவுக்குப் பொருள் கிடைக்கவும், நோயைக் குணப்படுத்திக் கொள்ளவும் அந்த அரசியலார் திட்டங்கள் வகுத்துள்ளனர்.

உலகின் சிறந்த வைத்தியரில் பலர் சுவிஸ்காரர்கள்; சுவிஸ்காரருள் எழுவரில் ஒருவர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சுவிஸ் பல்கலைக் கழகங்கள் அனைத்துக்கும் பொதுவாக ஒரு செனட்டோரியம் (**Sanatorium**) உண்டு. மாணவர்கள், மிகச் சிக்கனமான செலவில், உடல் நலம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இங்கே உண்டு. சிறுவர் சிறுமியரின் சுகாதாரத்தைப் பேணுவதற்காகக் **சூர்சால்** என்னும் பொழுது போக்கு இடங்களை, இயற்கையழகு நிறைந்த இடங்களில், நகராண்மைக் கழகங்கள் நிருவகிக்கின்றன. கோடை மாதங்களில், கால் நடைகளையும் மலைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லுவது நான் சுவிட்சர்லந்தில் கண்டு வியந்தவற்றுள் ஒன்று. எனவே, சுவிஸ் மக்கள் சுகாதார மேம்பாடு அடைந்திருப்பது இயற்கையே; விளையாட்டுக்கு அவர்கள் கொடுக்கும் சிறப்பும் இத்தன்மையானதே.

## விளையாட்டுகள்

சுவிஸ் நாடு முழுவதுமே ஒரு பெரிய விளையாட்டு மைதான்மாக இருக்கிறது என்று கூறுவது பொருந்தும். பிரிட்டன், ஹாலந்து போன்ற சில நாட்டினர் உறைந்த பனிக்கட்டியின்மீது ஓடும் போட்டிப் பந்தயங்களை சுவிஸ் நாட்டில்தான் நடத்துகின்றனர். இதனால் இந்த நாட்டுக்கு “ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்” எனப் பெயர் ஏற்பட்டுள்ளது. உறைந்த பனிக்கட்டியின்மீது ஹாக்கி விளையாடுவது, மலைமீது ஏறிச் செல்லுவது, மீன் பிடிப்பது, படகோட்டுவது, நீந்துவது, கோல்ப் (**Golf**) விளையாடுவது ஆகியவற்றிலும் இந்நாட்டினருக்கு

விருப்பம் மிகுதியாக உண்டு. ஆனால், இவர்களுடைய தேசீய விளையாட்டு என்று சொல்லக் கூடியது துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடுவதாகும். இப் பயிற்சியில் இவர்களை ஒப்பாரில்லை என்பதோடு மிக்காரும் இல்லை எனலாம். வில்லியம் டெல் என்ற சுவிஸ்காரர் தம் மகன் தலைமீது இருந்த ஓர் ஆப்பிள் பழத்தைப் பையனுக்குச் சிறிதும் காயமின்றி எய்த நிகழ்ச்சி பள்ளி மாணவர் அறிந்ததே. நம் நாட்டில் இராமாயண மகாபாரதக் கதைகள் போல, சுவிஸ் நாட்டில் 'டெல்'லின் புகழ் தலைமுறை தலைமுறையாக வழங்கிவருகிறது; இந்நிகழ்ச்சி நடந்த இடத்தை வெளி நாட்டினருக்குக் காட்டுவதிலும் சுவிஸ் மக்கள் மகிழ்ச்சி யடைகின்றனர். இவ்விளையாட்டுக்கான உலகப் போட்டிகளில், (ஓராண்டு நீங்கலாக) முப்பது ஆண்டுகளாக ஒலிம்பிக் தங்கப் பரிசுகளை இந்நாட்டினரே பெற்றுள்ளனர். 1928-ல் பரிசு பெற்றவர் ஷர்டாக் என்ற அமெரிக்கர்; அவருடைய பெற்றோர்கள் அமெரிக்காவுக்குச் சுவிஸ் நாட்டிலிருந்துதான் குடியேறிச் சென்றனராம்!

**படை**

சுவிட்சர்லந்தின் குதிரைப்படையும் காலாட்படையும் புகழ் பெற்றவை; ஆனால் காலாட்படை என்று நிரந்தரமாக அங்கே இல்லை. இதற்குக் காரணம் மக்கள் எல்லோருமே போர்வீரராக இருப்பதுதான். இருபதாவது வயதில், சுவிஸ் நாட்டினர் எல்லோரும் நான்கு மாதகாலம் கட்டாய இராணுவப் பயிற்சிபெற வேண்டும். இதன் பிறகு அறுபது வயது வரை

ஆண்டு தோறும் மூன்று வாரங்களுக்குப் படையில் பணியாற்ற வேண்டும். இந்தத் திட்டத்தின் படி நாட்டுக்கு அபாயம் நேரிட்டால் 72 மணி நேரத்தில், 9 லட்சம் போர் வீரரைத் திரட்ட இயலுமாம்; போர்க் கருவிகளும் உடையும் பயிற்சிக் காலத்தில் கொடுக்கப்படுகின்றன; மரணம் வரை இவை அவரவரைச் சேர்ந்தவை.

## வியத்தகு நிகழ்ச்சிகள்

நிரந்தரப் படையின்றி யிருப்பதுபோல, வேறு பல விந்தைகளும் சுவிஸ் நாட்டில் உண்டு. இவற்றுள் ஒன்று, பெண் மக்களுக்கு இன்னும் வாக்குரிமை வழங்கப்படாமல் இருப்பதாகும். இதனால், அங்கே பெண்பாலருக்கு உரிமைகளோ, செல்வாக்கோ, சலுகைகளோ, சமூக வாழ்க்கையில் அவர்களுடைய நிலையோ குறைவானது என்று கருதிவிடக் கூடாது.

உலகிலேயே மிகப் பழமையான குடியரசு சுவிட்சர்லந்தே; 700 ஆண்டுகளாக அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவரையுடைய குடியாட்சி அரசியல் முறை செவ்வையாகவும் சிறப்பாகவும் நடந்து வருகிறது; ஐக்கியநாடுகள் சபையில் சுவிஸ் நாடு ஓர் உறுப்பினராகச் சேரலாமா கூடாதா என்பதும் அந்த நாட்டு மக்களின் முடிவுக்கு விடப்பட்டது; அச்சபையில் சேரக்கூடாது என்று அம்மக்கள் பொது வாக்கெடுப்பில் முடிவு செய்தனர்.

நாட்டின் நிருவாகம் பற்றிய எல்லா அதிகாரங்களும் பொது அரசியலாரிடமே இருக்கவேண்டும் என்ற கருத்து சுவிட்சர்லாந்தில் கிடையாது; மிகுதியான அதிகாரங்களைக் காண்டன் என்னும் இராச்சிய அரசியலாரே செலுத்துகின்றனர். நாட்டின் எல்லாப் பகுதியினருக்கும் திருப்தியாக, அரசியல் தலைநகராகப் **பேர்ன் (Berne)** நகரும், நீதி மன்றங்களுக்கு **லாசேன் (Laussane)** நகரும், பொருளாதாரத் துறைக்கு **ஜூரிக் (Zurich)** நகரும், அயல்நாட்டு விவகாரங்களுக்கு **ஜினீவா** நகரும், வணிக வாயிலாகப் **பால் (Basle)** நகரும், கடிகாரத் தொழிலின் தலைநகராக **பியன்** நகரும் அமைந்திருக்கின்றன.

போரில் ஈடுபடாததாலும், போரிட்ட நாடுகளுக்குப் பொருள்களை விற்று ஊதியம் அடைந்ததாலும் சுவிஸ் நாடு பொருளாதாரத் துறையில் நன்னிலையில் இருக்கிறது; இந்த நாட்டிலேயே அமெரிக்கரும் மற்றவர்களும் தங்களுடைய சேமிப்புக்களை முதலீடு செய்துள்ளனர்.

சுவிஸ் மக்களுள் பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலிய இனங்களைச் சேர்ந்தவர் உண்டு. அந்த நாடுகள் ஒன்றோடொன்று போர் புரிந்த போதுங்கூட, பிரெஞ்சு சுவிஸ்காரர்களும், ஜெர்மன் சுவிஸ்காரர்களும் இரண்டறக் கலந்து வாழ்வது வேறு நாட்டில் காண இயலாததோர் அரிய நிகழ்ச்சி. பல வேற்றுமைகளுக்கிடையே நிலவும் இந்த ஐக்கிய மனப்பான்மைதான் சுவிஸ் நாட்டின்—ஏன் எந்த நாட்டுக்கும்—மதிப்பிடமுடியாத செல்வம்.

ஒரே கிறிஸ்தவ ஆலயத்தில், கத்தோலிக்கரும், சற்று நேரத்துக்குப் பின்னர் பிராடஸ்டண்டுகளும் இறைவனை வழிபடுவது சுவிட்சர்லந்தில் தவிர வேறு எங்கும் நிகழாத தொன்று.

சுவிஸ் என்று ஒருமொழிகிடையாது. சுவிஸ்என்ற பெயரோடு தனித்த மொழி ஒன்று இருப்பதாக நம் நாட்டில் சிலர் நினைப்பது 'இந்தியன்' என்று ஒரு மொழி இருப்பதாயும், அதையே எல்லா இந்தியரும் பேசுவதாயும் வெளிநாடுகளில் சிலர் தவருகக் கருது வதைப் போன்றதாகும். ஜெர்மன், பிரெஞ்சு, இத் தாலியன், ரொமான்ச் ஆகிய மொழிகளை முறையே சுவிஸ் மக்களில் 72, 20, 5, 1 சதவிகிதம் பேசுகின்ற னர். இந்நான்குமே அரசியலார் மொழிகளாக உள் ளன. சட்டசபையில் இந்த மொழிகளில், எதை வேண்டுமானுலும் உறுப்பினர் பேசுவதைக்கண்டு இன்புற்றேன்; நீதிமன்றங்களிலும் இக்காட்சிகளைக் காண இயலுமென்று அன்பர்கள் தெரிவித்தனர். சுவிஸ் ஜெர்மன் வழக்கறிஞர் ஜெர்மன் மொழியில் எழுதும் நிருபத்திற்குச் சுவிஸ் பிரெஞ்சு வழக்கறி ஞர் பிரெஞ்சு மொழியில் பதில் அனுப்புவதும், இரு வரும் தாமே பிறர் உதவியின்றி அச்செய்திகளை அறிந்து கொள்ளுவதும் சுவிட்சர்லந்தில் நாள் தோறும் நிகழும் வியத்தகு நிகழ்ச்சிகளில் ஒன்று.

சுவிட்சர்லந்து தொலைப்பேச்சு (**Telephone**) கம் பெனியார் அவ்வப்போது நேரத்தைத் தெரிவிப்ப தற்காக, அறிவிப்பாளர் பேசுவதைப்போல, மணி நிமிஷம் வினடி இவற்றைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பதற்கு ஒலிப்பதிவு செய்த சுருள்களை

வைத்திருக்கின்றனர். எப்போது யார் 'நேரம்என்ன?' என்று கேட்டாலும், அந்த இயந்திர மனிதர் உடனுக்குடன் நேரத்தைச் சொல்லுகிறார்!

## மக்களின் பண்பாடும் குணங்களும்

சுவிஸ் மக்கள் மிகவும் வேகமாக எந்தக் காரியத்தையும் செய்கின்றனர்; வாடகைக்கார்கள் கூட அந்த நாட்டில் மணிக்கு 100 கிலோமீட்டர், அதாவது 65 மைல், வேகத்தில் செல்லுகின்றன. தந்தி, ரிஜிஸ்தர் செய்யப்பட்ட கடிதம் ஆகியவற்றை அனுப்ப நேரமாகிவிடும் என்பதற்காக, அவர்கள் ரசீது கொடுப்பதில்லை; தனிக்கட்டணம் கட்டி, ரசீது கேட்பவர்களுக்கு மட்டுமே அதைக் கொடுப்பது வழக்கம். ஆனால், ரசீது பெற்றுக்கொண்டாலும், பெற்றுக் கொள்ளாவிட்டாலும் தந்தி, ரிஜிஸ்தர் செய்யப்பட்ட தபால்கள் உறுதியாக உரியவருக்குக் கிடைத்து விடும். என்னே, அவர்களுடைய நாணயம்! சுணக்கமின்றித் தபால்களை அனுப்புவதற்கு உதவியாக, எல்லா ஊர்களிலும் ரயில் நிலையத்துக்கு எதிரிலேயே தபால் நிலையத்தை அமைத்திருப்பதும் அந்த நாட்டின் மற்றொரு சிறப்பு.

1945-ல் ஜப்பானியர் சரணடைவதாகச் சுவிஸ் அரசியலாரிடம் தெரிவித்தபோது, அச்செய்தியைப் பதினேரு நிமிஷங்களில், அவர்கள் அமெரிக்க அரசியலாருக்கு அனுப்பிப் போரை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனராம்! எனது டைப்ரைட்டர் கருவியில் சில எழுத்துக்களை ஒரு சுவிஸ்காரர் ஐந்து நிமிஷங்களில் மாற்றிக்கொடுத்தார்!

அங்கே அலுவலகங்கள் அனைத்தும் முற்பகல் 8 மணிக்கே வேலை தொடங்கிவிடுகின்றன; கடைகள், பெரும்பாலும் முற்பகலில் 8 முதல் 12 வரையும், பிற்பகலில் 2 முதல் 6-30 வரையும் திறந்திருக்கின்றன. தொழிலாளர் சனிக்கிழமைகளிலும், மற்ற நாட்களைப் போலவே, நாள் முழுவதும் வேலை செய்கின்றனர்; ஏனைய நாடுகளைப் போலவே, அங்கேயும் ஞாயிறு விடுமுறை நாளாகும்.

தமிழ் மக்களைப்போலவே, சுவிஸ் மக்களும், ஒரு சிறு பகுதி நீங்கலாக, அனைவரும் கிராமங்களில் வாழ்கின்றனர். கற்பனை, நகைச்சுவையுணர்ச்சி, விருந்தினரை ஓம்புதல், இசை ஞானம், கலைப்பற்று முதலிய பண்பாடுகளை அவர்களிடமுங் கண்டேன். மேலும், பண்டைத் தமிழரைப் போலவே, இன்றைய சுவிஸ் மக்கள் சிற்பக்கலையில் பேரார்வமுடையவர்களாயிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறிய குடும்பமே வாழ்க்கையை இன்பமயமாக்கும் என்ற அடிப்படை இரகசியத்தை சுவிஸ் மக்கள் உணர்ந்திருக்கின்றனர். ஒரு சுவிஸ் அன்பர் மற்றொருவரைப்பற்றிக் குறிப்பிடும்போது, "அவர் குடும்பம் பெரியது" என்றார்; "எத்தனை குழந்தைகள் ?" என்று யான் ஆவலோடு கேட்க, "மூன்று" என்று அவர் குறிப்பிட்டார்; "இது பெரிய குடும்பமா?" என்று யான் மேலும் கேட்டபோது, இரண்டு குழந்தைகள் இருப்பதே சுவிட்சர்லந்தில் அரிது என்று அந்த அன்பர் பதிலளித்தார்.

## வாழ்க்கை நிலை

மக்களின் உழைப்பு, நாட்டின் வளம், போரில் ஈடுபடாத நிலை, சிறிய ஜனத்தொகை இவற்றின் விளைவாகச் சுவிஸ் நாட்டில் வாழ்க்கை நிலை சிறப்பாக விளங்குகிறது; இந்நாட்டு அரசியலார் 586 கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்கத்தைச் சேமித்து, அதை அமெரிக்காவில் பத்திரப்படுத்தி வைத்துள்ளனர்; பிற நாடுகளில் இவ்வரசியலார் 600 கோடி ரூபாய்க்குச் சொத்துக்களையும் வாங்கியிருக்கின்றனராம்! இக்காரணங்களால், அமெரிக்க நாட்டு நாணயமாகிய டாலரைப் போலவே, சுவிஸ் நாட்டு நாணயமான பிராங்கும் வலுவான நாணயமாக இருந்து வருகிறது; ஒரு சுவிஸ் பிராங்கு என்பது, நான் சுவிட்சர்லந்தில் இருந்தபோது, இந்திய ரூபாய் 0-13-0 க்குச் சமமாக இருந்தது; 1949 செப்டம்பரில் ஏற்பட்ட நாணய மதிப்புக் குறைவால், இப்போது ஒரு சுவிஸ் பிராங்கு இந்திய ரூபாய் 1-1-6க்குச் சமமாகிவிட்டது.

சுவிஸ் மக்களின் பொருளாதாரச் செழிப்பைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்:

| | |
|---|---|
| மோட்டார் சைகிள்கள் | — 37 000 |
| ஐஸ் பெட்டிகள் | — 48,000 |
| மோட்டார் கார்கள் | — ஒரு லட்சம் |
| நீரைச் சூடாக்கும் மின்சாரக்கருவிகள் | — 3 லட்சம் |
| வானொலிக் கருவிகள் | — 10 லட்சம் |
| ஆகாய விமான நிலையங்கள் | — 25 |
| ரயில் பாதையின் நீளம் | — 1709 மைல் |
| ரயில்வேயின் மூலதனச் செலவு | — 80 கோடி ரூ. |
| ஹோட்டல்களின் மொத்தமூலதனம் | — 85 கோடி ரூ. |
| மக்களின் சராசரி மாத வருவாய் | — 1100 ரூ. |
| மக்களின் சராசரி இன்ஷியூரன்ஸ் தொகை | — 6500 ரூ. |

## போக்கு வரவு வசதிகள்

சுவிஸ் நாட்டில் ரயில்கள் அனைத்தும் மின்சாரத் தால் இயங்குகின்றன; உள் நாட்டுக்குள் செல்லும் ரயில்களுக்குத் தனி பான்ஹாப்பும், வெளிநாடுகளுக்குச் செல்லும் ரயில்களுக்குத் தனி பான்ஹாப்பும் அமைக்கப் பெற்றுள்ளன; டிக்கட் விற்கும் இடத்தில் இருபுறமும் தட்டுக்கள் உள்ள ஒரு கருவி பொருத்தப்பட் டிருக்கிறது; பிரயாணி ஒரு தட்டில் பணத்தை வைத்ததும், ரயில் ஊழியர் மற்றொரு தட்டில் டிக்கட்டை வைப்பார்; ஒரு பொத்தானை அமுக்கியவுடன், பிரயாணி யிருக்கும் பக்கத்தில் டிக்கட்டும் ரயில் ஊழியரிருக்கும் பக்கத்தில் பணமும் கிடைக்கும்படி இக்கருவி அமைக்கப்பட்டுள்ளது! வெளி நாட்டார் சுவிட்சர் லந்தில் மிகுதியாகச் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு வசதியாக, ரயில் நிருவாகிகளே ஏரி, மலைப் பிரயாணங்களுக்கும் ஏற்பாடு செய்கின்றனர்; 90 ரூபாய் கொடுத்து உல்லாசப் பிரயாண டிக்கட் ஒன்றை வாங்கிவிட்டால், ஒரு திங்களுக்குச் சுவிஸ் ரயில்களில் எங்கு வேண்டுமானாலும் இரண்டாம் வகுப்பில் செல்லலாம் என்ற ஏற்பாடும் அந்த நாட்டில் உண்டு. டிக்கட் வாங்கியபின் பிளாட்பாரத்திற்குச் செல்லவேண்டும் அல்லவா? குறிப்பிட்ட ரயில் எந்தப் பிளாட்பாரத்தில் வருகிறது என்பதை ஒருவரிடமும் கேட்க வேண்டுவதில்லை; அறிவிப்புப் பலகைகளைப் பார்க்க வேண்டுவது மில்லை; ரயில்வே கால அட்டவணைப் புத்தகத்திலும், தினத்தாள்களிலும், ஒவ்வொரு ரயிலும் நிற்கும்

பிளாட்பார எண் இன்னதென்று கொடுக்கப் பட்டுள்ளது. பிளாட்பாரத்திற்குச் செல்லும்போது டிக்கட்டைச் சரிபார்க்கும் நம்நாட்டுப் பழக்கம் சுவிஸ் நாட்டில் இல்லை; பிளாட்பாரத்திற்குச் செல்வதற் கெனத்தனி டிக்கட்டும் அங்கே கிடையாது. ரயில் ஓடும்போது மட்டுமே, ரயில் கண்டக்டர் டிக்கட்டைப் பிரயாணியிடமிருந்து வாங்கிப் பார்ப்பது வழக்கம்.

புனிகுலர், ஏர்கேபிள் என்ற இருவகைப் போக்குவரவுப் பொறிகள் சுவிஸ் நாட்டில் உண்டு. புனிகுலர் என்பது மாடிப்படிபோல, படிப்படியாய் அமைக்கப்பட்டு மலைமீது செங்குத்தாய்ச் செல்லும் ஒருவகை ரயில். ஏர்கேபிள் என்பது மின்சார 'லிப்ட்' போன்றது; இது சிறிய மலையிலிருந்து பெரிய மலைக்கு மின்சாரக் கம்பி மூலம் செல்லப் பயன்படுவது. ஏர்கேபிள் வாயிலாகத்தான், கோடை காலத்தில் கால் நடைகளுக்கு உணவு அனுப்பப் படுகிறது; அவை தரும் பாலும் இதன் வாயிலாகவே கொண்டு வரப்படுகிறது.

சுவிஸ் நாட்டில் ஏரிகள் மிகுதியாக இருப்பதால், அங்கே போக்கு வரவுக்குப் படகுகள் பெரிதும் பயன்படுகின்றன. இந்நாட்டுக்குக் கடற்கரை இல்லாத தால், கப்பல் போக்குவரவு இல்லை எனலாம்; எனினும், கப்பல்கள் கட்டுவதிலும் கப்பல்கள் பற்றிய அறிவு ஆராய்ச்சியிலும் இந்நாட்டினர் முன்னணி யில் இருக்கின்றனர்.

சுவிஸ் விமானங்கள் உள்நாட்டுக்குள் மட்டு மன்றி வெளி நாடுகளுக்கும் செல்லுகின்றன; மற்ற நாடுகளின் விமானங்கள் பலவற்றைவிட இவை

மிக்க வசதியாக இருப்பது பாராட்டத்தக்கது; சுவையுள்ள உணவும் மிகுதியான பழங்களும் இவ் விமானங்களில் பிரயாணிகளுக்குத் தரப்படுகின்றன.

ஆனால், சுவிஸ் மக்களின் தேசிய வாகனம் சைகிள்தான். ரயிலில் பிரயாணம் செய்யும்போது, அவர்கள் சைகிளை தம்முடன் கொண்டு செல்வர்; சைகிளை வைப்பதற்கென ஒரு தனி வண்டி ஒவ்வொரு ரயிலிலும் உண்டு. பொது இடங்களிலும் சாலைச் சந்திப்புக்களிலும், குறுகிய இடத்தில் ஏராளமான சைகிள்களை நிறுத்தி வைக்கத்தக்க அமைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

LIBRARY 108090

## கல்வி

பாடப் புத்தகங்கள் வாயிலாக இன்றி, சூழ்நிலையைக்கூர்ந்து நோக்கிப் பொது அறிவைப் பெறுவதைச் சுவிஸ் மக்கள் கல்வியின் அடிப்படையாகக் கொள்ளுகின்றனர்; சிறுவர் கல்வி மாண்டிசோரி முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்குச் சிறு கைத்தொழில்கள் கற்றுத் தரப்படுகின்றன. மாணவர்கள் விளையாட்டுகளிலும் தொழிலிலும் படிப்பிலும் அவரவர் விருப்பப்படி செய்யவும் ஆராயவும் அக்கல்வி முறையில் வாய்ப்பு உண்டு. உயர்நிலைப் பள்ளிகள் மாணவருக்கான டிராயிங் (**Drawing**) பாடங்களை உயிரினக் கூடங்களிலேயே நடத்துவதையும் சூரிக் நகரில் கண்டேன்; அதாவது, இந்த வாரத்தில் டிராயிங் வகுப்பில் 'மான்' படம் வரைவதா யிருந்தால், உயிரினக் கூடத்தில்

U8·1

மான் இருக்கும் இடத்தின் அருகிலேயே அவ்வகுப்பு நிகழும்; மாணவர் அந்த உயிருள்ள மானைப்பார்த்தே உயிரில்லாத மான்களை வரைவர்! கலைக் காட்சி மண்டபங்கள், பொருட்காட்சிச் சாலைகள், பூங்காவனங்கள் ஆகியவற்றுக்கு மாணவரை அழைத்துச் செல்லுவது, கூத்தாடுவது, நீந்துவது, பொம்மைகள் செய்வது, இயற்கை அழகில் ஈடுபடுவது, ஆகிய நிகழ்ச்சிகளும் அரசியலாரின் எட்டு ஆண்டு இலவசக் கட்டாயக் கல்வி முறையின் உட்பகுதிகளா யுள்ளன. பிறர் கருத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்; சமூக உணர்ச்சியைப் பெருக்க வேண்டும்; பொறாமையை ஒழிக்க வேண்டும்; உலக அமைதிக்காகப் பாடுபடவேண்டும் என்ற மனப்பான்மை இளைஞரிடையே வளர்க்கப்படுகிறது.

சுவிட்சர்லந்தில் 9 பல்கலைக் கழகங்கள் உள்ளன. பல் வைத்தியம், உயிரினங்களுக்குச் சிகிச்சை செய்தல், பொறியியற்கலை, சித்திரக்கலை, சுரங்கம், விவசாயம், காட்டு நிருவாகம், இசை, பிரயாணிகளுக்குத் தொண்டு செய்வது போன்ற படிப்புகளும் இங்கே உண்டு. ஜினீவாவில், மொழி பெயர்ப்பாளராவதற்குப் பயிற்சி தரும் கல்லூரியும் இருக்கிறது; இங்கே 24 மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. சுவிஸ் பல்கலைக் கழக மாணவரில் பாதிப்பேர் வெளிநாடுகளிலிருந்து கல்வி பயில வந்தவர்களே.

சூரிக் நகரிலுள்ள வணிகர், ஏற்றுமதி இறக்குமதிப் பிரச்சினைகளைப் பற்றிய ஆராய்ச்சிப் படிப்புக்கான கல்லூரி ஒன்றை நிறுவியுள்ளனர்.

கடிகாரத் தொழில் சுவிஸ் நாட்டில் சிறப்பாக நிலவிவருவதற்கு நியூச்சேட்டால் பல்கலைக் கழகத்து ஆராய்ச்சி நிலையமும் அரசியலாரின் வானிலை மண்டபங்களும் செய்யும் உதவியே காரணம்.

## தொழில்கள்

சுவிஸ் நாட்டின் மிகுதியான உற்பத்திகள்—கம்பளி, லினன், சில்க் துணிகள், வெண்ணெய், பால், அலுமினியம், இரசாயனப் பொருள்கள், ஊசி மருந்துகள், வைத்தியக் கருவிகள், படம் எடுக்கும் கருவிகள் (**Cameras**), தொலைப்பார்வைக் கருவிகள் (**Binoculars**) இசைக் கருவிகள் ஆகியவை. ஓராண்டுக்கு நான்கு கோடி கடிகாரங்களும் இங்கே செய்யப்படுகின்றன. அச்சு வேலைகள் சுவிட்சர்லந்தில் மிக நன்றாகச் செய்யப்படுகின்றன; பல நாடுகள் தபால் ஸ்டாம்புகளை இந்நாட்டிலேயே அச்சிடுகின்றன; நம் நாட்டில் பயன்படுத்தப் பெற்ற **மஹாத்மா காந்தியடி**களின் படமுள்ள ஸ்டாம்புகள் சுவிட்சர்லந்திலேயே அச்சிடப்பட்டன. பஞ்சு ஆலைத் தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்களைச் செய்வதிலும் பலவிதமான வர்ணச் சாயங்களைச் (**Manufactured Dyestuffs**) செய்வதிலும் இந்நாட்டார் வல்லுநராயுள்ளனர்.

சுவிட்சர்லந்தில் பழ உற்பத்தியும் பால் உற்பத்தியும் மிகுதி; அமெரிக்காவில் வெள்ளி முழுவதையும் திரைப்படங்கள் தயாரிக்க ஹாலிவுட்டிலுள்ள குழுக்கள் வாங்கி விடுவதுபோலச் சுவிட்சர்லந்தில் பால் முழுவதையும் நெசில்ஸ் கம்பெனியார் சாக்லேட் செய்வதற்காக வாங்கிவிடுகின்றனர்.

சுவிட்சர்லந்தின் முக்கிய இறக்குமதி பல லட்சம் யாத்ரீகர்கள். அந்நாட்டின் பெரிய ஏற்றுமதி—ஆண்டுக்கு 52 கோடி கிலாவட் மின்சாரம்; பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளுக்கு இங்கிருந்து மின்சாரம் செல்லுகிறதாம்.

சுவிஸ் மக்களின் வெளிநாட்டு வாணிகம் வளர்ந்து கொண்டே வருகிறது; 1947-ல் அவர்கள் இந்தியாவுக்குப் பத்துக் கோடி ரூபாய் பெறுமான பொருள்களை விற்றனர்; 1949-ல் இவ்விரு நாடுகளுக்கிடையே பொருளாதார உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்பட்டது.

## விஞ்ஞான முன்னேற்றம்

நீரில் மூழ்கினாலும் சரி, கீழே விழுந்தாலும் சரி, கெடாதபடி ஓடிக் கொண்டிருக்கும் கடிகாரங்களை இப்போது நடைமுறையில் காணுகின்றோம்; ஆகாய விமானத்தில் பிரயாணம் செய்யும்போது, அந்த விமானம் எவ்வளவு வேகத்தில் பறக்கிறது என்பதை நாம் கையில் அணிந்திருக்கும் கடிகாரத்திலிருந்தே அறிந்து கொள்ளவும் இப்போது இயலும். இத்தகைய கடிகாரங்களையும் சுவிஸ் நாட்டவர் செய்திருக்கின்றனரெனின், அவர்களுடைய விஞ்ஞான முன்னேற்றத்துக்கு வேறு சான்று வேண்டுமோ!

பெனிசிலின், ராடார் இவைகளைப் போன்று இரண்டாவது உலகப்போரில் புகழ் பெற்றது டி. டி. ட்டி. (D. D. T.) என்னும் இரசாயனப்பொருள். இது மலேரியா நோயை ஒழிக்கப் பயன்படுவது;

உருளைக்கிழங்குச் செடியை வண்டுகள் சேதம் செய்தபோது, அவற்றின்மீது சுவிஸ்காரர்கள் டி.டி.ட்டி.யைத் தெளித்துப் பூச்சிகளை அழித்து இம்மருந்தின் சக்தியைக் கண்டறிந்தனராம்.

## நகரங்கள்

முக்கிய நகரங்கள் சிலவற்றில் சிறிது நேரம் தங்கிவிட்டுச் சுவிஸ் பிரயாணத்தை முடித்துக் கொள்ளுவோம்.

## பெர்ன்

700 ஆண்டுகளாக, சுவிட்சர்லந்தின் தலை நகரமாகப் பெர்ன் இருந்து வந்திருக்கிறது; இது ஓர் அழகிய நகரம். "சுவிஸ் நகரங்களுள் மாணிக்கம்" என்ற புனை பெயர் இந்நகருக்கு வழங்கி வருகிறது; ஓர் ஆற்றின் கரையில் இந்நகர் அமைந்திருக்கிறது; சிற்பக்கலை நிறைந்த கட்டிடங்கள் பலவற்றை இங்கே கண்டு களிக்கலாம்; தரைமட்டத்துக்குக் கீழ் ஐந்து மாடிகளுக்கு மோட்டார் வாகனங்களை நிறுத்துவதற்குரிய இடமும் இந்நகரில் கண்டின்புறத்தக்க காட்சிகளுள் ஒன்று.

பெர்னிலிருந்து சுவிஸ் நாட்டில் எந்த இடமும் 100 மைல் தொலைவுக்குள்தான் இருக்கிறது; இக்காரணத்தாலேயே, வேறுபெரிய நகரங்கள் இருக்க, இது தலைநகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுபோலும். சுவிட்சர்லந்துக்குச் செல்லுபவர்கள் இந்நகரில் பல நாட்கள் தங்கினால், இங்கிருந்து கொண்டு ஜினீவா, லூசர்ன் ஏரிகளுக்குச் சென்று வரலாம்;

கிரிசன்ஸ், லுகானோ போன்ற இயற்கையழகு நிறைந்த பகுதிகளுக்கும் போய்வரலாம்.

பெர்னில் சுவிஸ் குடியரசுத் தலைவரின் மாளிகையும், பாராளுமன்றக் கட்டிடமும் உள்ளன. இங்கே, 1949-ல் நமது முதலமைச்சர் **ஜவஹர்லால் நேரு** சுவிஸ் குடியரசுத் தலைவருடன் தங்கி, பாராளுமன்றத்திலும் அரியதோர் உரை நிகழ்த்தினர்; உலக அமைதிக்குப் பாடுபடும் இந்தியாவும் சுவிட்சர்லந்தும் என்றும் நண்பர்களாக இருப்பது உறுதி என்பதை அவர் அவ்வமயம் தெளிவுபடுத்தினர். பெர்ன் நகரில் சுவிட்சர்லந்திலுள்ள இந்தியத் தூதரின் அலுவலகம் **ஐங்ப்ரா ஸ்ட்ராசே** என்ற சாலையில் நிறுவப்பட்டிருக்கிறது; இப்போது நமது தூதராக இருப்பவர் **திருபாய் தேசாய்** என்பவர்; இவர் காலஞ் சென்ற புலாபாய் தேசாயின் மகனர்.

## ஜினீவா

முடியிழந்த மன்னர்கள், பதவியிழந்த பெரியார்கள், பிரஜா உரிமையைப் பறிகொடுத்த பிறநாட்டவர், திரை நட்சத்திரங்கள், அகதிகள், மாண்டுபோன சர்வதேசச் சங்கத்திற்காக ஒருகோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட மாளிகை, உயிரோடிருக்கிற சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனம், செஞ்சிலுவைச் சங்கம், செல்வம் பொழியும் சாலைகளும் கடைகளும், உல்லாசமான ஹோட்டல்கள்—இவைகளை ஒருங்கே கொண்ட அந்த அழகிய பூங்காவுக்குத்தான் ஜினீவா என்று பெயர்.

ரஷ்யாவில் நடைபெற்ற அக்டோபர் புரட்சியின்போது ஓடிவந்தவர்கட்கும் பிரெஞ்சு நாட்டிலிருந்து தப்பிவந்த கவிஞர் ரூஸ்ஸோவுக்கும் தஞ்சம் அளித்தது ஜினீவா. பிராடஸ்டண்டு மத இயக்கம் ஆதரவு பெற்றதும் இந்நகரிலேயே யாகும். இந் நிகழ்ச்சிகளை யொட்டிய சின்னங்களும் ரூஸ்ஸோ, மதப்புரட்சி வீரர் கால்வின் ஆகியோரின் சிலைகளும் இங்கே இன்றுங் காணத்தக்கன.

## சூரிக்

சுவிஸ் நாட்டிலேயே சூரிக் மிகப்பெரு நகரம். இதன் ஜனத்தொகை $3\frac{1}{2}$ லட்சம். இந்நகர் மேடும் பள்ளமுமாக நிலப்பரப்பில் அமைந்துள்ளது; நீந்துவதற்காக இங்கே அமைக்கப் பெற்றுள்ள குளம் மிகச் சிறப்புடையது. ஐரோப்பாவின் பொருளாதாரத் தலைவிதியை முடிவு செய்யும் இந்த அழகிய பட்டணத்தின் வாணிகத் தெருவான **பான்ஹாப் ஸ்ட்ராசே**யில் எப்பொருளாவது வாங்க இயலாவிட்டால் அதுவேறு எங்கே கிடைக்கும்?

---

# 5. பிரிட்டிஷ் பெண்கள்

நம் பெண்டிருக்கும் பிரிட்டிஷ் பெண்டிருக்கும் உணவிலும் உடையிலும் உள்ள வேறுபாடுகளை யாவரும் அறிவர். இவற்றைவிடப் பெரிய வேறுபாடு கள் சில உள. பிரிட்டிஷ் பெண்களின் சிறப்பியல் புகள் மிகப் பல; அவைகளை ஈண்டு ஆராய்வோம்.

பிரிட்டிஷ் சமூகத்தில், வகுப்பு வேறுபாடுகள், நமது நாட்டிலிருப்பதைப் போன்று, மிகஅகன்றவை அல்ல. பெரும்பாலும் ஒத்த சமூக அமைப்பு அங்கு நிலவுகின்றது. வேலையின்மை பிரிட்டனில் தாண்டவ மாடவில்லை. ஆகவே, வறுமையாலும் பிணியாலும் அல்லற்படுவோரையோ, பிச்சை எடுப்போரையோ, பிச்சை இடுவோரையோ, அங்கு நான் காணவில்லை. ஒருபுறம் பெரும் கோடீசுவரர்களையும், மறுபுறம் ஏழைக் குடிகளையும் கொண்ட நம் நாட்டுக் காட்சி களைப் பிரிட்டனிற் காண இயலாது. மதிப்பு வாய்ந்த ஒரு வியாபாரி நடுத்தர வகுப்புப் பெண் ஒருத்தியை இல்லாளாய்ப் பெற்று, அவ்விருவரும் வாழ்வை இனிமையாகவும் வெற்றியாகவும் நடத்துதல் அங்கே நடைமுதல் நிகழ்ச்சியே.

## வாழ்க்கைக்குப் பயிற்சி

இன்னும் ஒரு பெரிய வேறுபாடு, கல்வி அறிவு வளர்ச்சியால், ஆடவரைப் போலவே பெண்டிரும் பொழுது போக்கிலும் அறிவுத்துறைகளிலும் நாட்

டங் கொண்டவராயிருத்தலாகும். ஐந்து ஆண்டு முதல் பதினாறு ஆண்டு வரை பெண்கட்கும் கட்டாயக் கல்வி முறை, பிரிட்டனில், இருந்து வருகிறது. சமையல், துணி துவைத்தல், வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல், பரிமாறுதல், குழந்தை வளர்த்தல், தையல், தோட்ட வேலை போன்ற இல்லற வேலைகட்கும் மாணவிகட்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் பெண்களில், பல்கலைக் கழகத்துக்குச் செல்பவர் மிக மிகச் சிலரே.

சிறு வயதில் தந்தையும், வயது வந்தபின் கணவனும், முதுமையில் மகனும், பெண்ணைக் காப்பாற்றும் நம் நாட்டுப் பழக்கம் பிரிட்டனில் கிடையாது. பிரிட்டிஷ் பெண்கள் உரிமையாக வாழ்வதோடு மட்டுமன்றி, இழிவு மனப்பான்மையை நீக்கி, ஆண்களுக்குச் சமானமாகவே தாமும் வாழ்கின்றனர்.

பிரிட்டிஷ் பெண்கள் தத்தம் தாய்மாரோடு நெருங்கிப் பழகுவதைப் போன்றே, தந்தையாரிடத்தும் பழகுவர். தந்தை தம் மக்களை எவ்வளவு உருவாக்குகின்ருரோ, அதே அளவுக்குத் தாயும் தன் பங்கைச் செய்வாள். இதிலோ, அன்றி வேறு எப்பணியிலுமோ, பெற்ருேர்களுள் ஒருவரைவிட ஒருவர் தாழ்ந்தவராகக் கருதப்படுவதில்லை; அம்மாதிரி அவர்கள் ஒருவரேனும் நடந்து கொள்ளுவதுமில்லை.

### திருமணம்

காதல் முறைப்படியே, திருமணங்கள் நடைபெறுவதால், கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் எல்லாத்துறைகளிலும் நன்கு அறிந்து கொள்ளு

கின்றனர். இருவரும் ஓராண்டாவது பழகி, மற்றவரின் பழக்க வழக்கங்கள், குற்றங்குறைகள் ஆகியவற்றைக் கண்டு சம்மதித்துத்தான் மணம் முடித்துக் கொள்ளுகின்றனர். இதன்பயனாய், ஒருவருடைய வேலையில் மற்றொருவர் தக்க உதவி செய்கின்றனர். கணவன், மனைவியைத் தன் துணைவியாகவே கருதுகின்றான். மனைவியும், தான் தன் கணவனுக்கு இணையான ஆற்றல் படைத்தவள் என்ற கருத்துடையவளா யிருக்கின்றாள். இவ்வுணர்ச்சியால், இருவரும் வயதையும் மற்ற வேற்றுமைகளையும் மறந்து, இரண்டறக் கலந்து வாழ்கின்றனர்.

பிரிட்டிஷ் ஆண் மக்கள் சராசரி 25 ஆண்டிலும், பெண்மக்கள் 21 ஆண்டிலும், மணம் புரிந்து கொள்ளுகின்றனர். மணம் புரிவது இன்றியமையாததன்று. மணம் புரிந்துகொள்ளும்படி பெற்றோர் தம் மக்களை வற்புறுத்துவது மில்லை. கல்வி கற்க வைத்தலையே அன்றி, அவர்கட்கு மணஞ் செய்வித்தலைத் தம் கடமையாகப் பெற்றோர்கள் கருதுவதில்லை.

போரினால், எல்லா ஐரோப்பிய நாடுகளிலும், ஆடவர் தொகை குறைந்துவிட்டது. பிரிட்டனில், இவ்வாறு எஞ்சிய பெண்களில், ஆண்டு முதிர்ந்தும் மணமாகாதோர் தொகை 15 லட்சம், அதாவது சென்னை நகர மக்கள் தொகைக்கு ஒப்பானது. காதலிக்க ஒரு கணவனும், கொஞ்ச ஒரு குழந்தையும் இன்றித் தவிக்கும் இத் தெரிவையர்கட்கு, ஆறுதல் கூறுவார் யார்?

தன் மனத்திற்கிசைந்த நாயகனைத் தேர்ந்தெடுத்ததும், பிரிட்டிஷ்பெண் அவனுடன் தனி இல்லத்தில், வாழ்வைப் புதிதாகத் தொடங்குகின்றாள். இதன் மூலம், இவர்கள் பெரியோர்களின் ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெறுகின்றனர். நாம் எண்ணிக்கொண்டிருப்பது போல, பிரிட்டனில், கணவனிடமிருந்து மனைவியோ, மனைவியிடமிருந்து கணவனோ பிரிவுச் சீட்டுப் பெறுதல், அவ்வளவு மிகுதியாகவோ அடிக்கடியோ நடைபெறுவதில்லை.

## சிறிய குடும்பம்

ஆடவருக்குப் போர் எத்துணைச் சிரமமானதோ அதே போன்று, பிரசவம் பெண்கட்குச் சிரமமானது. எனவே பிரிட்டிஷ் பெண்கள், குடும்பத் தொல்லையைக் குறைக்க வேண்டுமென்ற விருப்பத்தால், விஞ்ஞான முறைப்படி கருப்பத்தடை செய்கின்றனர். வாழ்க்கையை இன்பமயமாக்க வேண்டுமென்றால், குடும்பம் சிறியதாயிருக்க வேண்டும் என்பது இவர்களின் கோட்பாடு. மூன்று குழந்தைகளுடைய ஒரு குடும்பத்தைக் காண்பதே அரிது. தம் குழந்தைகள் மீது பெற்றோர்கட்கு வெறுப்பு ஒன்றும் இல்லாவிட்டாலும், ஆழ்ந்த பற்று இருப்பதாகச் சொல்லிவிட முடியாது.

உதாரணமாக, **உங்கள் குழந்தையைப் பிரம்பால் அடிக்கலாமா கூடாதா?** என்ற வினாவின் மீது, தென்னிந்திய ஆசிரியர் கழகம் அடுத்த வாரத்தில், தமிழ் நாடு முழுவதும், பெற்றோர்களிடம் வாக்கெடுத்தால், பெற்றோர்களில் எத்தனைபேர் தம் மக்

களைப் பிரம்பால் அடிக்க ஆசிரியருக்கு உரிமை கொடுப்பார்கள்? சென்ற ஆண்டில், தம் குழந்தைகளைப் பிரம்பால் அடிக்கும் உரிமையை, குடியாட்சி முறைப்படி, பிரிட்டிஷ் ஆசிரியர்கட்குப் பெற்றோர்கள், பெரும்பான்மையான வாக்குகளால், அளித்தனர்.

பூகோள அமைப்பால், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில், பிரிட்டன் இருப்பதைப் போன்றே, நாகரிகப் பழக்க வழக்கங்களிலும் பிரிட்டிஷ் பெண்கள் நம் நாட்டுப் பெண்களைக் காட்டிலும் முன்னேறியும் அமெரிக்கப் பெண்களைக் காட்டிலும் பின்னடைந்தும் இருக்கின்றனர். அழகாக ஆடை அணிவதிலும், ஆடம்பரமாக நடப்பதிலும், பிரிட்டிஷ் பெண்கள் பிரெஞ்சு சகோதரிகளைப் பின்பற்றவில்லை. 18 ஆண்டு நிறைவெய்து முன், உதட்டுச் சாயம் நகச் சாயம் முதலியவை உபயோகிக்கப் பிரிட்டிஷ் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்தியப் பெண்களின் **கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்** என்ற அடக்கமும், சுவிஸ் பெண்களின் மீன்கடை ஆரவாரமும், அமெரிக்கப் பெண்களின் புதுமைப் பித்தமும், ஆஸ்திரேலியப் பெண்களின் விரைவின்மையும், ஜெர்மன் பெண்களின் அழகும் பிரிட்டிஷ் பெண்களிடம் இல்லாதன.

### நாட்டுப்பற்று

பிரிட்டிஷ் ஆடவர்களைப் போலவே, பெண்டிரும் தம் நாட்டினிடமும் அரசகுடும்பத்

தினரிடமும் பற்றுடையவர்களாக இருக்கின்றனர். பிரான்சிலிருந்து, இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து, டோவர் துறைமுகத்தை யான் அடைந்தபோது, ஓய்வுக்காக ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று, சில நாட்களில் திரும்பிவரும் பிரிட்டிஷ் பெண்கள் சிலரும் வந்தனர். எல்லோரும் பிரிட்டிஷ் சுங்கச் சோதனைக்கு உள்ளானோம். அம்மகளிர் புதிய ஒரு கடிகாரத்தை வாங்கி அது ஒன்றை மட்டுமே அணிந்திருந்துங்கூட, தாமே அதைக் கழற்றிக் காட்டி அதற்கு மனமுவந்து வரியைச் செலுத்தினர். இதிலிருந்து பெறப்படும் அவர்களின் நாட்டுப்பற்றும் நேர்மையும் மிகவும் போற்றத் தக்கவையாகும். இது போன்ற பண்பாடுகளால்தான், இரு முறைகளிலும், பிரிட்டிஷ் மண்ணில் போர் நடக்கவில்லை போலும். கெய்சரோ அன்றி ஹிட்லரோ, ஐரோப்பா முழுதும் வெற்றிக் கொடி நாட்டியுங்கூட, பிரிட்டனை மட்டும் வெல்ல முடியவில்லை என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

மான்செஸ்டர் நகரில் நான் தங்கியபோது, எலிசபெத் இளவரசியார் திருமணத்தில் உடுத்த ஆடைகள், அந்நகரப் பொருட்காட்சியில் வைக்கப் பட்டிருந்தன. இந்த ஆடைகளைக்காண...பிரிட்டனின் இரண்டாவது நகரமாகிய...மான்செஸ்டர் பெண்கள், கொட்டும் மழையில், கட்டுப்பாடாக நெடுந் தொலைவுக்கு வரிசைமுறையில், மணிக்கணக்கில் காத்திருந்ததை நான் என்றும் மறக்க முடியாது.

போரால் விளைந்த பல இன்னல்களை, பிரிட்டிஷ் பெண்கள் முகமலர்ச்சியோடு ஏற்று, ஆவன செய்தனர். தம் உரிமையிலும் உணவுப் பொருள் பங்கீட்டிலும் அரசியலார் தலையிட்டதைக் கருதாமல், நாட்டு நன்மைக்காகப் பல இடையூறுகளைப் பொறுத்தனர். பெருந்துன்பம் நேர்ந்த போதும் அவர்களின் வாழ்க்கை முறை குலையவில்லை. போர்க் காலத்தில், ஒரு முறை சர்க்கரைக் கப்பல்கள் காலந் தாழ்த்து வந்தன; பங்கீட்டுக்குப் போதிய சர்க்கரை கையிருப்பில்லாது போகவே, மிகுதியாக வைத்திருப்பவர்கள் எஞ்சுவதைப் பங்கீட்டுக் கடையிற் கொடுத்துச் சீட்டுப் பெற்றுச் சில வாரங்களில், திருப்பிப் பெற்றுக் கொள்ளலாமென அலுவலாளர் அறிவித்தனர். உடனே, பல்லாயிக்கணக்கான பெண்கள், அதிகப்படியாயிருந்த சர்க்கரையைக் கடைகளில் கொடுக்க, வரிசை முறையில், கட்டுப் பாடாகக்காத்திருந்தனர்; இது பிரிட்டன் தவிர வேறு எந்த நாட்டில் நிகழும்? "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தன்னுட்டிற்(கு) இன்னல் விளைக்கும் வினை" என்ற நெறியைப் பின்பற்றும் இவர்கள் குணம் மெச்சத் தக்கது.

## மகளிர் செய்யும் பணிகள்

பிரிட்டிஷ் பெண்கள் வீட்டுவேலை மட்டுமன்றி, வெளிவேலையும் செய்கின்றனர். ஆடவர்களே செய்தாகவேண்டும் அல்லது பெண்களே செய்தாக வேண்டும் என்ற வரையறை எந்த வேலைக்கும் இல்லை. தம்மால் செய்யமுடியும் என்பதை நிலை நாட்டவேண்டு மென்ற பிரிட்டிஷ் பெண்களின்

பேரவாவினுலும், போர்முனைக்கு ஆடவர் சென்ற போது அவர்கள் திரும்பும்வரை, ஆடவர் முன்பு செய்த வேலைகளில் பெண்கள் அமர்ந்ததாலும், இன்று பிரிட்டனில், மெல்லியலார் செய்யாத வேலையே இல்லை எனலாம்.

குறிப்பாக, தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவரில் பெரும்பாலோர் பெண்பாலரே. பிரிட்டிஷ் தொழிற் சங்கத்துத் தலைவராக ஒரு பெண் சென்ற ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரிட்டிஷ் தொழிற் கட்சிக்கு, ஆண்களிடம் இருப்பதை விடப் பெண்களிடம்தான் மிகுந்த செல்வாக்கு இருந்து வருகிறதென்பது பலரும் அறிந்ததே.

பஸ் கண்டக்டர் வேலையிலும் பல மகளிர் இருக்கின்றனர். 80 பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் இரு மாடிகளுள்ள லண்டன் பஸ்களில் ஒரே அம்மையார்தான் கண்டக்டர் வேலையைத் திறம்படச் செய்கிறார்.

உணவுச்சாலைகளில், உணவு படைப்பவர்களில் மிகப் பெரும்பான்மையோர் பெண்களே. இன்னும், நர்ஸ் வேலையிலும் ஆசிரியர் வேலையிலும், பல பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பதவியிலும் பெண்கள் உளர்.

கடைகளில், பண்டங்கள் விற்கும் வேலையாட்களில் மிகப் பலர் பெண்களே. எல்லா அலுவலகங்களிலும், டெலிபோன் இயக்குதலும் கடிதம் எழுதுதலும் செயலாளர் வேலையும் பெண்களின் தனி உரிமையாகும். தலை அலங்காரம் செய்யுமிடங்

களில், விரல் நகம் வெட்டும் பொறுப்புப் பெண்களைச் சேர்ந்ததே. பலர் நினைப்பதுபோல், இது மிக எளியவேலை அன்று. இவ் வேலையைச் செய்ய எவ்வளவு பொறுமை வேண்டுமென்பதையும் இது எத்துணை நுண்ணிய கலை என்பதையும் 'பாஷன்' நகரமாகிய பாரிசில்தான் நான் அறிந்தேன்.

பிரிட்டிஷ் தபால் நிலையத்தை நடத்துபவர்களும் பெண்களே. இதுவும் எளிதான தொழில் அன்று. நம் நாட்டில் தபால் நிலையங்கள் வானொலி உரிமைச் சீட்டு வழங்குவதையும், கொய்னு மாத்திரை விற்பதை யும் நாம் அறிவோம். மோட்டார் கார் உரிமைச்சீட்டு நாய் வைத்துக் கொள்ளும் உரிமைச் சீட்டு ஆகிய வற்றையும் பிரிட்டிஷ் தபால் நிலையங்கள் வழங்குகின் றன. அரசியலார் சார்பாக வரி வாங்கிக்கொள்ளுவ துள்பட, நம் நாட்டில், கஜானுக்கள் செய்யும் எல்லா வேலைகளையும் பிரிட்டிஷ் தபால் நிலையங்கள் செய் கின்றன. இவற்றை எல்லாம், பிரிட்டிஷ் பெண்கள், திறமையாகச் செய்கின்றனர்.

## அன்றாட வேலைகள்

மேற் கூறியவற்றால், இப்பெண்கள் வீட்டு வேலைகளைப் புறக்கணிக்கிறார்கள் என்று கொள்ளுதலாகாது. பெருஞ் செல்வர் தவிர வேறு யாருமே பணியாட்கள் வைத்துக் கொள்ளுவதில்லை. துயிலெழுந்ததும், பிரிட்டிஷ் பெண் காலை உணவை ஆக்கி, கணவனோடும் மக்களோடும் அதைப் பங்கிட்டுக்கொண்டு, தன் வேலைக்குச் செல் லுகிறாள். வேலை செய்யுமிடத்திலுள்ள உணவுச்

சாலை (Canteen)யில் பகலுணவை அவள் அருந்துகிருள். தன் வேலையை முடித்த பின்னர், இரவு உணவை ஆக்க, உரிய காலத்தில், மீண்டும் இல்லத்திற்கு வந்து விடுகிருள்; இயந்திர உதவி இருப்பதால், உணவைச் சில நிமிஷங்களிலேயே இவர்கள் தயாரித்து விடுகின்றனர். மின்சார உதவியால் உணவாக்குவதில், அமெரிக்கரின் நிலையைப் பிரிட்டிஷ் பெண்கள் எய்தாவிட்டாலும் அடுப்புப் புகையும் அப்பள வாசனைப் புகையும் அம்மங்கையர் அறியாதவையே. பிரிட்டிஷ் பெண்கட்கு ஒரு குறை உண்டு; தேங்காய் கிடைக்கவில்லை என்பதே அந்தக் குறை. அமெரிக்கப் பெண்களைப்போன்று, ஒரு டாலர், அதாவது ரூ. 4-13-0, கொடுத்து, ஒரு தேங்காய் வாங்குவதென்பது பிரிட்டிஷ்பெண்களால் இயலாது.

மனைவியைப் போலவே, கணவனும் தன் அலுவலகத்திலேயே, பகலுணவை உட்கொள்ளுவான். குழந்தைகட்குப் பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசியலார், பள்ளிக்கூடத்திலேயே, பணம் பெருமல், பகல் உணவைத் தருகின்றனர். சிறுவர், சிறுமியரை வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்துக்கும், பள்ளிக்கூடத்திலிருந்து மீண்டும் வீட்டுக்கும் கொண்டுவர நகராண்மைக் கழகங்கள் கட்டணமில்லாத ஊர்திகளும் அமைத்திருக்கின்றனர்.

இவை போன்ற பொது நலத் திட்டங்களாலும் எல்லா வேலைகளிலும் ஆடவரின் உதவி கிடைப்பதாலும், பிரிட்டிஷ் பெண் நாள்தோறும் 16 மணி நேரம் வேலை செய்கிருள். தம் வேலைகளை, ஒவ்வொரு கிழமைக்கும் ஒவ்வொன்ருக வகுத்துக் கொள்ளு

கிருள். ஒரு நாள் வீடு சுத்தம் செய்யவும், ஒரு நாள் துணி துவைக்கவும், ஒரு நாள் இஸ்திரி போடவும், ஒரு நாள் கடைத் தெருவுக்குச் செல்லவும், ஒரு நாள் விளையாட்டாகப் பொழுது போக்கவும் ஒதுக்கிக் கொள்ளுகிருள். ஒவ்வொரு மணி நேரமும் சரியான வழியில் கழிகிறதா என்று கவனித்துச் சற்று நேரங் கூட ஒழிவில்லாமல், இயந்திரம் போல் உழைப்பதும் பிரிட்டிஷ் பெண்ணின் வழக்கம்.

## பொது வாழ்வு

பொதுவாழ்விலும் பிரிட்டிஷ் பெண்கள் பெரும் பங்கெடுத்துக் கொள்ளுகின்றனர். உலகிலேயே மிகப் பெரிய—லண்டன்—நகராண்மைக் கழகத்தின் தலைவராக ஒரு பெண் இரண்டாண்டுகட்குமுன் விளங்கினள். காமன்ஸ் சபையிலும் பெண் உறுப்பினர் உளர்.

இப்பெண்கள் பேரிலக்கியம் எழுதுவதிலும், பொது நல இயக்கங்களிலும் நாடகங்களிலும், பாலே (Ballet) என்னும் குழு நடன நுண்கலையிலும், வர்ணச்சித்திரம் தீட்டுவதிலும், எண்ணற்ற மற்றத் துறைகள் பலவற்றிலும், பெரிதும் ஈடுபட்டுளர். பாடகர்களும் சிற்பிகளும் பிற கலை வல்லாரும் பெண்பாலரிடையேயும் உளர். சுருங்கச் சொன்னல், ஆடவர் தமதே என்று எண்ணி வந்த இடங்கள் அனைத்திலும் பெண்டிரும் புகுந்து விட்டனர்.

பழமையில் ஊறிய பிரிட்டிஷார், இந்த நூற்றூண்டில்தான் பெண்கட்கு வாக்குரிமை தந்தனர் சொத்துரிமை இவர்கட்கு வழங்கப்பட வில்லை. எனினும், பிரிட்டிஷ் ஆடவர் பெண்டிருக்குப் பெரிதும் மதிப்புச் செய்வர். இவற்றையொட்டிய மரபுகள் பலப்பல. பிரிட்டிஷ் பெண்கள் இம்மதிப்பைக் காப்பாற்றுவர். சான்றாக, ரயிலிலோ பஸ்ஸிலோ பெண்கட்கு ஆடவர் இடமளித்தால், பிரிட்டிஷ் பெண்கள் அதை ஏற்றுக்கொள்ளுவர். அமெரிக்கப் பெண்கள் இத்தகைய உதவியை மறுப்பார்கள். "உனக்கு நான் என்ன குறைவோ" என்பது அமெரிக்கப் பெண்களின் மனப்பாங்கு.

சீட்டாட்டத்தைப் பற்றிய சிறு குறிப்புடன், பிரிட்டிஷ் பெண்களிடமிருந்து விடுதலைபெறுவோம். பணம் வைத்துச் சீட்டாடும்போது, இரு குடும்பத்தவர், ஒரு குடும்பத் தலைவனும் மற்றொரு குடும்பத் தலைவியும் ஒரு பக்கமாகவும், எஞ்சிய இருவரும் மற்றொரு பக்கமாகவும் இருந்து ஆடுவர். இதனால், யார் வென்றாலும், பணம் மனைவியிடமிருந்து கணவனுக்கோ அல்லது கணவனிடமிருந்து மனைவிக்கோதான் மாறும்.

———

# 6. பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள்

நாகரிகத்தின் அடிப்படையும் அரசியல் எழுச்சி தொடங்கும் இடமும் பல்கலைக் கழகமாகும். நம் நாட்டுச் சுதந்திர இயக்கத் தலைவர்கள் அனைவரும் பல்கலைக் கழகங்களிற் கல்வி பயின்றவரே யாவர். ஏனைய நாடுகளிலும் இவ்வாறேயாம். உலகம் விஞ்ஞானத்திலும் தொழில் வளர்ச்சியிலும் முன்னேறி வருகின்றது. இத்துறைகளில் புதிய புதிய ஆராய்ச்சிகள் நடத்த உதவியாயிருப்பவை ஆங்காங்கேயுள்ள பல்கலைக் கழகங்களேயாம். இதற்குச் சான்றாக, ரஷ்யாவில் 1910-ல் 13 பல்கலைக் கழகங்களும் 1937-ல் (350 தொழிற் கல்லூரிகளுட்பட) 750 பல்கலைக் கழகங்களும் இருந்ததைக் குறிப்பிடலாம்.

உலகின் சிறந்த பல்கலைக் கழகங்கள், அரசியல் துறையில் முன்னேற்ற மடைந்துள்ள பிரிட்டனிலும் அமெரிக்காவிலுமே உள்ளன. இவை வேறு வேறு முறைகளில், நாட்டு மக்களின் பண்பாடு, சூழ்நிலை, வாழ்க்கை நெறி முதலாயவற்றுக் கேற்ப அமைந்துள்ளன. பிற நாடுகளிலுள்ள பல்கலைக்கழக முறைகள் இவ்விரண்டில் ஏதாவதொன்றைப் பின்பற்றியனவாகவே உள்ளன. ஆஸ்திரேலியாவில் இவ்விரண்டுங் கலந்த ஒருதிட்டம் கையாளப்படுகிறது.

## சில வேறுபாடுகள்

பிரிட்டிஷ் அமெரிக்கப் பல்கலைக் கழகங்கட்கிடையேயுள்ள சிறப்பான வேறுபாடு

ஒன்று உண்டு. அமெரிக்காவில், ஓரிடத்திலேயே உள்ள பல கல்லூரிகளின் தொகுதியே பல்கலைக் கழகம் எனப்படுகிறது. பட்டம் வழங்கும் உரிமை பல்கலைக் கழகங்கட்கு மட்டுமேயன்றிக் கல்லூரிகட்கும் உண்டு. பிரிட்டனில் கல்லூரிகளை மேற்பார்வையிட்டு அவற்றை இணைக்கும் கழகங்களாகவும் அக் கல்லூரிகளில் பயிலும் மாணவருக்குப் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கும் நிலையங்களாகவும் பல்கலைக் கழகங்கள் உள்ளன. இந்தமுறையே இந்தியாவில் இருப்பதை நாம் அறிவோம்.

பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில், மிகப் பெருவாரியான ஆசிரியர் இருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவைப்போல், 6 அல்லது 7 மாணவருக்கு ஓர் ஆசிரியர் இல்லாவிடினும், பிரிட்டனில் 10 மாணவருக்கு ஓர் ஆசிரியர் இருந்தது இந்தியாவிலிருந்து சென்ற எனக்கு வியப்பாகவே இருந்தது.

## பிற சிறப்புக்கள்

விளையாட்டுக்குக் கொடுக்கப்படும் சிறப்பு மிகுதியானது. ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் என்றதும் பலருக்குப் படகுப்போட்டிதான் நினைவுக்கு வருகிறதுஅல்லவா? மொழி ஆராய்ச்சியிலும் பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள் சிறந்த பங்கெடுத்துக் கொள்ளுகின்றன. ஆங்கில அகராதிகளிற் சிறந்தவை ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் வெளியீடுகளேயாம்.

## வெளிநாட்டு மாணவர்

பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களின் பெருமைக்குச் சிறந்த காரணம், இவை உலகுக்கே கல்வி கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாகும். சில ஆயிரம் அமெரிக்கர் உள்பட வெளிநாட்டவர் எல்லோரும் பிரிட்டனுக்கு மாணவராய் வருவதைப் பற்றிப் பிரிட்டிஷார் மகிழ்ச்சியடைகின்றனர்.

இந்திய மாணவர் மட்டும் பிரிட்டனில் பத்தாயிரம் பேருளர். இவர்களில் பலர் உணவு விடுதிகளிலேயே இருக்கின்றனர். சிலர் தனிக் குடும்பங்களுடன் தங்குகின்றனர். தலைமுறை தலைமுறையாக வெளிநாட்டு மாணவர்களைத் தம் வீடுகளில், பணம் வாங்கிக் கொண்டு விருந்தாளியாக **(Paying Guest)** ஏற்கும் குடும்பங்கள் பிரிட்டனில் மிகுதியாக இருக்கின்றன. இக்குடும்பப் பெண்கள் தமது விருந்தினரைத் தாயன்போடு பேணி வருவது பாராட்டுக்குரியது. பிரிட்டிஷ் இளைஞர் உணவு விடுதிக் கழகத்தார் **(British Youth Hostels' Association)** பெருநகரங்களிலெல்லாம் மாணவருக்கான விடுதிகளை அமைத்துள்ளனர்.

வெளிநாட்டு மாணவர்கள் இத்துணைப்பேர் பிரிட்டனுக்கு ஏன் வருகிறார்கள் என்பதை அறியச் சென்ற ஆண்டில் ஒரு பிரிட்டிஷ் பத்திரிகை வாக்கெடுத்ததில், ஆக்ஸ்போர்டில் படிக்கும் மாணவரில் 100-க்கு 15 பேர் தாம் வாழ்க்கையை அனுபவ வாயிலாக அறிந்துகொள்ள வந்ததாயும், மேலும் 15 பேர் தமக்குத் தம் அரசியலார் உதவிச் சம்பளம் தந்ததால் வந்ததாயும், 20 பேர் தமக்குக் கணவன் அல்லது

மனைவி தேடுவதற்காக வந்ததாயும் எஞ்சிய பாதிப் பேர் மட்டுமே கல்வி கற்க வந்ததாயும் கூறினராம். சராசரியில் வெளிநாட்டு மாணவர் ஒவ்வொருவரும் 4,700 ரூபாய் ஆண்டுதோறும் செலவிடுவதாயும் அப் பத்திரிகை வெளியிட்டது.

## மாணவரும் ஆசிரியரும்

பிரிட்டனில் மாணவர்கள் கட்டுப்பாடாகவும் ஒழுங்காகவும் நடந்துகொள்ளுகின்றனர். ஆசிரியரும் மாணவரும் உயர்வு தாழ்வு மனப்பாங்கின்றி ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகுகின்றனர். விரும்பிய போதெல்லாம் மாணவர் தம் ஆசிரியரை எளிதில் காண இயலும். ஆசிரியர்களிற் பலர் பேரறிஞராக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நூல் நிலையங்கள் பல நூறாயிரம் நூல்கள் உடையனவாக இருக்கின்றன. பல மாணவர் தம் நேரத்திற் பெரும் பகுதியை இந்நிலையங்களிலும் விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைகளிலும் பொருட்காட்சிச் சாலைகளிலுமே கழிப்பர்.

## மிகப் பெரிய பல்கலைக் கழகம்

பிரிட்டனின் மிகப் பெரிய பல்கலைக் கழகம் தொழிலாளர் கல்விக் கழகத்தாரால் நடத்தப்படுகிறது. நூறாயிரம் மாணவருடைய இக்கல்வி நிலையம் பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள், கூட்டுறவு மன்றங்கள், தொழிலாளர் இயக்கம் இவற்றின் கூட்டு முயற்சியால் நடைபெறுகிறது. பல பொது இடங்களில் உழவர், சுரங்கத் தொழிலாளர், ரயில்வே ஊழியர் ஆகியோர் தம்வேலை முடிந்ததும் கல்வி கற்கின்றனர்.

## லண்டன் பல்கலைக் கழகம்

லண்டன் பல்கலைக் கழகத்தில் ஒரு வகுப்புக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பம்பாய் இராச்சிய முதலமைச்சரின் மகன் **கேர்** தம்முடைய பி எச். டி. வகுப்பில் நடந்த **அறிஞர் லாஸ்கியின்** சொற்பொழிவுக்கு என்னை அழைத்தார்.

கேட்பினும் கேளாத் தகையவே, கேள்வியால்
தோட்கப் படாத செவி.

என்பது வள்ளுவர் வாக்கு அன்றோ? ஆகவே, இவ்வறிஞரின் சொற்பொழிவைக் கேட்க யானும் அவருடன் விரைந்தேன். லண்டனின் நடுப்பகுதியில் இந்தியா ஹவுசிலிருந்து கூப்பிடு தொலைவில், லண்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த லண்டன் பொருளாதாரப் பள்ளிக்கூடம் இருக்கிறது. சரியாகப் பன்னிரண்டு மணிக்குச் சொற்பொழிவு தொடங்கும். அதற்கு 20 நிமிஷங்கள் முன்னரே, இருவரும் பள்ளிக்கூட வாசலிற் கால்வைத்து விட்டோம். தேவையில்லாத புத்தகங்களையும் உடைகளையும் தொப்பிகளையும் அதற்கென உள்ள அலுவலகத்திற் கொடுத்துவிட்டுச் சொற்பொழிவு நடக்கவிருந்த மண்டபத்துக்குச் சென்றோம்.

## லாஸ்கியின் வகுப்பு

அம்மண்டபத்தின் வாயிலில் பலநூறு மாணவர் வரிசை முறையில் காத்துக்கொண் டிருந்தனர். அவ்வகுப்பு மாணவர் மட்டுமன்றி, விஞ்ஞானம் கணிதம் போன்ற துறைகளில் மேற்பயிற்சி பெறுபவரும்

அச்சொற்பொழிவுக்குத் தாமே வந்திருந்தனர். உரிய நேரத்திற் கதவு திறக்கப்பட்டதும், எல்லோரும் இடத்துக்கு முந்தினர். இது, நம் நாட்டில், திரைப்படங்களுக்கு மக்கள் செல்லுவது போன்ற காட்சியாயிருந்தது. போதிய இடம் இல்லாததால், பல மாணவ மாணவிகள் சன்னல்களில் இருந்தனர்; சிலர் மாடிப்படிகளில் நின்றனர்; வேறு சிலர் ஆசிரியருக்கு அருகில் தரையில் அமர்ந்தனர். லண்டன் பல்கலைக் கழகத்தில் நான் இக்காட்சிகளைக் காணலாம் என்று எதிர்பார்க்கவே இல்லை!

ஹரால்டு லாஸ்கி ஒரு சிறந்த கல்விமான்; ஆங்கில மொழியில் நிரம்பிய புலமை உடையவர்; குடி ஆட்சி முறையைப் பற்றியும் அரசியல் தத்துவங்களைப் பற்றியும் அரிய கருத்துக்களை வெளியிட்டிருப்பவர்; ஆதாரமான நூல்கள் பலவற்றை இயற்றியிருப்பவர்; பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் மூளைகளில் ஒருவர்; ௬ ராண்டுகளுக்குமுன் அக்கட்சியின் தலைவராயிருந்தவர்; இந்தியா மீதும் இந்தியர் மீதும் பேரன்புடையவர். இவர் ஓர் யூதர். யூதரின் இஸ்ரேல் அரசியலாரை இந்தியா ஆதரிக்க வேண்டுமென்பது இவர் கருத்து.*

மேடையில் ஆறு அடி தொலைவுக்குள் நடந்துகொண்டும், இடையிடையே தண்ணீர் பருகிக்கொண்டும், நின்றவண்ணமே, ஆசிரியர் லாஸ்கி ஒரு மணி

* அறிஞர் லாஸ்கி 1950-ல் காலமானர்; இஸ்ரேல் அரசியலாரை இந்திய அரசியலார் அண்மையில் ஆதரித்துள்ளனர்.

நேரம் சொல்மாரி பொழிந்தார். ஒரே அளவான கம்பீரமான ஒலியில், இனிமையும் தெளிவும் சேர்ந்த குரலில், தங்குதடையின்றிச் சீரிய முறையில், அருமையான பொருள்களைப் பற்றிக் கடல்மடை திறந்ததுபோல், உயரிய நடையில் லாஸ்கி பேசினர். அவர் அன்று பேசியது **பேச்சுச் சுதந்திரம்** என்னும் பொருள் பற்றியது. அவ்வப்போது இக்கால அரசியல் நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டித் தம் கருத்துக்களை அவர் விளக்கினர். பல மேற்கோள்களையும் படித்துக் காட்டினர். ஆசிரியரின் ஒவ்வொரு சொல்லையும் எல்லா மாணவரும் கூர்ந்து கவனித்துப் பல குறிப்புக்களை எழுதிக்கொண்டனர். இக்குறிப்புக்களைக் கொண்டு தனித்தனியே ஆசிரியருடன் பின்னர், விவாதிப்பார்கள் என்றும் அறிந்தேன்.

சொற்பொழிவு முடிந்ததும், மறு சொற்பொழிவு எப்போது என்ற ஆவலான கேள்வியோடு, மாணவர் வகுப்பு அறையை விட்டு வெளியேறினர். ஆனல், அதற்குள் நான் அட்லாண்டிக் பெருங் கடலைக் கடந்து அமெரிக்காவுக்குச் சென்றுவிடுவேனதலால், மீண்டும் லாஸ்கியின் சொற்பொழிவைக் கேட்க இயலாதே என்று ஏமாற்றத்துடன் லண்டன் பல்கலைக் கழகத்திலிருந்து விடைபெற்றேன்.

# 7. யான் கண்ட பொருட்காட்சிகள்

எனது ஆறுமாத கால உலகச் சுற்றுப் பிரயாணத்தின்போது, மூன்று பெரிய பொருட்காட்சிகள் நிகழ்ந்தன. இவை அனைத்துமே ஐரோப்பாவில் தான் நடைபெற்றன. இந்த மூன்று காட்சிகளையும் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

முதலாவது பொருட்காட்சி 1948 ஆகஸ்டில் பிரிட்டனின் தலைநகரான லண்டனில் நடைபெற்ற இயந்திரக் கருவிகள் பொருட்காட்சி; அடுத்தது செப்டம்பரில் செக்கோசுலவகியாவின் தலைநகரான பிராஹாவில் நடைபெற்ற வர்த்தகப் பொருட்காட்சி. கடைசிப் பொருட்காட்சி, அக்டோபரில், பிரன்சின் தலைநகரான பாரிசில் நடைபெற்ற உலக மோட்டார் க்கார் பொருட்காட்சி.

இம்முப்பெரும் காட்சிகளுக்கும் பல ஒற்றுமைகள் இருந்தன. இவை யாவும் மிகப் பெரும் அளவில், பல லட்சம் ரூபாய்ச் செலவில் நடைபெற்றன. இவற்றுக் கான ஏற்பாடுகள் பல மாதங்களாகச் செய்யப் பட்டன. காட்சிகளைக் காண வரவேண்டுமென்று உலக முழுவதற்கும் அழைப்புக்கள் அனுப்பப்பட் டன. ஒரே கட்டிடத்தில் இடம் போதியதாயில்லாத தால், பல மாடிகளுள்ள பலகட்டிடங்களில் காட்சியின் பகுதிகள் தனித்தனியே அமைக்கப் பெற்றன. காட்சி நடந்தநாட்டுமொழியை அறியாதவரும் எல்லா

நிகழ்ச்சிகளையும் கவனிப்பதற்கு உதவியாக, மொழி பெயர்ப்பாளர்களையும் காட்சி நிருவாகிகள் நியமித்திருந்தனர். பொருட்காட்சிக்குள்ளே செல்ல வாங்கும் டிக்கட்டுடன் ஒரு 'பிளான்' கொடுத்தனர். தீப்பிடித்தால் நாம் இருக்கக்கூடிய எந்த இடத்திலிருந்தும் வெளியே செல்ல எது மிகச் சுருக்கமான, சுலபமான வழி என்பது இந்தப் பிளானில், பால் மணம் மாருப் பச்சிளங் குழந்தையும் புரிந்து கொள்ளும்படி நன்ருகக் காட்டப்பட்டிருந்தது.

எந்த இடத்தில், எந்தப் பகுதி காட்டப்படுகிறது, எத்தனை விதமான கடைகள்...ஸ்டால்கள்...உள, எந்த ஸ்டால் எங்கே இருக்கிறது என்பன போன்ற விவரங்கள் அடங்கிய புத்தகங்களும் படங்களும் பொருட்காட்சியில் வியாபாரம் முடிப்பதற்குரிய சட்டதிட்டங்கள் அடங்கிய பிரசுரங்களும் யாவருக்கும் வழங்கப்பட்டன.

பொருட்காட்சி நடந்த இடத்துக்குச் செல்ல, தனி ரயில்கள் விடப்பட்டன. காட்சியின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குப் போய்வர பஸ் வசதி செய்யப்பட்டிருந்தது. தபால், தந்தி, டெலிபோன் நிலையங்களும், பேங்குகளும், சினிமா, நாடக, ரயில், கப்பல், ஆகாய விமான டிக்கட்டுகள் விற்கும் கடைகளும், ஹோட்டல்களும், ஓய்வு எடுத்துக்கொள்ளும் அறைகளும், முதல்சிகிச்சை செய்யும் இடமும் விசாரணைகளுக்குப் பதில் கூறும் அலுவலகங்களும் காட்சிச்சாலையிலேயே ஆங்காங்கு இருந்தன. கடிதங்களை டைப் அடித்துக்கொடுக்கும் அலுவலகங்களும்

பொருள்களைக் கொள்வோரும் கொடுப்போரும் கூடிப்பேசும் அறைகளும் இம் மண்டபங்களில் இருந்தன.

குறிப்பாக, பிற நாடுகளிலிருந்து வந்திருந்த விருந்தினர்களுக்குத் தக்க உதவிகளை, உடனடியாக அளிப்பதற்காக, அவர்கட்கு அடையாளச் சீட்டு (**Badge**) கொடுக்கப்பட்டது. அவர்கள் ஏராள மானவர் இக்காட்சிக்கு வருவதற்குத் தூண்டு கோலாக, அவர்களுக்குப் பிரயாண டிக்கட்டுகள் மலிவான விலைக்கு விற்கப்பட்டன. 'விசா' (**Visa**) என்னும் ஒரு நாட்டுக்குள்வர அந்தநாட்டு அரசிய லார் கொடுக்கும் அனுமதி எளிதாய்த் தரப்பட்டது. அவர்களுடைய தபால்கள் தனி இலாகா மூலம் பொருட்காட்சி நிருவாகிகளால் சேர்க்கப்பட்டன.

விற்பனை செய்யப்படும் பொருள்களின் படங் களும் பார்வையாளருக்கு வழங்கப்பட்டன. ஒரு பொருளைவாங்கிவிட்டால், அதை உலகின் எப்பகுதிக் கும் கப்பலில் ஏற்றியனுப்பிவைக்கும் பணியைத் திறமையாயும் பொறுப்பாயும் செய்யும் வணிகக் குழு வினரும் இக்காட்சிகளில் இருந்தனர். எந்தநாட்டில், எந்தப் பொருளை இறக்குமதி செய்ய எவ்விதமான சட்டம் அல்லது தடை அமலிலுள்ளது, அங்கு அதன் இறக்குமதிவரி எவ்வளவு ஆகிய விவரங்களைச் சரிவரத் தெரிந்த அலுவலரும் இக்காட்சிகளில் இருந்தனர். இக்காட்சிகள் ஒவ்வொன்றிலும் பல லட்சம் மக்கள் வந்து கலந்துகொண்டனர்; பத்திரி

கைகள், அவ்வப் பொருட்காட்சியைப் பற்றித் தனி மலர் வெளியிட்டு அவற்றை விளம்பரம் செய்தன.

இப் பொருட்காட்சிகள் வெற்றிகரமாக நடக்க உரிய அரசியலார் பேருதவி புரிந்தனர். மேலும், இக் காட்சிகளின் எல்லாத் துறைகளிலும், பெண்டிரும் முழுதும் ஈடுபட்டுத் தாங்களும் நல்ல காட்சிப் பொருள்களாக இருந்தனர்! இன்னொரு முக்கியமான ஒற்றுமையையும் குறிப்பிட வேண்டும். இம்மூன்று காட்சிகளுள், ஒன்றிலேனும் சிவப்புத் தொப்பிகளை, அதாவது போலீசாரை (அமெரிக்காவில் சிவப்புத் தொப்பி என்றால் ரயில்வே போர்ட்டர் என்று பொருள்) யான் காணவில்லை. இனி, தனித் தனியாக இப் பொருட்காட்சிகளைக் கவனிப்போம்.

## லண்டன் பொருட்காட்சி

1939 முதல் 1945 வரை நடந்த போரால் பிரிட்டனின் உற்பத்தி அளவு குறையவில்லை. பிரிட்டிஷார் தங்களுடைய உற்பத்தியை விரைவு படுத்தி, அவைகளுக்குப் பண்ட மாற்றாகத் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்பதைப் பிரிட்டிஷ் மக்களுக்கு உணர்த்துவதற்காகவும், பிரிட்டனின் ஏற்றுமதியை மேலும் பெருக்கவும் தொழில் திறமையில் பிரிட்டிஷ் நிபுணர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை ஏனைய நாட்டினருக்குக் காட்டவும் இப்பொருட்காட்சி இயந்திர வியாபாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்டது. இயந்திரம் செய்பவரும் விற்பவரும் மட்டுமன்றி

இயந்திர நுட்பங்களை விளக்கும் ஆற்றல் பெற்றவர்களும், இயந்திர ஆராய்ச்சியைப் பற்றிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வெளியிடுவோரும் தம் அலுவலகங்களை இக் காட்சியில் அமைத்திருந்தனர்.

இயந்திரம்தான் இன்றைய நாகரிகத்தின் அடிப்படை. விவசாயத்தைப் பெருக்குவது இயந்திரம்; பல வகை உணவுகளைத் தயாரிப்பதும் இயந்திரம்; மானத்தைக் காக்க நாம் உடுக்கும் துணியை உற்பத்தி செய்வதும் இயந்திரம்; அறிவை வளர்க்க நாள்தோறும் நாம் படிக்கும் பத்திரிகையை அச்சிடுவதும் இயந்திரம்; ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மனிதன் செல்ல உதவுவதும் பலவகை இயந்திரங்கள் தான்; நாம் நம்மைத் தற்காத்துக் கொள்ள உதவுவதும் இயந்திரம். இத்தகைய இயந்திரங்களின் உற்பத்தியில் பிரிட்டன் உயர்நிலை எய்தியிருப்பது இக் காட்சியிலிருந்து தெளிவாகத் தெரிந்தது.

மேனாடுகளின் பொருளாதாரச் செழிப்புக்குக் காரணமே இயந்திரங்கள்தான். இயந்திர உதவியோடு ஒரு மணி நேரம் வேலை செய்பவன் 10 மின்சார பல்புகளைத் தயாரித்தால், அதைவிடச் சிறந்த இயந்திரத்தோடும் மின்சார உதவியோடும் அதே நேரத்தில் அதைப்போல இருமடங்கு பொருள்களைச் செய்துவிட இயலும்; ஆகவே, உற்பத்தியையும் தொழிலாளியின் ஓய்வையும் அதிகமாக்கவும் நாட்டின் மொத்த வருவாயைப் பெருக்கவும் பெருகிக் கொண்டேவரும் மக்களின் தேவைகளை நிறைவேற்ற

வும், இன்னும் சிறந்த உற்பத்தி இயந்திரங்களைக் கண்டு பிடித்தாக வேண்டும். வறுமையை ஒழிக்க மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும், விஞ்ஞான உதவியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணரும்படியாக இந்தக் காட்சி அமைந்திருந்தது.

இயந்திரக்கருவிகள், தூசி துப்புரவு செய்யும் இயந்திரங்கள், ஆக்ரா போடும் இயந்திரங்கள், கட்டிடங்களையோ கனத்த பொருள்களையோ தூள் தூளாக்கும் இயந்திரங்கள், அறுக்கும் இயந்திரங்கள், மின்சாரத்தால் இயங்கும் சுத்தியல், சக்கரங்களின் பல்லை உண்டாக்கும் இயந்திரங்கள், அறைக்கும் இயந்திரம், மின்சாரத்தால் இயங்கும் கொல்லர் பட்டறை போன்ற எண்ணிறந்த இயந்திரங்கள் இக் காட்சியில் இயங்கக் கண்டேன்.

உணவருந்திய பின்னரோ வேறுநேரத்திலோ ஈரக்கையைத் துடைப்பதற்கும் காயவைப்பதற்கும் உதவும் ஓர் இயந்திரம் வைக்கப்பட்டிருந்தது. இதன் உயரம் நான்கு அடி இருக்கலாம். இஃது மின்சாரத் தால் இயங்குகின்றது. இதன் எதிரில் நின்று, நம் காலுக்கு அருகிலுள்ள ஒரு பொத்தானை மிதித்தால், இக்கருவி வேலை செய்யும். நம் கைக்கு நேர் எதிரில் இருக்கும்படி இக்கருவியின் வாய் அமைக்கப்பட்டிருக் கிறது. இரு கைகளையும் காட்டினால், ஒரு நிமிஷத்தில் இக்கருவி அவைகளை உலர்த்தி விடுகிறது. இதுவும் விஞ்ஞான வளர்ச்சியால் நிகழும் ஓர் அற்புதம். இது கையைத் துடைக்க மிகவும்சுகாதாரமான முறையாம். இதனால் கைக்குட்டைகளும் இனி வேண்டுவதில்லை

என்று கூறலாம். இந்த இயந்திரம் மட்டும் சென்னை நகர் எங்கும் இருந்தால், குழாய்த் தண்ணீர் பிரச்சினை பாதிக்குமேல் தீர்ந்துவிடும் அல்லவா?

இக்காட்சிகளில் கலந்துகொண்ட வணிகர், உற்சாகத்தோடும் பெருமையோடும் காணப்பட்டனர். உதாரணமாக, "இப்போது நடக்கும் இயந்திரப் பொருட்காட்சியில் எங்கள் கடை இன்ன இடத்தில் இருக்கிறது அதைப் பார்வையிடத் தவறாதீர்கள்" என்று மேலச்சிட்ட கடிதத்தாள்களை வணிகர் பயன்படுத்தினர். விளம்பரக் கலையில் இந்த நூற்றாண்டில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். டெலிபோனில் ஒருவர் நம்மைக் கூப்பிட்டதும், கூப்பிட்டவரின் டெலிபோன் எண்ணை நம்முடைய டெலிபோனுக்கு அருகில் ஒரு சுவிட்சுபோர்டில் காட்டும் கருவியையும் பிரிட்டிஷார் கண்டுள்ளனர். அதுவும் இக்காட்சிச் சாலையில் சிறப்பாகக் காணப்பட்டது.

ஒரு சில பவுண்டுகள் எடை முதல் பல நூறு டன்கள் எடை வரையுள்ள இயந்திரங்களும் அங்கே இருந்தன. பிரிட்டிஷ் சப்ளை மந்திரி **ஜார்ஜ் ஸட்ராஸ்** காட்சியைத் திறந்துவைக்கும்போது 35 மிலியன் பவுன் (46 கோடி ரூபாய்) மதிப்புள்ள இயந்திரங்களை 1949ல் பிரிட்டன் உற்பத்தி செய்யுமென எதிர்பார்ப்பதாகக் கூறினர். நல்ல வேளையாக யானும் ஓர் இயந்திரமாக மாறுவதற்கு முன்னதாக அக்காட்சி நடந்த மண்டபத்திலிருந்து வெளியே வந்து விட்டேன்.

## பிராஹாப் பொருட்காட்சி

போருக்குமுன்பு செக்கோசுலவகியா தொழில் வளம் நிரம்பிப் பொருளாதாரத் துறையில் மிகவும் மேம்பாடு அடைந்திருந்தது.

கடந்த மூன்றாண்டுகளில் இந்நாட்டின் அரசியல் நிலையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாறுதல்களால், இப்போது தொழில்கள் நல்ல நிலையிலில்லை என்ற கருத்து வெளியுலகில் இருந்து வருகிறது. தொழில்களை அரசியலாரின் உடைமையாக்கிய ஈராண்டுத் திட்டம் வெற்றிகரமாய் நடந்திருப்பதாக உலகத்தாருக்குப் பறை சாற்றவும், திட்டமிட்டுப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால் ஏற்படும் நற்பலன்களைச் செக் மக்களுக்குத் தெரிவிக்கவும் இக்காட்சி அமைக்கப்பட்டது.

முக்கியமாக, தொழிலாளர் தம் திறமையைப் பற்றித் தாம் உள்ளக்களிப்படைய வேண்டும் என்பதற்காகப் பொருட்காட்சியைக் காணத் தொழிற்சாலைகளிலிருந்து அவர்கள் கூட்டம் கூட்டமாக அழைத்துவரப்பட்டனர். மாணவர் கட்டணமின்றி அனுமதிக்கப்பட்டனர். காட்சி விழா படமாக எடுக்கப்பட்டு நாடு முழுவதும் எல்லாக் கல்லூரிகளிலும் காட்டப்பட்டது. வானொலியில் இக்காட்சியைப் பற்றிப் பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. இக்காட்சி நினைவாகப் புதிய தபால் ஸ்டாம்புகள் வெளியிடப்பட்டன.

கிழக்கு ஐரோப்பாவில் உள்ள மற்ற நாடுகளி லிருந்தும் காட்சிப் பொருள்கள் வந்திருந்தன. தொடக்க நாள் காட்சியை மட்டும் மூன்று லட்சத் துக்கு மேற்பட்டவர் கண்டு இன்புற்றனர்.

பீங்கான் (Glass) தொழிலில் செக் நாடு அடைந் துள்ள முன்னேற்றம் இக்காட்சியைக் கண்டவர் மனத்தைக் கவர்ந்தது. உலோகத் தொழில்கள், விவசாயக்கருவிகள், இசைக் கருவிகள், பொம்மை கள், பத்திரிகைக் காகிதம், விதவிதமான தோல் சாமான்கள் ஆகியவற்றில் பிறநாடுகளிலிருப்பதை விடச் செக் தொழில் சிறப்பாயிருப்பதை இக்காட்சி எடுத்துக்காட்டியது. இக்காட்சியின்பயனாக அமெரிக்க-செக் வர்த்தக உடன்பாடு ஏற்பட்டது.

ஐரோப்பாவுக்குச் செல்லும் நம் நாட்டினரில் பெரும்பாலோர் செக் நாட்டுக்குச் செல்லுவதில்லை, செக் நண்பர் பலர் அவர்கள் சந்தித்த முதல் இந்தியர் யானே என்று கூறினர். இந்தியத் தூதரும் அப்போது அங்கு இல்லை*. இக்காரணங்களால் பிராஹாக் காட்சியில் யானும் ஒரு காட்சிப் பொரு ளாகவே விளங்கினேன்! ஆனல், பிற காட்சிப் பொருள்களைப்போல யான் இருந்த இடத்திலேயே இருக்கவில்லை; என்னைச் செக் அரசியலார் தேசீய மயமாக்கிவிடவுமில்லை.

* 1949-ல் இந்தியாவும் செக் நாடும் தூதர்களை நியமித்துக் கொண்டன.

## பாரிஸ் காட்சி

இன்பவாழ்விலேயே தங்கள் நேரத்தை எல்லாம் செலவிடும் பாரிஸ் மக்கள் சர்வதேச மோட்டார் கண் காட்சியைத் தம் நகரில் நடத்தினர். சிறந்த கார் களைச் செய்யும் பல தொழிற்சாலைகள் பிரான்சில் உள்ளன. ஏனைய நாடுகளில் செய்யப்பட்ட கார்களும் (நமது ஹிந்துஸ்தான் கார் தவிர) இங்கே காட்சிதந்தன.

மோட்டார் தொழிலின் உட்பிரிவுகள் ஒவ் வொன்றும் விளக்கப்பட்டதோடன்றி, மோட்டார் காரின் ஒவ்வொரு சிறு பகுதிக்கும் தனித்தனிக் காட்சி இருந்தது. இங்கே 'ஸ்பேர் பார்ட்' செய்பவர்கள் தம் பொருள்களை விளம்பரப் படுத்தி னர். வாகனத்தின் ஒவ்வொரு உட்பிரிவையும் சரிபார்க்கும் இயந்திரங்களும் இங்கே இருந்தன.

ஒவ்வொரு வாகனத்துக்கு அருகிலும் அதனு டைய பெயர், அது செய்யப்பட்ட நாடு, நிறை, பெட்ரோல் உட்கொள்ளும் சக்தி, டயர்களை பற்றிய விவரங்கள், விலை ஆகிய செய்திகள் அடங்கிய அறிக்கை ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது. அதன் இயந்திரத்தை விளக்கவல்லவரும் அவ்வாகனத்தில் அமர்ந்திருந்து, பொறுமையாய்ப் பல்லாயிரவருக்குப் பதில் சொன்னார்கள். மிகச் சிறந்த கார் எனப் பார்வையாளர் மதிப்பிட்ட காருக்கும் அதைத்

தேர்ந்தெடுத்தவருக்கும் பரிசுகள் கொடுக்கப் பட்டன. இரண்டு நிமிஷங்களில், ஒரு காரை உட்புற மும்வெளிப்புறமும் அதன் இயந்திரத்தையும் கழுவித் தூய்மையாக்கிவிடும் **கார் லாண்ட்ரி** என்ற மின்சாரக் கருவி இக்காட்சியில் இயக்கிக் காட்டப்பட்டது.

இக்காட்சியில் ஏறக்குறையப் பத்தாயிரம் வித மான புதிய கார்கள் காட்சியளித்தன. அவற் றின் உற்பத்தியாளருள் சிலர் சிறு உருவங்களில் செய்த பொம்மைக் கார்களை மலிவான விலைக்கு விற்றுத் தங்கள் பொருள்களை விளம்பரப்படுத்தினர்.

## இந்தியாவிலும்

நம் நாட்டில் ஆடிக்கொரு தடவையும் அமா வாசைக்கு ஒரு முறையும் இதுவரை பொருட்காட்சி கள் நடத்தியுள்ளோம். இந்திய மக்களிற் பலருக்கே இந்தியாவில் என்ன என்ன பொருள்கள் செய்யப்படுகின்றன என்பது தெரிய வாய்ப்பு ஏற் படவில்லை. உற்பத்தியாளரும் தம் பொருள்களைத் தக்கபடி விளம்பரம் செய்வதில்லை. இதனால், வெளி நாட்டவருக்கு நம் உற்பத்தியைப் பற்றித் தெரி யாமல் போய், அதன் பலனாக நமது ஏற்றுமதி குறைந்து கொண்டும் இறக்குமதி அதிகரித்துக் கொண்டும் வருகின்றன. பெரிய திட்டங்களைச் செவ்வனே வரைந்து, அவற்றுக்கு அடிப்படையாக, பொருட்காட்சிகளைச் சீரிய முறையில் அடிக்கடி நடத்தி, நம் நாட்டில் செய்யப்படும் எல்லாப் பொருள்

களையும் ஒருங்கே காண வசதி ஏற்படவேண்டும். பொருட்காட்சி மனப்பான்மை நமது மக்களிடையே வேரூன்ற வேண்டும். நமது பொருளாதாரத்தைச் சீர்திருத்தவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், மேலும் தொழில் வளர்ச்சியடைய வேண்டிய இன்றியமையாமையை உணர்த்தவும் அந்த உணர்ச்சியைச் செயலில் காட்டவும் இவையே சிறந்த வழிகள். நமது இந்தியநாடு குடியரசான பிறகுதான் நம் நாட்டில் மேல் குறித்தது போன்ற சிறந்த ஒரு வணிகப் பொருட்காட்சி டில்லி நகரில் நடத்தப்பெற்றது. மற்றத்துறைகளைப்போல, வணிகத் துறையிலும் இந்திய நாடு சிறந்து விளங்க நம் மக்களும் அரசியலாரும் கொண்டுள்ள உறுதிக்கு இது அடையாளமாக விளங்குகிறது.

---

# 8. மலேயா

## சிங்கப்பூரை அடைதல்

ஆஸ்திரேலியப் பிரயாணத்தின் முடிவில், பிரீமாண்டில் துறைமுகத்திலிருந்து 'எஸ். எஸ். சாரன்' என்ற கப்பலில் சிங்கப்பூருக்குப் பயணமானேன். ஆறுமாதங்களுக்குப்பின் மீண்டும் நான் ஆசியாவுக்கு (அதன் முச்சந்தியான சிங்கப்பூருக்கு) வருகிறேன் என்ற எண்ணமே என் மனத்தில் குடிகொண்டிருந்தது. வெள்ளை நாகரிகம் நிறைந்த மூன்று கண்டங்களில் பிரயாணம் செய்து விட்டு வந்ததால், எனக்கு மலேயா அயல்நாடாகவே தோன்றவில்லை. 1949-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ஆம் தேதி, அதாவது தைப் பொங்கலுக்கு இரண்டு நாட்கள் முன்னதாக, நான் சிங்கப்பூருக்குப் போய்ச் சேர்ந்தேன். கப்பல் துறைமுகத்தை அடைந்தபோது காலை 6-மணியிருக்கும். உரிய அலுவலர் கப்பலுக்குள் வந்து, எனது பாஸ்போர்ட்டை மட்டும் சரிபார்த்து, அதில் 'சாப்பு'க் குத்தினர். மலேயாவில் சாப்பு என்பதற்கு 'முத்திரை', அல்லது 'ரப்பர் ஸ்டாம்பு' என்று பொருள். ஓர் ஐரோப்பிய இனத்தவரின் நாட்டிலிருந்துவந்ததால், என்னுடைய உடல் நிலையைப்பற்றிய உறுதிமொழிகளை ஒருவரும் சரிபார்க்கவில்லை. இந்தியாவில் மட்டுமே எல்லா நோய்களும் இருப்பதாக மலேயா அரசியலார் கருதுவதே இந்த விதிவிலக்குக்குக் காரணமாகும்.

## துறைமுகச் சிறப்பு

சிங்கப்பூர் மிகப் பெரிய கப்பல்தளம் என்பது உலகத்தார் அனைவருக்கும் தெரிந்ததே. அதைக் கட்டிமுடிக்கப் பதினைந்து ஆண்டுகள் ஆயினவாம். அதற்குப் பிரிட்டிஷார் 20 மிலியன் பவுன் (27 கோடி ரூபாய்) செலவிட்டனராம். 1945-க்குப்பின், இத் துறையில் மேலும் 2 மிலியன் பவுன் ($2\frac{3}{4}$ கோடி ரூபாய்) வரையில் அவர்கள் செலவிட்டிருக்கின்றனராம். எனவே, ஆசியாவில் சிங்கப்பூரே பெரிய துறைமுகமாயிருப்பது இயற்கையே. பல தீவுகளுக்கிடையே அமைந்திருப்பதும் அதன் சிறப்புக்குக் காரணமாகும். நாள்தோறும் ஒருகோடி ரூபாய் பெறுமானமுள்ள ஏற்றுமதியும், அதே அளவு இறக்குமதியும் சிங்கப்பூர்த் துறைமுக வாயிலாக நடைபெறுகின்றன.

பிரிட்டனின் தென்கிழக்கு மூலையிலுள்ள சதாம்ப்டன் துறைமுகத்தில் பிரயாணிகள் கப்பலில் ஏறுவதற்குச் செய்யப்பட்டுள்ளது போன்ற வசதிகளை நான் சிங்கப்பூர்த் துறைமுகத்தில் காணவில்லை. கப்பலை விட்டு இறங்கியதும், நியூயார்க் துறைமுகத்திலுள்ளதைப் போன்ற சுங்கச் சோதனை அமைப்புக்களோ, தந்தி டெலிபோன் கம்பெனிகளின் பிரதிநிதிகளோ கண்ணெதிரில் இல்லை. பிரயாணிகள் கொண்டுவந்த பொருள்களைக் கப்பலிலிருந்து தாமே இறக்கிச் சுங்கச்சோதனை செய்யுமிடத்தில் சேர்த்துவிடும் கருவிகளும் சிங்கப்பூரில் இல்லை. எனக்குச் சிறப்பாகத் தெரிந்தது, சிங்கப்பூர் பிரீபோர்ட்டாக இருப்பதால், சுங்கச் சடங்குகள்

குறைவாயிருந்தது ஒன்றுமட்டுமே. பிரீபோர்ட் என்று சொல்லதக்கவை உலகில் சில இடங்களிலேயே உள்ளன. இவற்றுள் குறிப்பிடத் தக்கவை ஹாங்காங்கும் ஹாம்பர்க்குமாகும். சிங்கப்பூர்த் துறைமுகம் இந்தோனேசியா, மலேயா, போர்னியோ முதலிய வளம் பொருந்திய பல நாடுகளுக்கு இன்றியமையாத துறைமுகமாக இருந்து வருகிறது. இந்த நாடுகளுக்கிடையே நடைபெறும் வியாபாரம் சிங்கப்பூர் வாயிலாகவே நிகழ்கின்றது. அது மட்டுமன்று, இந்த நாடுகளுக்கு மற்ற நாடுகளிலிருந்து வரும் பொருள்களும், இந்த நாடுகளிலிருந்து மற்ற நாடுகளுக்குச் செல்லும் பொருள்களும் சிங்கப்பூர் வாயிலாகத்தான் செல்லவேண்டும். இந்த நாடுகளில் சுங்கவரி விதிக்கப்படுவதால் சிங்கப்பூரிலும் சுங்கவரி விதிப்பது சரியன்று. எனவே, சிகரெட், தங்கம், மது போன்ற ஒரு சில பொருள்களுக்கு மட்டுமே சிங்கப்பூரில் சுங்கவரி விதிக்கப்படுகிறது. இதன் பயனாக, அந்நகரில் பொருள்களெல்லாம் மலிவாகக் கிடைக்கின்றன; வெளிநாட்டு வாணிகமும் பெரிய அளவில் நடைபெறுகிறது.

## ஹோட்டலுக்குப் புறப்பாடு

இனி நகருக்குள் செல்லுவோம். கப்பல் துறைமுகத்தை அடைந்து சிறிது நேரத்தில் நான் எனது ஹோட்டலுக்குப் புறப்பட்டேன். சீ வியூ (Sea-View) ஹோட்டலில் தங்குவதற்கு நான் ஏற்பாடுகள் செய்திருந்தேன். மெயர் ரோடில், கடலுக்கு எதிரே இந்த ஹோட்டல் அமைந்திருக்கிறது. துறைமுகத்

திலிருந்து இந்த இடம் நான்கு மைல் தொலைவிலிருக்கிறது. ஹோட்டலுக்குச் செல்லும் வழியில் சிங்கப்பூரின் முக்கியமான சாலைகள் பலவற்றைக் கடந்தேன். போருக்குமுன் சிங்கப்பூர்தான் ஆசியாவிலேயே தூய நகரமாக இருந்தது. ஆனால் இன்று அங்கு வழங்கும் 10 காசு 20 காசு நோட்டுக்களில்கூட அவற்றை நாம் கையால் தொடமுடியாத நிலையில் அழுக்கு நிறைந்திருக்கிறது. இத்தகைய அசுத்தமும் சூரிய வெப்பமும் விதவிதமான உடைகளும் வழியில் நான் கண்டதால், சில இந்திய நகரங்களுக்கும் சிங்கப்பூருக்கும் எனக்கு வேறுபாடே தெரியவில்லை. மக்கள் உரத்த குரலில் பேசுவதையும், கொள்வோரும் கொடுப்போரும் விலைகளில் பேரம் செய்வதையும் சில நாட்களில் நான் அறிந்தேன்; முதல்நாள் யான் கொண்ட கருத்துக்களை இவை உறுதிப்படுத்தின.

## என் அலுவல்கள்

ஹோட்டலில் இறங்கியதும், மலேயாவில் என்னுடைய அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினேன். மலேயாவின் பல பகுதிகளைப் பார்க்கவும் அந்த நாட்டின் வேறுபட்ட பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவும் யான் முயன்றேன். மலேயாவில் என்னை அன்புடன் உபசரித்த நண்பர்கள் மிகப் பலர். நாட்டுக்கோட்டை நகரத்தாரின் விருந்தோம்பலை அறிந்தவர்களுக்கு இதை விவரித்துக்கூற வேண்டியதில்லை. அவர்கள் எனது வெளிநாட்டு அனுபவங்களை அறிவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்ததால், அவர்கள் ஏற்பாடு செய்த பொதுக்

கூட்டங்களின் வாயிலாகவும் மற்ற நிகழ்ச்சிகளின் வாயிலாகவுமே மலேயா நாட்டைப்பற்றி நான் அறிய முடிந்தது. சிங்கப்பூரிலும் மலேயாவின் மற்ற நகரங்களிலும் பல சமூகத்தினரையும் யான் சந்திக்கநேர்ந்தது. அப்போது இந்திய அரசியலாரின் பிரதிநிதியாயிருந்த திவி அவர்களையும் அவர் இல்லத்தில் கண்டு, மலேயாவின் பிரச்சினைகளை அவருடன் விரிவாக விவாதித்தேன். இவற்றின் விளைவாக, மலேயாவின் நிலையை நன்கு உணரும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

## அரசியல் நிலை

சிங்கப்பூர், மலேயா என்ற பெயர்கள் அரசியல் துறையில் எதைக் குறிக்கின்றன என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே, இவற்றை விளக்கிக் கூறுவோம்.

ஜப்பான் போர் தொடுக்குமுன் மலேயாவில் 1.ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில்மெண்ட்ஸ், 2.பெடரேடெட் மலேயா ஸ்டேட்ஸ், 3. அன்பெடரேட்டட் மலேயா ஸ்டேட்ஸ் என்ற அரசியல்கள் இருந்தன. சிங்கப்பூர், பீனங்கு, மலாக்கா ஆகியவை ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில்மெண்டில் அடங்கிய தீவுகளுள் முக்கியமானவை; மற்றவை சிதறிக்கிடக்கும் சில திட்டுக்களும் தீவுகளுமே. இரண்டாவது பிரிவில் ஓரளவு சுயாட்சியுள்ள இராச்சியங்களும் மூன்றாவது பிரிவில் பல சிற்றரசுகளும் இருந்துவந்தன.

போரில் வென்ற பின்னர், பிரிட்டிஷார் 1947-ல் நிறுவிய அரசியல் சட்டப்படி இப்போது மலேயா

வில் இரண்டு அரசியல்கள் மட்டுமே உள்ளன. சிங்கப்பூர்த் தீவுக்கு மட்டும் ஓர் அரசியலும், மலேயாவின் மற்றெல்லாப் பகுதிகளுக்கும் மற்றோர் அரசியலும் இருந்து வருகின்றன. முன்னதற்குக் காலனி என்றும், பின்னதற்குப் பெடரேசன் (கூட்டாட்சி) என்றும் பெயர். முன்னதற்கு ஒரு கவர்னரும், பின்னதற்குச் சர்வ வல்லமையுள்ள ஒரு ஹை கமிசனரும் நிருவாகத் தலைவர்களாக இருக்கின்றனர். இவ்விருவரும் வெள்ளையரே. மலேயாப் பெடரேசன் ஒன்பது இராச்சியங்களையுடையது. இவை ஒவ்வொன்றிலும் ஒரு மன்னர் இருக்கிறார். இவருக்குச் சுல்தான் என்று பெயர். பெடரேசனிலும் சிங்கப்பூரிலும் சட்டசபைகளும் ஆலோசனைக் குழுக்களும் உள்ளன. இவற்றில் சில உறுப்பினர் மட்டும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் ஆவர்; மற்றவர்கள் அரசியலாரால் நியமனம் செய்யப்பட்டவர்களே. பெடரேசன், சிங்கப்பூர், தென்கிழக்கு ஆசியாவில் பிரிட்டிஷாருக்குள்பட்ட மற்ற நாடுகள் இவைகளுக்கெல்லாம் மேலதிகாரம் படைத்த கமிசனர் ஜெனரல் ஒருவரும் இருந்துவருகிறார்.

## சிங்கப்பூரின் வரலாறு

'சிங்கப்பூர்' என்பது ஒருவடமொழிப்பெயர். சிங்க நகரம் என்பது இதன் பொருள். 1819-ல் இது மீன் பிடிக்கும் கிராமமாக இருந்தது. ஜோஹூர் சுல்தானிடமிருந்து ராபிள்ஸ் என்ற வெள்ளையர் ஆண்டுக்கு

3000 வெள்ளி (ரூபாய் 5000) வாடகை கொடுப்ப தென்ற உடன்பாட்டின் மூலம் சிங்கப்பூரைப் பிரிட்டிஷாரின் உடைமையாக்கினர். இவர் தான் சிங்கப்பூரைத் தோற்றுவித்த வீரர். அதன் முதல் கவர்னராக இருந்தவரும் இவரே. கடலிற் பிறந்து, கடற்படையில் பணியாற்றிய ராபிள்ஸ் உலகின் சிறந்த கடற்படைத் தளத்தை அமைத்தது அவரது வீரத்திற்குச் சான்றாயுள்ளது. ராபிள்சின் நினைவாகச் சிங்கப்பூரில் பல சின்னங்கள் இருக்கின்றன. இவற்றுள் சில வருமாறு:— ராபிள்ஸ் பிளேஸ், ராபிள்ஸ் மியூசியம், ராபிள்ஸ் பஜார், ராபிள்ஸ் போஸ்டாபீஸ், ராபிள்ஸ் ஹோட்டல். ராபிள்ஸ் சிலையும் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது. இஃது செம்பால் செய்யப்பட்டது. இதனால் இச் சிலையைத் தமிழ்மக்கள் 'செம்புத்துவான்' என்று சொல்லுகிறார்கள். 'துவான்' என்றால் மலாய் மொழியில் 'துரை' என்று பொருள்.

## நகரச்சிறப்பு

சிங்கப்பூரின் நீளம் 26 மைல், அகலம் 14 மைல். தெற்குக்கோடியில் 3 பர்லாங்கு நீளமுள்ள பாலம் ஒன்று இத்தீவை மலேயா நாட்டுடன் இணைக்கிறது. மணிலா, பாங்காக், ஹாங்காங், ஷாங்ஹாய் ஆகிய ஆசிய நகரங்கள் 'கீழ்நாட்டின் முத்து,' 'ஆசியாவின் வெனிஸ்,' 'தென்கிழக்கு ஆசியாவின் ரிவரியா,' 'தூரக்கிழக்கின் நடுநாயகமான இடம்'

---

மலேயாவின் நாணயம் டாலர். தமிழர் இதை வெள்ளி என்பர். வெள்ளி ரூ. 1. 9. 0. க்குச் சமம். 100 காசு கொண்டது ஒரு வெள்ளி.

என்று முறையே சிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிறப்புப் பெயர்கள் அனைத்துமே தென்கிழக்கு ஆசியாவின் தலைவாயிலான சிங்கப்பூருக்குப் பொருந்தும். அதன் கட்டிடங்களும் கடைத்தெருக்களும் கண்டோரை மயக்கும் தன்மையுடையவை. புல்லர்டன் ஸ்கொயர் அருகிலுள்ள பேங்குகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள் இவற்றின் கட்டிடங்கள் மிகப் பெரியவை. இத்தகைய சிங்கப்பூர் ஓர் அழகான நகரந்தான். அதனாலேயே ஜப்பானியர் இதற்குச் **சோனன் டோ** என்று பெயரிட்டனர். இப் பெயருக்கு ஜப்பான் மொழியில் அழகிய தெற்குத் தீவு என்பது பொருள். ஆனால், பாரிஸ் ஸ்டாக்ஹோம் ஜினீவா ஆகிய நகரங்களைக் கண்ட பிறகு, சிங்கப்பூரின் அழகு எனக்குப் பெரிதாக தோன்றவில்லை. பல மாடிகளுள்ள கட்டிடங்கள் சிங்கப்பூரிலிருந்தபோதிலும், பம்பாயின் மெரைன் டிரைவைப் போன்ற ஒரு வானவீதியை அங்கே நான் காணவில்லை. சிங்கப்பூரில் என்னைக் கவர்ந்த கட்டிடங்கள் சுப்ரீம் கோர்ட்டுக் கட்டிடமும் கத்தே பில்டிங்குமே. சுப்ரீம் கோர்ட்டுள்ள மாளிகை அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனிலுள்ள காபிடல் பில்டிங்கைப் பின்பற்றி அமைக்கப்பட்டது. நகராண்மைக் கழகக் கட்டிடம் இதற்கடுத்தாற் போல் இருக்கிறது. இவற்றுக்கு எதிரில்தான் இந்திய தேசீய இராணுவத்தினருக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருந்ததாம்.

கத்தே பில்டிங் 14 மாடிகள் உடையது. இதுவே ஆசியாவில் மிக உயர்ந்த கட்டிடம். இதில் சிங்கப்பூர் அரசியலாரின் அலுவல்கங்களும், 'ரேடியோ மலேயா'வின் ஸ்டுடியோக்களும், ஒரு தியேட்டரும், அழகிய அறைகளுடன் கூடிய நல்ல ஹோட்டலும் இருக்கின்றன. இக்கட்டிடத்தின் ஒரு பகுதியில் மலையிருப்பதால், நான்காவது மாடிவரையிலும் வாகனங்களை ஓட்டிச் செல்ல இயலுமென்று கேள்விப்பட்டேன். டில்லிக்குச் செங்கோட்டை போல, சிங்கப்பூருக்குக் கத்தேபில்டிங் இருந்து வருகிறது. நேதாஜியின் சுதந்திர இந்தியத் தற்காலிக அரசியல் அலுவலகம் கத்தே பில்டிங்கில்தான் நிறுவப்பட்டது. மவுண்பாட்டன் பிரபுவின் தலைமையிடமும் இக்கட்டிடத்தில்தான் இருந்தது. சிங்கப்பூரில் அவரே ஜப்பானியரிடம் சரணாகதியை ஏற்றுக்கொண்டவரென்பதும், அமைதி குலைந்த நிலையில் ஜப்பானியர் விட்டுச்சென்ற மலேயாவை மீண்டும் செழிப்பான நிலைக்குக் கொண்டுவந்தவர் என்பதும் இங்கே குறிப்பிடுவது பொருந்தும். சிங்கப்பூரில் ஒரு சாலைக்கு அவருடைய பெயர் இடப்பட்டிருக்கிறது.

கத்தே பில்டிங் **லோ குவான் தேக்** என்ற சீனக் கோடீசுவரரைச் சேர்ந்தது. மலேயாவில் மற்றொரு பெரிய செல்வர் **ஆலிபூன் ஹா‍வா** என்பவர். இவரும் ஒரு சீனரே. இவர் **டைகர் பாம்** என்ற தலைவலி மருந்தைத் தயாரித்துப் பெரும் பொருள் ஈட்டியவர். இதனால் இவருக்கு **டைகர்பாம் மன்னர்** என்ற பெயர் வழங்கி வருகிறது. இவர் ஹாங்காங்கிலும் மலேயாவிலும்

பல பத்திரிகைகளை நடத்துகிறார். இவருடைய பத்திரிகைகள் பிரிட்டிஷ் அரசியலாரின் மலேயாக் கொள்கையை ஆதரிக்காததால், நாடு இல்லாத இந்த மன்னர் நாடு கடத்தப்பட்டிருக்கிறார்.

## மூன்று உலகங்கள்

சிங்கப்பூர் என்றதும் என் நினைவிற்கு வருவனவற்றுள் அங்குள்ள மூன்று உலகங்களைப்பற்றியதும் ஒன்று. ஜாலன்* பசாரிலுள்ள நியூ வோர்ல்ட் (**New World**), கிம்செங் ரோடிலுள்ள கிரேட் வோர்ல்ட், (**Great World**), கேலாங் ரோடிலுள்ள ஹாப்பி வோர்ல்ட் (**Happy World**) ஆகியவையே இம்மூன்றும். இவை ஒவ்வொன்றும் ஏராளமான மின்சார விளக்குகள் போடப்பட்ட திறந்த வெளிகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே குழு நடனங்களும், 'திரைப்படங்களும்' துப்பாக்கியால் சுட்டுப் பரிசு பெறும் போட்டிகளும், தத்தம் ஊழ்வினையைச் சோதிக்கும் பற்பல சூதாட்டங்களும், கடைகளும், சிற்றுண்டிச்சாலைகளும், சீனரின் சினிமா நாடகத் தியேட்டர்களும் உண்டு.

குழு நடனங்களில் ஆடும் பெண்கள் சிங்கப்பூரில் ஆறுநூறு பேருளர். தொழிலுக்கேற்ற நல்ல தோற்றம் இருப்பதற்காக இவர்கள் ஒவ்வொருவரும் மாதம் 155 வெள்ளி (அதாவது ரூபாய் 245) தங்களை எழிலிகளாக்கிக் கொள்ளச் செலவிடுகின்றனர். உடை, செருப்பு, தலைமயிரை

*ஜாலன் என்றால் மலாய் மொழியில் சாலை என்று பொருள்

ஒழுங்குபடுத்தல், வாசனைப்பொருள்கள் வாங்குதல், போக்குவரவுச் செலவு இவையே இவர்களுக்கு நேரும் பெரும் செலவினங்கள் ஆகும்.

ரோங்கிங் என்ற மலாய் நடனத்தை இந்த உலகங்களிலேதான் நான் கண்டுகளித்தேன். இஃது திறந்தவெளியில், ஒரு மேடையின் மீது நடைபெறுகிறது. இது ஒரு நுண்கலை. நடனம் ஆடுவோர் கால்களைச் சரியாக ஊன்றுமல் ஆடவேண்டும். பெண்ணுக்கு மிக அருகில் ஆடவன் செல்லவேண்டும்; ஆனால் அவளைத் தொட்டுவிடக் கூடாது. அவனிடமிருந்து தப்புவதற்கே அவளும் முயலுவாள். இதைப்போன்ற நடனத்தை நான் வேறெங்கும் காணவில்லை.

## மற்றச் சிறப்புக்கள்

சிங்கப்பூரின் மற்றொரு சிறப்பு அது உலகத்தினர் அனைவருக்கும் பொதுவான ஒரு நகரமாக (**Cosmopolitan City**) இருப்பதாகும். இந்தியர், சீனர், மலாய்க்காரர், டச்சுக்காரர், பிரிட்டிஷார், பிலிப்பைன்காரர், ஜாவாக்காரர், அராபியர் ஆகிய எல்லா இனத்தவரும் வாழும் பெருமை சிங்கப்பூரைச் சாரும். சிங்கப்பூரின் மொத்த ஜனத்தொகை 10 லட்சம். ஏழு லட்சம் பேருக்குமேற்பட்ட சீனரும், ஒரு லட்சத்துக்குட்பட்ட இந்தியரும் இந்நகரில் வசிக்கின்றனர்.

சிங்கப்பூரின் நடுநாயகமான இடமாக விளங்குவது 'ராபிள்ஸ் பிளேஸ்' ஆகும். இந்த மைதானத்

தைச் சுற்றிலும் புகழ்பெற்ற கடைகள் இருக்கின்றன. நகை விற்போர், துணி வியாபாரிகள், மற்றப் பொருள் விற்கும் கடைகள் எல்லாம் இங்கே உண்டு. **பி. பி. டி. சில்வா** என்ற நகைக்கடையினர் இளவரசி எலிசபெத் திருமணத்துக்குத் தாம் நகை அனுப்பியதை விளம்பரப்படுத்துகின்றனர். **வாசிமல்ஸ்** என்ற பட்டுத் துணி வியாபாரிகள் ஜீன் சிம்மன்ஸ் என்ற உலகப் புகழ்பெற்ற திரை நட்சத்திரம் தம் கடையில் பொருள்கள் வாங்கியதை விளம்பரப் படுத்துகின்றனர். இங்குள்ள துணிக்கடைகள் அனைத்தும் சிந்தியர்களைச் சேர்ந்தவை. அருகிலுள்ள சிங்கப்பூரின் வால் ஸ்ட்ரீட்டாகிய மார்க்கட் தெருவிலுள்ள வட்டிக்கடைகள் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களையும், வங்குசாக் கடைகள் * நாடார்களையும் சீனரையும் சேர்ந்தவை. ராபிள்ஸ் பிளேசிலுள்ள கட்டிடங்களில் சிலவற்றை **கியான் சிங்** என்ற இந்திய வணிகர் போர்க்காலத்தில் விலைக்கு வாங்கிவிட்டார். எனவே, இன்னும் சில மாதங்களில் ராபிள்ஸ் பிளேசின் பெயர் கியான்சிங் பிளேஸ் என்று சிங்கப்பூர் நகராண்மைக் கழகத்தாரால் மாற்றப் பட்டால், நான் வியப்படையமாட்டேன்.

## கதம்பம்

**சிங்கப்பூரில் இருப்பவை:—** மூன்று விமான நிலையங்கள், பல்லாயிரம் திரிஷாக்கள் (சைகிளின் துணைகொண்டு மனிதன் இயக்கும் ஒரு வகை

* வங்குசா என்பதற்கு மலாய் மொழியில் பலசரக்கு என்பது பொருள்.

ரிக்ஷாக்களுக்கு திரிஷா என்று பெயர்), 'பல நாட்டு நாணயங்களைக் குறைந்த விலைக்கு மாற்றுவதைத் தொழிலாக உடையோர், சீர்கெட்ட கப்பல்களைச் செப்பனிடுவோர், துபாஷ்கள் (இது துவிபாஷி என்பதன் திரிபு; இரு மொழி பேசுவோர் என்பது இதன் பொருள்), பல ஆயிரம் காடிகள் (மோட்டார் கார்கள்), ஓராயிரம் யூதர், எப்போதும் ஒரே விதமான தட்பவெப்ப நிலை.

**சிங்கப்பூரில் இல்லாதவை:—** எண்ணெய்க் கிணறுகள், கலைச்சிறப்பு, காக்கை.

## தொழிற்சாலைகள்

ரப்பரால் ஓடு, மிதி போன்ற பலவிதப் பொருள்கள் செய்வது, மூலப்பொருளாகக்கிடைத்த ஈயத்தை ஏற்றுமதிக்குத் தக்கபடி பக்குவப்படுத்துவது, தேங்காய் எண்ணெய் உற்பத்திசெய்வது,சோப் உற்பத்தி செய்வது ஆகிய தொழில்கள் சிங்கப்பூரில் சிறப்பாக நடைபெறுகின்றன. ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி போன்ற அமெரிக்கக் குழுக்கள் சிங்கப்பூரில் உள்ளன. இவைகளுக்கு உதவியாயில்லாத எந்த அரசியலாரும் இன்றைய மலேயாவில் பல நாட்கள் நீடிக்க இயலாது.

## மிஸ் சிங்கப்பூர்

அண்மையிலுள்ள ஆஸ்திரேலியாவைப் பின்பற்றிச் சிங்கப்பூரிலும் அந்த நாட்டின் சிறந்த அழகியைத் தேர்ந்தெடுக்கும் போட்டி நிகழ்கிறது. 'மிஸ்டர் சிங்கப்பூர்' என்ற ஓர் அழகிய ஆண்மகனும்

தேர்ந்தெடுக்கப்படுவது சிங்கப்பூரின் வழக்கமாகும். ஆண்டுதோறும் எடை தூக்கும் போட்டி நிகழ்கிறது. நல்ல சதை வளர்ச்சியும் அழகிய உடலுறுப்புக்களும் உடையவர் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம். வெற்றி பெறும் குமரனுக்கும் குமரிக்கும் பல பரிசுகள் வழங்கப்படுகின்றன.

## ஜோஹூர்

சிங்கப்பூரிலிருந்து மலேயாப் பெடரேசனுக்குச் செல்லுவோம். நாம் முதலில் செல்லக்கூடியது ஜோஹூர் இராச்சியத்துக்கே ஆகும். பெடரேசனைச்சேர்ந்த இராச்சியங்களில் இது செல்வம் மிகுந்தது; மிகப் பெரியது. இதன் தலைநகர் ஜோஹூர் பாரு என்பது. 'பாரு' என்பதற்குப் 'புதிய' என்பது பொருள். புதிய ஜோஹூர் சிங்கப்பூர்த் தீவின் எல்லையில் நாம் முன்னரே குறிப்பிட்ட இணைப்புப் பாலத்தின் அக்கரையில் இருக்கிறது. மலேயாவில் இப்போது கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளால் அமைதி குலைந்திருப்பதால், மலேயாவில் வாழும் ஒவ்வொருவரும் தத்தம் படமுள்ள அடையாளச் சீட்டைப் போலீசாரிடம் வாங்கி,எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் வைத்திருக்க வேண்டும்; உரிய அதிகாரிகள் கேட்கும்போது அதைக் காண்பிக்கவேண்டும். இந்தச் சீட்டுக்களைப் பாலத்தில் சோதிக்கிறார்கள்.

ஜோஹூர்பாரு அழகிய கட்டிடங்களும் பெரிய மசூதியும் உடைய ஊர். பிரிட்டிஷ் ஆட்சிக்குமுன்

சிங்கப்பூரும் இந்த இராச்சியத்தின் பகுதியாகவே இருந்தது. ஜோஹார் சுல்தான்கள் பெரிய செல்வர்கள். இவர்களுடைய பெயர்கள் மிக நீளமானவை. உதாரணத்துக்கு ஒன்று குறிப்பிடுவோம்: ஹிஸ் ஹைனஸ் இப்ராஹிம் இபின் அல்மர்ஹும் சுல்தான் அபுபகர், டி. கே., எஸ். பி. எம். ஜே., ஜி. சி. எம். ஜி., ஆர். பி. ஈ., ஐ. பீ. ஈ., ஜி. சி. ஓ. சீ. இந்தச் சுல்தானைப் பற்றி ஜான்கந்தர் என்னும் அமெரிக்க ஆசிரியர் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பின்வருமாறு எழுதியிருந்தார்:

"ஜோஹார் சுல்தான் செக்கோசுலவகியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அந்த நாட்டிலுள்ள நோய் தீர்க்கும் வல்லமையுடைய தீர்த்தங்களில் அவர் நீராட விரும்பினர். நோய் இல்லாதவர்கள் அங்கே நீராட அனுமதிக்கப்படுவதில்லை. தம் விருப்பத்தை நிறைவேற்ற உறுதி கொண்ட சுல்தான் நீராட 500 குரோனர் கட்டணமும், அவருக்கு நோய் உண்டு என்று வைத்தியர் கொடுத்த உறுதி மொழிக்குப் பீஸ் 2000 குரோனரும் செலுத்தினர்."

இப்போது சுல்தான்களுக்கு எல்லாம் சுல்தானை விளங்கும் பிரிட்டிஷ் கமிசனர் ஜெனரல் **மால்கம் மாக்டனல்டு** ஜோஹாரிலேயே இருக்கிறார். சிங்கப்பூரில் பதவிகளிலும் தொழில்களிலும் உள்ள சில வெள்ளையரும் இங்கேயே வாழ்கின்றனர். ஜோஹாரில் பிரிட்டிஷ் அரசியலாரின் வானொலி நிலையம் ஒன்று ஏராளமான செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தியா, பர்மா வானொலி நிலை

யங்கள் பிரிட்டிஷ் வானொலியின் நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்வதை விட்டுவிட்டதால், இந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் ஜோஹூர் நிலைய வாயிலாகப் பிரிட்டிஷாரின் கருத்துக்களை அறிவார்கள் என்றும் அந்த அரசியலார் நினைக்கிறார்கள்.

மலேயா மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காகப் பிரிட்டிஷார் தொடங்கி யிருக்கும் மற்றோர் ஆக்கவேலை பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி யிருப்பதாகும். இதற்கு ஒருகோடி ரூபாய் வரை செலவாகி யிருக்கிறது. தமிழுக்கு ஓர் ஆராய்ச்சி நிலையம் இங்கே ஏற்படுத்தப்பட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தரும் செய்தி. இந்திய மாணவர் பலர் இப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று வருகின்றனர். இந்தியப் பிரதிநிதியாயிருந்த **திவி** அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கப் பல்கலைக் கழக நிதிக்கு மலேயாத் தமிழர் பெருவாரியாகப் பொருளுதவி செய்திருக்கின்றனர்.

## கோலாலம்பூர்

இப்போது மலேயா இந்தியக் காங்கிரசின் தலைவராக இருக்கும் திருவாளர் கா. இராமநாதன் அவர்களுடைய அழைப்புக்கிணங்க, நான் சிங்கப்பூரிலிருந்து கோலாலம்பூருக்குச் சென்றேன். சிங்கப்பூர்ச் செட்டியார் சேம்பர் ஆப் காமர்சின் செயலாளரும் எனது இனிய நண்பருமான திருவாளர் மு. ப. மு. சே. சுப்பையா செட்டியாரவர்களும் உடன் வந்தார்கள். மலேயன் ஏர்வேஸ் விமானம் ஒன்றில் நாங்கள் பிரயாணம் செய்தோம். மலேயாவில் வேறு

விமானக் கம்பெனிகள் இல்லை. 200 மைலிலுள்ள கோலாலம்பூரை ஒன்றரை மணி நேரத்தில் அடைந்தோம்.

மலேயாவில் மிகப் பெரிய நகரம் கோலாலம்பூர். (இப்போது பெடரேசனில் சேர்க்கப்பட்டுள்ள பினங்கு அதைவிடப் பெரிய நகரம்) பெடரேசனின் தலைநகராகவும் செலாங்கோர் என்னும் இராச்சியத்தின் தலைநகராகவும் கோலாலம்பூர் இருந்துவருகிறது. மலேயாவில், சுருக்கமான எழுத்துக்களில் எல்லாவற்றையும் குறிப்பிடுவது வழக்கமாகிவிட்டது. கோலாலம்பூரை எல்லோரும் கே. எல். என்றுதான் சொல்லுகிறார்கள். இங்கே நல்ல ஹோட்டல்களும், பெரிய கடைகளும், கண்ணைக் கவரும் ரயில்வே ஸ்டேசன் கட்டிடமும், அரசியல் அலுவலகங்களும் உள்ளன. இங்குள்ள பூந்தோட்டம்...பொட்டானிகல் கார்டன்ஸ்... இந்த நகருக்குச் சிறப்புத் தருகிறது. ஓய்வுக்கும் அமைதிக்கும் இது தக்க இடம்.

கே. எல். இன் ஜனத்தொகை ஒன்றரை லட்சம். இது மலேயாவின் நடுநாயகமான ஊர். தென்கோடியும் வடகோடியும் இங்கிருந்து சம தொலைவிலேயே உள்ளன. மலேயாத் தீபகற்பத்தின் பெரிய துறைமுகங்கள் சிலவற்றுள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு ரயில் மார்க்கமாகவோ விமானத்திலோ செல்லவேண்டுமானால், வழி கே. எல். வாயிலாகவே செல்லும். கே. எல். ஐச் சுற்றிப் பல கிராமங்களும் சில நகரங்களும் உள்ளன. கே. எல். இல் சிறியதொரு வானொலி நிலையம் உண்டு. இங்கிருந்து நான் ஒலிபரப்ப அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

மலேயாவில் யாழ்ப்பாணத்தார் பல ஆயிரம் பேருளர். இவர்களுடைய நலத்தைப் பேண ஒரு சங்கம் இப்போது தோன்றியிருக்கிறது. இவர்களுடைய உரிமைகளைக் காக்க இலங்கை அரசியலார் மலேயாவில் தம் பிரதிநிதியை நியமித்திருக்கின்றனர். இவர்களில் சிலர் அரசியலாரின் வேலையிலும், பலர் ரயில்வே வேலையிலும் இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தாரின்றி மலேயா ரயில்கள் ஓடமாட்டா என்று மலேயாவில் சொல்லுவதுண்டு. மலேயா ரயில்வேயின் தலைமையிடமாகிய கே. எல். இல் மிகுதியான யாழ்ப்பாணத்தார் வாழ்கின்றனர். இவர்களும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் ஓய்வு நேரத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்க்கிறார்கள்.

**மலாக்கா**

கே.எல்.இலிருந்து மலாக்காவுக்குச் சென்றோம். இது மேற்குக் கரையில், சிங்கப்பூரிலிருந்து 110 மைலிலுள்ள ஒரு சிறு துறைமுகப்பட்டினம். வரலாற்றுப்படி, இது மலேயாவிலேயே முதன்மையான நகரம். ஒருகாலத்தில், சிங்கப்பூரையும் பினங்கையும்விட மலாக்கா முக்கியமாக விளங்கியது. 1511 முதல் 1640 வரை போர்ச்சுகீசியர் ஆட்சியும், 1641 முதல் 1796 வரை டச்சுக்காரர் ஆட்சியும் மலாக்காவில் நடந்தன. எனவே, இலங்கையில் திருக்கோணமலையையும், தமிழ்நாட்டில் தரங்கம்பாடியையும் போலவே, மலாக்காவிலும் இந்த ஆட்சிகளின் அறிகுறிகளையும், கோட்டையையும், கிறிஸ்தவக் கோயில்களையும், குறுகிய வீதிகளையும் யான் கண்டேன்.

மலாக்காவிலிருந்து இந்தோனேசியா மிக அருகில் இருக்கிறது. இந்தோனேசியாவைப்போல, மலாக்காவும் டச்சுக்காரரிடம் இருந்தபோது, இந்தோனேசியாவில் ஒரு நகரம் பிரிட்டிஷாரிடம் இருந்தது. இருவல்லரசுகளும் இந்த நகரங்களை மாற்றிக்கொண்டதால், மலாக்கா 1796ல் பிரிட்டிஷ் ஆட்சிக்குள்ளாயிற்று. 1942 வரை இது, சிங்கப்பூரைத் தலைநகராகக் கொண்ட ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில்மெண்ட்சின் ஒரு பகுதியாக இருந்தது. இப்போது, இது பெடரேசனில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பாரிஸ் நகரிலுள்ளதுபோன்ற அணையா விளக்கு, அரசியலாரைச் சேர்ந்த அழகிய கட்டிடங்கள், மிகப் பெரிய மருத்துவச்சாலை, நெல் வேளாண்மை, சீன வாடிக்கைக்காரர்களையுடைய ஓர் இந்திய உணவுச் சாலை, வானொலி நிலையம், எருமை மாட்டு வண்டிகள் இவைகளையுடையது மலாக்கா.

இந்தியாவுடனும் சீனவுடனும் மலாக்கா மிகுதியான உறவு உடையது. மலாக்காவின் முதல் அரசர் ஹிந்து மதத்தைத் தழுவியவர். இந்தியரும் சீனரும் மலாக்காவில் பரஸ்பர அன்புடன் வாழ்கின்றனர். மலாக்காச் செட்டியார்கள் என்ற ஒரு சாதியினர் இங்கே வாழ்கின்றனர். மிளகு, கடுகு போன்ற பொருள்கள் விற்க 400 ஆண்டுகளுக்கு முன்னர் இவர்கள் இந்தியாவிலிருந்து சென்றவர்கள். ஒரு சிலரே மனைவிமக்களுடன் சென்றனர். பிறர் மலாய்ப் பெண்களை மணந்தனர். இன்றளவும் இவர்கள் ஹிந்துக்களின் பழக்கவழக்கங்களையே பின்பற்றி

வருகின்றனர். தமிழ்மொழியை இவர்கள் மறந்துவிட்டார்கள். கடந்த சில ஆண்டுகளில் இவர்களுக்காக ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் ஆங்கிலம் அல்லது மலாய் மொழியைத்தான் வீட்டில் பேசுகின்றனர். ஆறுமுகம், சுப்பிரமணியன், நமச்சிவாயம், அலர்மேலு, வள்ளியம்மை, தெய்வானை என்ற பெயர்கள் இவர்களுக்கு உண்டு. பெண்கள் வீட்டினுள் சீனரைப்போன்றும் வெளியே வரும்போது தமிழ்மக்களைப் போன்றும் உடை உடுத்துகின்றனர். இவ்வினத்தவரின் தொகை குறைந்துகொண்டே வருகிறது.

மலாக்காவில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சிலரும் இருக்கின்றனர். தாம் கட்டியுள்ள சன்னியாசிமலை ஆண்டவர் கோயிலுக்கு இவர்கள் என்னை அன்புடன் அழைத்துச் சென்றனர். இந்தக் கோயிலைச் சேர்ந்த நகைகளை எடுத்துக்கொள்ள ஜப்பானியப் போர்வீரர் வந்ததாகவும் கோயிலுக்குள் நுழைந்ததும் தம் வேலையை மறந்துவிட்டு அவர்கள் இறைவனை வழிபட்டுத் திரும்பிச் சென்றுவிட்டதாயும் கேள்விப்பட்டேன். மலாக்காவுக்கு அருகில் உள்ள ஓர் ஊர் **அலோர் காஜா** என்பது. இது மரக்கட்டையால் செய்யப்படும் பாதக்குறடுகளுக்குப் பெயர் பெற்ற இடம். கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? கட்டையெல்லாம் அலோர் காஜாக் கட்டை ஆகுமா? என்று அவைகளைப் பாராட்டுவதுண்டு.

## மூவார்

மலாக்காவுக்கு அருகிலுள்ள மற்றோர் ஊர் மூவார். சிங்கப்பூருக்கும் கே. எல். க்கும் சமதொலை வில் மூவார் இருக்கிறது. மூன்று ஆறுகள் சேரும் இடத்தில் இந்த ஊர் அமைந்திருக்கிறது. எனவே நெல்லூரைப் போலவே மூவாரும் நல்ல தமிழ்ச் சொல்; தமிழ்நாட்டுப் பொறியியற்கலை வல்லார் (Engineer) ஒருவர்தான் இப்பெயரைக் கொடுத்ததாக வும் கேள்விப்பட்டேன். தமிழ் நாகரிகத்தின் சிறப் புக்கும் செல்வாக்குக்கும் அழியாச்சின்னமாக உள்ள மூவாரில் 12.000 மக்கள் வாழ்கின்றனர். போரால் இந்த நகர் மிகவும் சேதப்பட்டது.

## வாழ்க்கை நிலை

ஆண்டு தோறும் ஏழு லட்சம்டன் ரப்பர் உற்பத்தி ஆகிறது. ரப்பர்த் தோட்டங்களில் இந்தியர் சீனர் பிரிட்டிஷார் அமெரிக்கர் ஆகியவருக் குச் சொந்தமானவையுள்ளன. அதாவது, மலாய்க் காரர்களைத்தவிர எல்லோருக்கும் அங்கே ரப்பர்த் தோட்டங்கள் இருக்கின்றன எனலாம். பிரிட்டிஷா ருக்குச் சொந்தமான தோட்டங்கள் தவிர, மற்றத் தோட்டங்களும் பெரும்பாலும் பிரிட்டிஷாரின் மேற் பார்வையில்தான் இருந்து வருகின்றன. மலேயா வின் மொத்த ஏற்றுமதியில் சரிபாதி ரப்பரேயாகும். ரப்பரின் விலை இப்போது மிகுதி. இவ்வளவு விலை 25 ஆண்டுகளாக இருந்ததில்லை. ரப்பரில் பெரும்பகுதி அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாவதால், மலேயா மூலம் பிரிட்டிஷ்பேரரசுக்கு ஏராளமானடாலர் செலாவணி

கிடைக்கிறது. ரப்பர் ஏற்றுமதியால் கிடைக்கும் வெளிநாட்டு நாணயத்தில் ஒரு பகுதிக்குப் பொருள்கள் இறக்குமதி ஆகின்றன. 60 லட்சம் மக்களே இருப்பதால், பொருள்கள் கிடைப்பதில் அங்கே எவ்விதமான சிரமமும் ஏற்படவில்லை.

மலேயாவின் தொன்மையான தொழில் சுரங்கங்களிலிருந்து ஈயம் எடுப்பதேயாம். இச்சுரங்கங்களில் மூன்றில் ஒன்று சீனரைச் சேர்ந்தவை. ஆஸ்திரேலியரும் இத்தொழிலில் பெரும் மூலதனம் போட்டிருக்கிறார்கள். இப்போது உலக ஈய உற்பத்தியில் பாதி (அதாவது 50,000டன்) மலேயாவில் கிடைக்கிறது. மலேயாவின் மற்ற ஏற்றுமதிகள் பாக்கு சாம்பிராணி சவ்வரிசி ஆகியவை. மட்டரகமான மண்ணெண்ணெய், வேறு சிலவித எண்ணெய்கள், தேங்காய் எண்ணெய், சிறு அளவு நிலக்கரி ஆகியவையும் மலேயாவில் கிடைக்கின்றன.

மலேயா மக்களின் முக்கிய உணவு அரிசியே. அவர்களுக்குத் தேவைப்படும் அரிசியில் பெரும்பகுதி இறக்குமதி செய்யப்படுகிறது. மரவள்ளிக் கிழங்கையும் பல பழங்களையும் அந்த மக்கள் உட்கொள்ளுகின்றனர். ஆஸ்திரேலியாவிலிருந்து மிகுதியான பழங்கள் வருகின்றன. மலேயாவில் கிடைக்கும் பழங்களுள் குறிப்பிடத்தக்கவை அன்னுசிப்பழமும் டோரியனும். டோரியன் என்பது முள் நிறைந்தது; இதன் மணம் நெடுந்தொலைவிலும் கமழும். இந்தப் பழம் கிடைக்கும் மாதங்களில் டோரியன் விழுவதைப் பார்க்கத் தோட்டங்களுக்குப் பலர் செல்லுவர். பழம் பழுத்ததும் டோரியனைப் பறிப்பதில்லை. தானே

விழும்வரை பொறுத்திருப்பது வழக்கம். டோரியன் இரவில்தான் மிகுதியாக விழுகிறதாம். டோரியன் பழம் யார் தலையிலாவது விழுந்து அவர் மாண்டால், அந்த மரம் பட்டுவிடும் என்பது மலாய்க்காரர்களின் நம்பிக்கை. டோரியனை மலேயா வாழ்மக்கள் எல்லா வேளைகளிலும் உட்கொள்ளுகின்றனர். டோரியன் வந்துவிட்டால் வங்குஸ்தான், ரம்பொட்டான் போன்ற பழங்களை மக்கள் விரும்பி உண்பதில்லை.

மலேயாவில் தொழிலாளர் நல்ல நிலையிலிருக்கின்றனர். ரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்வோருக்கு நாளொன்றுக்கு 6 வெள்ளி (ரூபாய் 9-8-0) சம்பளம் கிடைக்கிறது. ஏனைய தொழிலாளரும் நல்ல ஊதியம் பெறுகிறார்கள்.

மலேயாவைவிட உயர்ந்த வாழ்க்கைநிலை ஆசியாவில் வேறு எங்கும் இல்லை. 1941-ல் சுகாதாரம், கல்வி, போக்குவரவு வசதி, தபால் தந்தி வசதி ஆகியவற்றிலெல்லாம் ஆசியாவில் மலேயா முதலிடம் வகித்தது இன்று அங்கே நிலவும் அமைதிக்குறைவு மலேயாவின் முன்னேற்றத்தைத் தடை செய்திருக்கிறது. மலேயாவில் வறுமை இல்லை. அநேகமாய் எல்லோருக்கும் வேலை உண்டு. சிற்றூர்களிலும் உயர்நிலைப் பள்ளிகளும் மருத்துவச் சாலைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. சுலபமான வாழ்வு, வேறுபட்ட ஜனத்தொகை, உயர்கல்வியின்மை இவை மலேயாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவாக இருக்கின்றன.

சுகாதாரக் குழுக்கள் (சானிட்டரி போர்டுகள்) மக்களின் உடல்நலம் கெடாதபடி ஆவன செய்

கின்றன. கிணறுகள் அனைத்துக்கும் எண் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிணற்று நீரில் இரசாயனத்தூள் போடப்படுவதாயும், ஒவ்வொரு கிணற்றைச் சுற்றிலும் வடிகால் வெட்டி கழிவுநீரால் நோய் பரவாதபடி தடுக்க டி. டி. ட்டி. போடப்படுவதாகவும் நான் கேள்விப்பட்டேன்.

**மலாய்க்காரர்**

பெடரேசனின் ஜனத்தொகை 50லட்சம். இதில் சரிபாதிப்பேர் மலாய்க்காரர், 19 லட்சம் பேர் சீனர், 5 லட்சம் பேர் இந்தியர். ஒரு லட்சம் மலாய்க்காரர் மட்டுமே சிங்கப்பூரில் இருக்கின்றனர். வாகனங்களை இயக்குவது, தோட்டவேலை, மீன்பிடிப்பது ஆகியவற்றிலேயே மலாய்க்காரர் மிகுதியாக ஈடுபடுவர். கிராணி புசார் (அதாவது ஹெட் கிளார்க்) பதவியில் மலாய்க்காரர் பலர் உள்ளனர். மேற்கூறிய வேலைகளில்லாத மலாய்க்காரர் தம்பியாக இருப்பர். தம்பி என்பது "ஆபீஸ் பியூன்" வேலைபோன்றது. மூளையைப் பயன்படுத்தும் வேலையை இவர்கள் விரும்புவதில்லை. துன்பத்தை இவர்கள் பொருட்படுத்துவதில்லை; உரத்த குரலில் இவர்கள் பேசுவதில்லை. இவர்கள் சுகவாழ்வில் விருப்புடையவர்கள்; தற்பெருமைப்படுபவர்கள்; பிறர்மீது பொறாமைப்படாதவர்கள்; கவலையில்லாதவர்கள். இவர்களுடைய மனப்பான்மையை டிடாஅப்பா (தீராப்பா) என்பதிலிருந்து அறியலாம். இச்சொற்றொடருக்கு "அதைப்பற்றிப் பரவாயில்லை" என்று பொருள்.

மலாய்க்காரருள் ஒரு சிலர் மட்டுமே நகரங்களில் வாழ்கின்றனர். மற்றையோர் காம்போங் என்னும்

கிராமங்களில் அத்தாப்பு ஓலையால் செய்யப்பட்ட வீடுகளில் குடியிருக்கின்றனர். இவர்கள் மஞ்சள் நிறத்தவர், குட்டையானவர்கள். ஓரிருவர் நீங்கலாக எல்லா மலாய்க்காரரும் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 'பர்தா' முறையைப் பின்பற்றுவதில்லை. மலாய்க்காரருக்கு விருப்ப மானவை: ஹிந்திப் பாட்டு, பூனே, பிற்பகலில் உறங்கு வது, பகட்டான ஆடை அணிவது, சுல்தான்கள்.

மலாய்க்காரரிடம் தேசீய உணர்ச்சி வலுக்க வில்லை. இவர்கள் இன்னும் பட்டாளத்தில் புகவில்லை. சீனரோடோ இந்தியரோடோ வாழ்க்கைப் போட்டி யில் வெற்றி பெறுவதென்பது இவர்களால் இயலாது. கிராமங்களில்கூட 11 கடைகள் இருந்தால், 10 கடைகள் சீனராலும் 11 ஆவது கடை இந்தியராலும் நடத்தப்படும். ஆரஞ்சுப் பழத்தைக்கூடத் தம் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து விற்றுப் பிழைக் கும் சீனருக்கும் உல்லாச வாழ்க்கையில் ஈடுபடும் மலாய்க்காரருக்கும் பொதுவான பண்புகள் எங்ஙனம் இருக்க முடியும்? மேலும், சீனருள் ஒற்றுமை மிகுதி. அவர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுப்பதில்லை. ஒரு சீனரிடம் மற்றொரு சீனரைப்பற்றி ஏதாவது கேட்டால் 'தெரியாது' என்று சொல்லி விடுவார்கள்.

மலேயாவுக்குச் சுதந்திரம் கிடைத்தால் சீன ஆட்சி ஏற்படும் என்றும், அதைவிடப் பிரிட்டிஷ் ஆட்சி மேல் என்றும் மலாய்க்காரர் நினைக்கிறார்கள். எக்காரணத்தாலாவது,

பிரிட்டிஷார் மலேயாவைவிட்டு வெளியேறினால், மலேயாவை இந்தோனேசியாவுடன் ஐக்கியப்படுத்திவிட வேண்டுமென்றும் மலாய்க்காரர்கள் விரும்புகிறார்கள். இந்தோனேசியருள் 100க்கு 90 பேர் முஸ்லீம்கள்; மலாய்க்காரர் அனைவரும் முஸ்லீம்கள். போர்னியோ, பிலிப்பைன்ஸ் மக்களைப் போலவே மலாய்க்காரரும் இந்தோனேசியரும் போலினீசிய இனத்தின் வழித் தோன்றல்கள். இப்போது கலந்துவிட்ட டச்சு வார்த்தைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால் மலாய்மொழியைப் போலவே ஜாவா மொழியிலும் வடசொற்கள் மிகுதியாக உள்ளன. எனவே மத, இன, மொழி ஒற்றுமைகளால் இந்தோனேசியருடன் இரண்டறக் கலந்துவிடவேண்டுமென்ற கொள்கை மலாய்க்காரரிடம் உண்டு.

## மலாய் மொழி

அராபி மொழியைப்போல, மலாய் மொழியிலும் எழுத்துக்கள் வலதுபக்கமிருந்து இடதுபக்கம் எழுதப்படுகின்றன. இப்போது பெரும்பாலும் இம்மொழி ஆங்கில எழுத்துக்களில் (**Roman Script**) எழுதப்பட்டுவருகிறது. மலாய் மொழி கற்றுக் கொள்வதற்கு எளிது. எனவே, மலாய் நாட்டின் பொதுமொழியாக அது விளங்கி வருகிறது. ஒரு சீனர் மற்றொரு சீனரோடு மலாய்மொழியில்தான் பேசுவது வழக்கம். ஒரு தமிழர் ஒரு சீக்கியரோடு பேசுவதும் மலாயில்தான். மலாய் தமிழ் மொழியோடு உறவு கொண்டது. கப்பல், ரோதை, ஆச்சி, லட்சம், மங்கு,

சம்பான், ராஜா, மந்திரி, கழுதை, படகு, ராஜஸ்திரீ போன்ற சொற்கள் மலாய் மொழியிலும் உள்ளன.

**சீனர்**

மலேயா சீனுவுக்கு அருகில் உள்ள நாடு. இருநாடுகளுக்குமிடையே கப்பல் போக்குவரத்து மிகுதியாக இருக்கிறது. விமானத்தில் சீனுவிலிருந்து புறப்பட்டால், 10-மணி நேரத்துக்குள் மலேயாவை அடைந்துவிடலாம். தவிரவும், மலேயா போதிய ஜனத்தொகை இல்லாத நாடு, வளம் மிகுந்தது. அருகிலுள்ள ஏழ்மையான நாடுகளில் வாழும் மக்களைத் தன்னகத்தே இழுக்கும் சக்தி அதனிடம் உண்டு. இக்காரணங்களால், சீனர் மலேயாவில் மிகுதியாக இருப்பது தவிர்க்கமுடியாதது ஆகும். ஜனத்தொகை வளர்ச்சி சீனரிடையே விரைவாக நிகழுவதுண்டு. சில ஆண்டுகளில் அவர்கள் பெரும் பான்மையோராகி விடுவது எளிது. இதுதான் இன்றைய மலேயாவின் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. மலேயா சீனுவாக ஆகிவிடுவதைத் தடுக்கப் பல முயற்சிகள் நடந்து வருகின்றன. இவற்றுள் முதன்மையானது, புதிதாகச் சீனர் குடியேறுவது தடை செய்யப்பட்டிருப்பதாகும். ஆனல், கள்ளத்தனமாகக் குடியேற்றம் சிறு அளவில் நடந்து கொண்டு வருவதாகத் தெரிகிறது.

29 லட்சம் சீனரில், 7 லட்சத்துக்கு மேற்பட்டவர் சிங்கப்பூரில் வாழ்வதால், மலேயாப் பெடரேசனில் அவர்கள் சிறுபான்மையோராகவே இருப்பார்கள்.

மலேயாவாழ் சீனருள் பல சாரார் உள்ளனர். இவர்களை இரு பொதுப் பிரிவுகளாகப் பாகுபாடு செய்யலாம். ஒன்று, கடந்த சில ஆண்டுகளில் சீனாவிலிருந்து வந்தவர்கள்; மற்றொன்று மலேயாவில் பிறந்து வளர்ந்த சீனர் (ஸ்ட்ரெயிட்ஸ்பார்ன் சைனீஸ்). இவர்கள் சீனாவைப் பார்த்ததில்லை. சீன மொழியும் இவர் அறியார்.

சிங்கப்பூரில் ஒரு திரிஷாவிலோ டாக்சிகாரிலோ சென்றுகொண்டிருக்கும்போது, மிகுதியான ஜன நெருக்கமும், கூடுதலான அசுத்தமும், குறுகிய தெருக்களும் ஓரிடத்திலேயே காணும்போது, அது தான் சைனா டவுன் என்று முடிவு செய்துவிடலாம். இங்கே பலவிதமான உணவுச் சாலைகள் உண்டு. மோட்டார்கார் குழுக்கள் நடத்துவதில் சீக்கியர் சிறந்து விளங்குவது போலவே, சிற்றுண்டிச்சாலைகள் நடத்துவதில் சீனர் திறமையுடன் விளங்குகின்றனர். மலேயா நாட்டின் பெருஞ்செல்வர் சிலர் சீனரே என்பதை முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம். ஏனைய சீனரும் பிற இனத்தவரைவிட நல்ல பொருளாதார நிலையில் இருக்கின்றனர். சீனர் அனைவரும் காய்கறித்தோட்டம் அமைப்பதில் வல்லுநராக இருக்கின்றனர். வியாபாரிகளாகவும், பல் வைத்தியர்களாகவும், அரசியலாரின் ஊழியராகவும், தொழிலாளராகவும் வழக்கறிஞராகவும் சீனர் பல்லாயிரவர் வாழ்க்கை நடத்துகின்றனர். திரிஷா இயக்குவதும் சீனருக்கே உரிய தொழில்போல் தென்பட்டது. மலேயா நாடு முழுவதும் கித்தாக்கடைகளைச் சீனரே நடத்துகின்றனர். கித்தாக்கடை என்பது

ரப்பரை வாங்கி விற்கும் தரகுமண்டி போன்றது. மலேயாவின் வாணிபத்தில் சீனரின் பங்கு என்ன என்பதை அவர்கள் பயன்படுத்தும் நிறுத்தலளவை மட்டுமே மலேயாவில் வழங்கி வருவதிலிருந்து அறியலாம். விலைவாசிகள் பீக்கல் கணக்கில்தான் சொல்லப்படுகின்றன. 100 கட்டி கொண்டது ஒரு பீக்கல், அதாவது 133 பவுண்டுக்குச் சமமானது.

சீனரின் பெரிய பிரச்சினை எப்படித் தம் குழந்தைகளுக்கு உணவு அளிப்பது என்பதே. ஒரு டஜன் குழந்தைகளிருப்பது அவர்கள் குடும்பங்களில் சாதாரணக் காட்சி. பெற்றோர்கள் குழந்தைகளை எண் வரிசைப்படி அழைப்பதும் உண்டு.

சீனரின் புத்தாண்டு விழாவன்று நான் சிங்கப்பூரில் இருந்தேன். அன்று அவர்கள் தம் உறவினரையும் நண்பர்களையும் காணச் சென்றனர். பழைய கணக்குகளைத் தீர்த்தனர். சிவப்பை அவர்கள் மங்கள நிறமாகக் கருதுவதால், சிவப்புப் பூக்களை வாங்கினர். பெண்கள் தலை அலங்காரக் கடைகளுக்குச் சென்று தம்மீது பல பூச்சுக்களைத் தடவிக் கொண்டனர். பல நாட்களுக்கு முன்பே பல் இழந்தவர்கள் அன்றுதான் தங்கப்பல் கட்டிக்கொண்டனர்.

## இந்தியர்

பெடரேசனில் 5 லட்சம் இந்தியரும் சிங்கப்பூரில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட இந்தியரும் இருக்கின்றனர். 1941ல் 8 லட்சத்துக்கு மேற்பட்டவர் இருந்த

னர். இரண்டு லட்சம் பேர் தோட்டத்தொழிலாளர். மேலும் 4 லட்சம் பேர் பலதரப்பட்ட தொழில்களில் இருக்கின்றனர். இவர்கள் செய்யாத தொழில் அல்லது பார்க்காத வேலை இல்லை எனலாம். இந்திய அரசியலார் வெளியிட்ட கணக்குப்படி இப்போதிருக்கும் இந்தியருள் 20,000 பேரே வட இந்தியர். வடஇந்தியர் என அரசியலார் தம் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதில், சில நூறு பேர் தவிர எல்லோரும் சீக்கியர்கள். இந்தியாவுக்கு வெளியே சீக்கியருடைய மதஸ்தாபனம் சிங்கப்பூரில் மட்டுந்தான் இருக்கிறது. சீக்கிய மதத்தைப்பற்றிப் புத்தகங்களும் பத்திரிகைகளும் இது வெளியிடுகிறது. ஏழை மாணவருக்கு உதவிச் சம்பளம் தருகிறது. சீக்கியர் மலேயாவில் மின்சார லிப்ட் இயக்குபவராகவும், போலீஸ்காரராகவும், காவற்காரராகவும் பணியாற்றி வருகின்றனர். பெருஞ் செல்வர் பலரும் சீக்கியருள் உள்ளனர்.

U8·1
N50
LIBRARY
No. 108090